*நிறம்*



*அப்பாவைப் பெற்ற தாத்தா நல்ல பொன் நிறம்.ஆச்சி கருப்பு. அதனால் குடும்பத்தில் பாதி பேர் நல்ல நிறமாகவும்,மீதி பேர் சுத்த கருப்பாகவும் அமைந்தனர். நாங்கள் ஆச்சியின் வழி. ஐம்பதுகளில் நெல்லை பிரதர்ஸ் என்ற பெயரில் கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்து வந்த பெரியப்பாக்களில் ஒருவர் கருப்பு,மற்றவர் சிவப்பு. இந்த கலவையை எங்கள் தலைமுறையிலும் காணலாம். தற்போது இசை ஆசிரியனாக இருக்கும் எனது ஒன்று விட்ட தம்பி கோமதிநாயகத்துக்கு தெரிந்த ஒரு பெரிய மனிதரை சமீபத்தில் சந்தித்தேன். பேச்சுவாக்கில் அவனுடைய அண்ணன் நான் என்று சொன்னதை அவர் நம்பவுமில்லை. மேற்கொண்டு என்னிடம் பேசுவதை விரும்பவுமில்லை. உலகநாயகன் கலரில் இருக்கும்* ***அவன் எங்கே, தேமுதிக தலைவர் கலரில் இருக்கும் நான் எங்கே. என்னைப் போல ஓர் அண்டப் புளுகன் இந்த உலகத்திலேயே இருக்க முடியாது என்பதை அவர் வாயைத் திறந்து சொல்லவில்லையென்றாலும் அவர் என்னை பார்த்த ஓர் அற்பப்பார்வையே எனக்கு உணர்த்தியது.***

*பொதுவாகவே மனிதர்களின் நிறம் அவர்களின் திருமணத்தின் போதுதான் அலசப்படும். மாப்பிள்ளையோ,பெண்ணோ என்ன நிறம் என்று கேட்காதவர்களே இல்லை எனலாம். அவற்றை பொருட்படுத்தாதவர்கள் கூட இந்த கேள்வியை கேட்கத் தவறுவதில்லை. நண்பன் ஒருவனின் மனைவி கருப்பு. திருமணத்தன்றே அந்த பெண்ணின் முகத்தில் மகிழ்ச்சியை காணமுடியவில்லை. தன் கணவனின் நிறத்துக்கு முன் தான் ரொம்பவும் கருப்பாக இருக்கிறோமே, நம்மை அவனுக்கு பிடிக்குமா என்ற கவலை அவளுக்கு. இதைப் புரிந்து கொண்ட நண்பன் முதலிரவிலேயே அவளின் சந்தேகத்தை களைந்திருக்கிறான். எனக்கு நீதான் முக்கியம். உன் நிறம் முக்கியமில்லை என்று. பத்தாண்டுகள் கழித்து அந்த நண்பனைப் பார்க்க சில மாதங்களுக்கு முன்பு அவன் வீட்டுக்கு போனேன். அவன் மனைவியின் நடை உடை பாவனையில் தன்னம்பிக்கையுடன் கூடிய கம்பீரம் தெரிந்தது. நண்பனின் நிலைமை எல்லா கணவன்மார்களின் நிலைமை போலத்தான் இருந்தது. சாப்பிட தனித்தட்டு ஒதுக்கி வாசலில் கட்டிப் போட்டிருந்தாள்.*

*மீனாட்சிசுந்தரத்துக்கும் எனக்கும் ஒரு வயதுதான் வித்தியாசம் என்றாலும் நான் அவனுக்கு சித்தப்பா முறை. மீனாட்சியும் என்னைப் போலவே நல்ல நிறம் (கருப்பும் நிறம்தானே!). யாராவது எங்களை கருப்பு என்று சொன்னால் மீனாட்சி கோபப்படுவான். 'சித்தப்பா, நாம் கருப்பு என்று யார் சொன்னது. நாமெல்லாம் க்ரே' என்பான்.* ***யாரையாவது அடையாளம் சொல்லும்போதும் 'அவாளும் நம்மள மாதிரி கிரேக்கர்தான்' என்று சொல்வான்.*** *ஒரு தீபாவளிக்கு வெடி வெடித்து மீனாட்சியின் முகமெல்லாம் காயப்பட்டுவிட்டது. அதனால் மேலும் கருப்பானான். அதையே ஒரு மாபெரும் காரணமாக பிடித்துக் கொண்டு அந்த விபத்தினால்தான் தன் முகம் கருப்பாகிவிட்டது* ***என்றும் அதற்கு முன்னால் தான் அசப்பில் அரவிந்தசாமி போலவே இருந்ததாகவும் நான் இல்லாத சமயம் பார்த்து மற்றவரிடம் சொல்வான்.***

*வெண்ணீறு துலக்கமாக தெரிவதற்கென்றே படைக்கப்பட்ட மேனி என்று என் எழில்மிகு மேனியைப் பற்றி புகழ்ந்து எழுதிய ஜெயமோகன், தன் நண்பர் சண்முகசுந்தரத்தை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். சண்முகசுந்தரம் வாயைத் திறந்து என்னிடம் பேசிய முதல் வரி. 'நீங்க இவ்வளவு கருப்பாக இருப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கல'.குரலில் ஒரு அடக்க முடியாத மகிழ்ச்சி தெரிந்தது.* ***காரணம் அவரும் ஒரு கிரேக்கர். முதல் சந்திப்பு என்பதால் நானும் என் வேலையைக் காட்டாமல் அடக்கமாகச் சிரித்துக் கொண்டே 'ஆமா தொடர்ந்து வெயிலில் அலைந்தேன்' என்றேன்.***

*எங்கள் குடும்பங்களில் திருமணத்துக்கு முன் பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளும் வழக்கம் இல்லை. என் மனைவியைப் பார்க்க (எனது தாயார் காலமாகிவிட்டதால்) என் சித்தியும் சித்தப்பாவும் போனார்கள். பெண்ணின் நிறத்தை பார்த்து சித்தி கொஞ்சம் ஆடித்தான் போயிருக்கிறாள். அந்த சமயம் பார்த்து என் மாமியார் அவளிடம் 'பையன் என்ன நிறம்' என்று கேட்க, தட்டுத் தடுமாறி 'புது நிறம்' என்று சொல்லி சமாளித்து அந்தப் பழமொழியை நிரூபித்திருக்கிறாள். இன்றைக்கும் என் மனைவி எங்கள் மகனிடம் இதை சொல்லிச் சிரிப்பாள்.*

*மலம்புழா ஜவஹர் நவோதயா வித்யாலயாவின் ப்ரின்ஸிபாலாக என் மாமனார் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் என் மனைவியின் பிரசவ நேரம். பாலக்காட்டில் ஒரு மருத்துவமனையில் என் மகன் பிறந்தான். நான் அங்கிருந்து எல்லா உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தொலைபேசி மூலம் குழந்தை பிறந்த விஷயத்தைச் சொன்னேன். யாருமே என்னிடம் என்ன குழந்தை என்று கேட்பதில் ஆர்வம் காட்டவில்லை. சொல்லிவைத்த மாதிரி எல்லோரும் குழந்தை என்ன நிறம் என்றே கேட்டனர். என் உயிர்த் தோழன் குஞ்சு ராஸ்கலும் இதற்கு விதிவிலக்கல்ல. என் வாழ்க்கையிலேயே நான் கருப்பாக இருப்பதை உணர்ந்தது அன்றுதான். **அந்தக் கோபத்தில் என் மகனுக்கு நான் வைத்த பெயர் 'நிறன்'.***

*கவிஞரும், 'ரசனை' பத்திரிகை ஆசிரியருமான மரபின் மைந்தன் முத்தையா, என்னை இன்றைக்குப் பார்த்தாலும் வாங்க புது நிறக்காரரே என்று கேலி செய்வார். **'வார்த்தை' பத்திரிக்கையின் இணையாசிரியர் பி.கே.சிவகுமாரின் கல்லூரித் தோழரான முத்தையாவுக்கும் எனக்கும் ஒரே வயதுதான் என்றாலும் நான் அவரை அண்ணன் என்றே அழைப்பேன். நான் அவரை அண்ணன் என்று அழைப்பதற்கும் என் மனைவி அவரை தன் ஜென்ம விரோதியாகக் கருதுவதற்கும் ஒரு பொதுக் காரணம் உள்ளது. அவர்தான் என் திருமணத்தை நடத்தி வைத்தவர்.***

***நாத தனுமனிஷம்***

*'மஞ்சரில விளாத்திகுளம் சாமியப் பத்தி வீரகேரளம்புதூர் விநாயகம் பிள்ளைன்னு ஒருத்தர் எழுதியிருக்காரு. படிச்சு பாருங்க. நல்லா இருக்கு'. வேறு ஏதோ பேசிக் கொண்டிருக்கும் போது தற்செயலாக இதை சொன்னார் நண்பர் ஜெயமோகன். 'மோகன், அது வேற யாருமில்ல. எங்க பெரியப்பா' என்றேன். விளாத்திகுளம் சாமியைப் பற்றி மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ மனிதர்களைப் பற்றி, எவ்வளவோ விஷயங்கள் பற்றி விநாயகத்துப் பெரியப்பா சொல்லி நான் தெரிந்திருக்கிறேன்.*

*விநாயகத்துப் பெரியப்பா ஒன்றும் எனக்கு ரத்த உறவு இல்லை. ஆனாலும் பெரியப்பா. இப்படி பல உறவுகள் எனக்கு உண்டு. ஐம்பதுகளில் நெல்லை சகோதரர்கள் என்றழைக்கப்பட்டு கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்து கொண்டிருந்த எனது பெரியப்பாக்களோடு மிருதங்கம் வாசிப்பவராக அறிமுகமாகி எங்கள் குடும்பத்துக்குள் வந்தவர்தான் விநாயகத்துப் பெரியப்பா. அதன் பின் தாத்தாவுக்கும், ஆச்சிக்கும் மற்றொரு மகனாக ஆகியிருக்கிறார். எனது சொந்த பெரியப்பாக்களை விட நான் அதிகமாக பெரியப்பா என்றழைத்தது விநாயகத்துப் பெரியப்பாவைத்தான். எப்போதுமே வெள்ளை அரைக்கைச் சட்டையும், வேட்டியும்தான் உடை. மாநிறம். சற்று பருமனான உடல்வாகு. மீசையில்லாத முகத்தில் சிரிக்கும் போது சற்றுத் தூக்கலான முன்பல் இரண்டும் பார்ப்பதற்கு அழகாகவே இருக்கும்.*

*ரசிகமணி டி.கே.சி.யுடன் நெருங்கிப் பழகிய பெரியப்பாவைப் போன்ற ஒரு கலா ரசிகரை என் வாழ்க்கையில் நான் பார்த்ததில்லை. புகழ் பெற்ற தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். அந்த வகையில் தமிழறிஞர்கள் கி.வா.ஜ, திருக்குறள் முனுசாமி போன்றோரின் நண்பர். எந்த ஒரு சூழலுக்கும் ஒரு குறள் சொல்லுவார். 'இதுக்கும் ஒரு கொறள் வச்சிருப்பேளே' என்று கேட்டால், 'என்ன செய்யச் சொல்லுதெ? அந்த பேதீல போவான் எல்லா எளவுக்கும்லா எளுதி வச்சிருக்கான்' என்பார். மிருதங்கம், ஹார்மோனியம் போக தானே உருவாக்கிய ஒற்றைக் கம்பி வாத்தியம் ஒன்றும் வாசிப்பார். அந்த வாத்தியத்தை பத்திருபது நிமிடங்களுக்குள் உருவாக்கி வாசிப்பதைப் பார்த்து வியந்திருக்கிறேன். ஒற்றைத் தந்தியில் அத்தனை ஸ்வரங்களையும் கொண்டு வந்து இசைப்பது அவ்வளவு எளிதில்லை.*

*திருநெல்வேலிக்கு பெரியப்பா வந்தால் குறைந்தது நான்கு நாட்களாவது எங்கள் வீட்டில் தங்குவார். அந்த நான்கு நாட்களும் வீடே நிறம் மாறிவிடும். காலையில் கொஞ்சம் தாமதமாகவே குளிக்கச் செல்வார் பெரியப்பா. அரைத்தூக்கத்தில் இருக்கும் என்னை ஹார்மோனியமோ, மிருதங்கமோ வந்து வருடி எழுப்பும். ஹார்மோனியம் வாசிக்கும் போது பெரியப்பாவிடம் ஒரு கனிவு தெரியும். சித்தரஞ்சனி ராகத்தில் 'நாத தனுமனிஷம்' கீர்த்தனைதான் பெரியப்பா அடிக்கடி வாசிப்பது. சில சமயங்களில் இருமலோடு பாடுவதும் உண்டு. சித்தரஞ்சனி ஒரு சுவாரஸியமான ராகம். அதில் மேல் ஷட்ஜமத்துக்கு மேலே உள்ள ஸ்வரங்களுக்கு வேலை இல்லை. அந்தச் சின்ன ஏரியாவுக்குள் பெரியப்பா சுமார் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக வாசித்துக் கொண்டிருப்பார். தூக்கம் கலையாத கண்களுடன் அவரருகில் சென்று உட்காருவேன். ஹார்மோனியத்திலிருந்து கையை எடுக்காமலேயே, அந்த சமயத்தில் தான் வாசித்துக் கொண்டிருக்கும் பிடிமானத்தை கண்களால் எனக்குக் காட்டிச் சிரிப்பார்.*



*பெரியப்பாவின் ஹார்மோனிய வாசிப்புக்கு நான் பலமுறை மிருதங்கம் வாசித்திருக்கிறேன். அவரது வேகத்துக்கும், லயிப்புக்கும் என்னால் ஈடு கொடுக்க முடிந்ததே இல்லை. கொஞ்ச நேரத்திலேயே நைஸாக மிருதங்கத்தை பெரியப்பாவின் பக்கம் தள்ளிவிட்டு நான் ஹார்மோனியத்தை எடுத்துக் கொள்வேன். மிருதங்கம் கையில் வந்தவுடன் பெரியப்பா ஆளே மாறிவிடுவார். அசுர பலம் வந்து வாசிப்பார். அவர் வாசிப்பில் மிருதங்கம் பேசும். அழும். சிரிக்கும். அதற்குப் பின் மிருதங்கத்திலிருந்து பெரியப்பா வெளியே வர ரொம்ப நேரம் ஆகும். 'சாமியாடிட்டேளே பெரிப்பா' என்பேன். 'வாசிச்சா அப்படித்தான்யா வாசிக்கணும். இல்லென்னா அதத் தொடவே கூடாது' என்பார். அவரைப் போலவே என்னையும் அந்த இரண்டு வாத்தியங்களிலும் தயார் செய்து விடவேண்டும் என்று பெரியப்பா விரும்பினார். நான் தான் அதற்கு சரியாக ஒத்துழைக்கவில்லை. இதில் என் மேல் அவருக்கு எப்பொழுதும் ஒரு தீராத வருத்தம் இருந்தது. 'எல்லாருக்கும் இது வராது. ஒனக்கு வருது. ஆனா வாசிக்க ஒனக்கு வலிக்கி'. பாளயங்கோட்டையில் ஒரு கச்சேரியில் நான் மிருதங்கம் வாசித்து விட்டு திரும்பும் போது உடன் வந்திருந்த பெரியப்பா சலிப்புடன் இதை சொன்னார்.*

*பெங்களூர் சுந்தரம் அவர்களின் 'ஆனந்த ரகஸ்யம்' புத்தகத்தை வைத்துக் கொண்டு நானாக சில ஆசனங்களை பயின்று கொண்டிருந்தேன். 'பொஸ்தகத்த பாத்துல்லாம் ஆசனம் போடக் கூடாதுய்யா' என்று சொல்லி, முறையாக எனக்கு யோகாசனம் கற்றுக் கொடுத்த ஆசான் அவர். எனக்கு தெரிந்து அப்போதே அவர் எழுபதை நெருங்கியிருந்தார். ஆனால் அந்த வயதிலும் சிரசாசனம் உட்பட கடினமான ஆசனங்களைப் போட்டு காண்பித்து என்னை அசரடித்தார். இத்தனைக்கும் வாதம் காரணமாக அவரது இரண்டு கால்களும் சற்று வளைந்திருக்கும். அந்தக் கால்களை வைத்துக் கொண்டு அவர் நடக்கும் தூரம் நம்ப முடியாதது. பெரியப்பாவுக்கு மாலையிலும் ஒரு குளியல் உண்டு. குளித்து முடித்த பின் தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து நடுவகிடெடுத்து தலை வாருவார். மெல்ல நடக்க ஆரம்பிப்பார். இரண்டு மணிநேரம் கழித்து நெற்றி நிறைய திருநீறுடன் வீடு திரும்புவார். நெல்லையப்பர் கோயிலைச் சுற்றி வந்திருக்கும் களைப்பு அவர் உட்காரும் போது நமக்கு தெரியும்.*

*'நானேதானெ இங்கெ வந்துக்கிட்டிருக்கென். நீ ஒரு நாளைக்கு வீரகேரளம்புதூர் வாய்யா'. ரொம்ப நாட்கள் சொல்லிக் கொண்டிருந்த பெரியப்பாவுக்காக ஒரு மாலையில் அங்கு சென்றேன். சந்தோஷத்தில் பெரியப்பாவின் வீட்டிலுள்ள அனைவரும் உபசரித்தார்கள். தடபுடலான இரவு உணவுக்குப் பின் சுகமான காற்றடிக்க இருவரும் சிறிது தூரம் நடந்தோம். ஊரே அடங்கிய அமைதியான பொழுதில் வீட்டு வாசலறையில் வந்து உட்கார்ந்தோம். பெரியப்பா 'அந்த பொட்டிய எடு' என்றார். பெரியம்மை ஒரு பழைய அழுக்குப் பெட்டியை எடுத்து கொடுக்க, அதை தன் பக்கம் நகர்த்தி உள்ளுக்குள்ளிருந்து நிறைய கேஸட்டுக்களை எடுத்தார். எல்லாமே பழையவை. ஒரு மோனோ டேப்ரிக்கார்டர் அருகில் இருந்தது. 'எய்யா, இத கொஞ்சம் கேளேன்'. கரகரவென கேஸட் ஓடத் துவங்கியது. ஆல் இண்டியா ரேடியோவின் ஒலிபரப்பை பதிவு செய்து வைத்திருக்கிறார் என்பது புரிந்தது. மயக்கும் குழலிசை. 'என்ன ராகம் தெரியுதா?'. சற்று நேரம் யோசித்து விட்டு மால்கௌன்ஸ் மாதிரி இருக்கு' என்றேன். 'அதேதான். எப்படி வாசிச்சிருக்கான் பாத்தியா?' பன்னாலால் கோஷ் என்னும் மேதையை அந்தப் பழைய கரகர ஒலிபரப்பில் அன்றைக்குத்தான் முதன்முறையாகக் கேட்டேன். 'பேஸ் வாசிக்கறதுக்காக தான் விரல அறுத்து ஆபரேஷன் செஞ்சுக்கிட்ட சண்டாளன்யா இவன்'. இந்த மாதிரி ஏதாவது சொல்லும் போது உணர்ச்சி மிகுதியில் பெரியப்பாவின் குரல் உடையும். அப்போது அவர் அழுகிறாரோ என்று நமக்கு சந்தேகம் வரும். பன்னாலால் கோஷைத் தொடர்ந்து படே குலாம் அலிகானும் அன்றைய எங்களின் இரவை நிறைத்தார்.*

*ஜிம் ரீவ்ஸின்(Jim reeves) குரல் விநாயகத்துப் பெரியப்பாவுக்குப் பிடித்தமான ஒன்று. 'இந்த ரீவ்ஸ் பய அடியோஸ் அமிகோஸ்னு பாடும் போது நம்ம தோள்ல கையப் போட்டுக்கிட்டு காதுக்குள்ள வந்து பாடுற மாதிரி இருக்குல்லா' என்பார். லாரல் ஹார்டி இரட்டையர்களும் அவருக்கு பிடித்தமானவர்கள். சில வசனங்களை மீண்டும் மீண்டும் சொல்லி ஒரு குழந்தை போல ரசித்துச் சிரிப்பார். வீரகேரளம்புதூர் என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் இருந்து கொண்டு இவர் எப்படி எல்லாவற்றையும் ரசிக்கிறார் என்று ஆச்சரியமாகவே இருக்கும். நான்கைந்து ஆண்டுகளாகச் சந்திக்கும் வாய்ப்பில்லாமல் இருந்தேன்.*

*அவ்வப்போது போஸ்ட் கார்டில் நுணுக்கி எழுதி அனுப்புவார். அதில் ஒரு குறுங்கவிதையோ, சங்கீத சமாச்சாரமோ, குற்றாலச் சாரல் பற்றிய செய்தியோ இருக்கும். அந்தச் சின்ன அஞ்சலட்டைக்குள் அதிக பட்சம் எவ்வளவு எழுத முடியுமோ, அவ்வளவு எழுதியிருப்பார். 'முதுமை காரணமாக இப்போதெல்லாம் எங்குமே செல்ல முடிவதில்லை. வீரகேரளம்புதூரிலேயே இருக்கிறேன். நீ இங்கு வா. ஆசி' என்றெழுதிய ஒரு கார்டு சென்ற ஆண்டில் வந்திருந்தது. ஒரு சில வாரங்களில் வீரகேரளம்புதூர் செல்லும் வாய்ப்பு வந்தது. கொஞ்சம் இளைத்திருந்த பெரியப்பா என்னைக் கண்டது எழுந்திருக்க முடியாமல் எழுந்து வந்து கட்டியணைத்து கன்னங்களில் மாறி மாறி முத்தினார்.*

*'மிருதங்கத்த எப்பவோ கைகளுவிட்டெ. ஆர்மோனியமாது வாசிக்கியாய்யா' என்று கேட்டார். 'அப்பப்பொ வாசிக்கென். அன்னைக்குக் கூட நாத தனுமனிஷம் வாசிச்சென்' என்றேன். 'நானும் அன்னைக்கு டெலிவிஷன்ல சின்னப்பா காதல் கனிரசமே பாடும் போது ஒன்னத்தான் நெனச்சுக்கிட்டென்' என்றார். சில மாதங்களுக்கு முன் என் தம்பி என்னிடம் இனி நாம் வீரகேரளம்புதூருக்குச் செல்லும் அவசியமில்லை என்ற அர்த்தத்தில் விநாயகத்துப் பெரியப்பாவைப் பற்றிய சேதி சொன்னான். அதுவே அவனுக்கு தாமதமாக வந்த செய்தி. அன்றைக்கு முழுக்க என் மனதில் நாததனுமனிஷம் ஒலித்துக் கொண்டே இருந்தது.*

---

***வராது வந்த நாயகன்***

*''சினிமாவில் இருப்பவர்கள் அனைவருமே வேறோர் கிரகத்திலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கென்று ஒரு தனியுலகம் உண்டு. கண்டிப்பாக அவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அதற்கு இந்தப் பக்கமென்றால் மதுரைக்காரர்களை அனுமதிப்பார்கள். திருநெல்வேலியைச் சேர்ந்தவர்களெல்லாம் அந்த மாய உலகத்துக்குள் நுழையவே முடியாது.'' இப்படியெல்லாம் நெல்லைக்காரர்கள் உறுதியாக நம்பிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் ஒரு படம் வந்தது. திருநெல்வேலி முழுவதும் ஒரே பரபரப்பு. அவர்கள் குளித்த அதே தாமிரபரணியில் குளித்து, படித்த அதே சாஃப்டர் மேல்நிலைப் பள்ளியில் படித்து, படம் பார்த்த அதே பார்வதி தியேட்டரில் படம் பார்த்து, டீ குடித்த அதே சந்திப் பிள்ளையார் கோயில் முக்கு டீக்கடையில் டீ குடித்து வளர்ந்த ஒரு இளைஞர் சினிமா டைரக்டர் ஆகிவிட்டாரென்றால் சும்மாவா?*

*'எல, நம்ம முத்தையாபிள்ளை பேரன் ஒரு படம் எடுத்திருக்கானாம். தெரியுமா?'*

*'யாரு? மூத்தவனா?'*

*' இல்லலெ. கடைக்குட்டி. சொடக்கு மணி'*

*'அவன் எப்படில அங்கெ போனான்?'*

*'அவ ஐயாவுக்கு நல்ல துட்டுல்லா. பெறகு ஏன் போகமாட்டான்?'*

*'அது சரி. படம் எப்படி? வெளங்குமா? இல்ல, அடுத்த தேரோட்டத்துக்கு தேர் இளுக்க வந்துருவானா?'*

*'புது வசந்தம்' என்ற படம் ரிலீஸான புதிதில் இந்தப் பேச்சுக்கள் நெல்லையைச் சுற்றி உலா வந்தன. அதன் இயக்குனர் விக்ரமனைத் தெரிந்தவர்கள், தெரிந்ததாகச் சொல்லிக் கொண்டவர்கள் அனைவருமே ஒருவித மயக்கத்தில் இருந்தார்கள். 'மணி நேத்து கூட எனக்கு ஃபோன் பண்ணினான்' என்று கூசாமல் பொய் சொல்லிக் கொண்டார்கள். அநேகமாக மணி என்ற விக்ரமனைத் தெரிந்த அனைவருக்குமே சினிமா ஆசை வந்தது. வாகையடி முக்கில் உள்ள கல்பனா ஸ்டூடியோ வாசலில் கதை விவாதம் செய்யத் துவங்கினார்கள். பெரிய பெரிய தூண்கள் உள்ள அந்தக் காலக் கட்டிடமான கல்பனா ஸ்டூடியோவைத் தாண்டிச் செல்லும் போதெல்லாம், 'அடுத்த ஸீன்ல நான் என்ன சொல்ல வாரெம்னா' என்ற சத்தம் தேய்ந்து கேட்கும்.*

*விக்ரமனைப் பார்த்து சினிமாப் பித்து தலைக்கேறியவர்களில் டாக்ஸி டிரைவர் லட்சுமணப்பிள்ளையின் மகன் கண்ணனும் ஒருவன். சினிமாவுக்காக கண்ணன் செய்த முதல் வேலை, தன் பெற்றோர் வைத்த பெயரை மாற்றியதுதான். அவனாக சூட்டிக் கொண்ட புதிய பெயரும், அதைவிட அதற்கு அவன் சொன்ன காரணமும் படு சுவாரஸ்யமானது. 'நாம இப்போ திருநவேலில இருக்கோம். ஏவிஎம் ஸ்டூடியோல்லாம் மெட்ராஸிலெல்லா இருக்கு. இங்கெ நெல்லையப்பர் மாதிரி அங்கே யாரு சாமி?*

அப்போ அவர் பேரைத்தானே வச்சுக்கிடணும். என்ன சொல்லுதிய?' என்றான். ஆக கண்ணன் கபாலியானான். கபாலி தீவிர ராதா ரசிகன். அவனுடைய சினிமா ஆசை ராதாவை ரசிப்பதிலிருந்துதான் தொடங்கியது. எல்லா விஷயத்திலும் தன் மகனைக் கண்டித்து வந்த லட்சுமணப்பிள்ளை ராதா விஷயத்தில் மட்டும் அமைதி காத்தார். அதன் ரகசியம் ஒரு நாள் தெரிய வந்தது. 'எனக்கும் ராதாவைப் பிடிக்கும்' என்றார் வெட்கத்துடன். நீண்ட நாட்கள் கழித்து ராதா குறித்தும் மகனை வறுத்தெடுத்தார். 'யோவ், இவ்வளவு நாளா ஒமக்கும் ராதா புடிக்கும்னு அந்தப் பயலை ஒண்ணும் சொல்லாம இருந்தீரு இப்போ என்னாச்சு திடீருன்னு?' என்று கேட்டதற்கு, ' நான் ராதா புடிக்கும்னு சொன்னது, எம்.ஆர்.ராதாவை. இந்த செறுக்கியுள்ளெ ஏதோ மலையாளத்துக் குட்டியைப் பாத்துல்லா பல்லைக் காட்டிக்கிட்டிருந்திருக்கான்' என்று அவமானத்துடன் வேதனைப்பட்டார்.

கபாலியின் சினிமா ஆர்வம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போனது. கதை, கவிதைகள் எழுத ஆரம்பித்தான். சினிமாவில் நடிக்கும் ஆர்வமுள்ள அனைத்து இளைஞர்களும் ஒரு நாள் தம்மை கபாலி கதாநாயகனாயாக்கி விடுவான் என்று உறுதியாக நம்பி அவன் பின்னால் அலைந்தனர். காலையிலேயே கபாலியைத் தேடி அவன் வீட்டுக்கு வந்துவிடுவர். 'நாமதான் ஒரு லூசுப்பயலைப் பெத்து வச்சிருக்கோம்னு பாத்தா, ஊருல ஏகப்பட்ட கோட்டிக்காரப் பயலுவல்லா அலையுதானுவொ'. வேலைக்குக் கிளம்பும் லட்சுமணப் பிள்ளை தலையில் அடித்துக் கொள்வார்.

லட்சுமணப்பிள்ளையுடன் டாக்ஸி ஸ்டாண்டில் டாக்ஸி ஓட்டும் ராமனும் கபாலியின் நடிகர் குழுவில் வந்து இணைந்தான். ராமன் பார்ப்பதற்கு கொஞ்சம் விஜயகாந்த் சாயலில் இருப்பான். கபாலி ராமனைப் பார்த்து ' நீதான் என் படத்துக்கு நாயகன்' என்று சொல்லிவிட்டான். ராமனின் நடை மாறியது. கபாலியின் கட்டளைகளில் ஒவ்வொன்றாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தான். காபி, டீ குடிப்பதை நிறுத்தினான். நடிகர்கள் ஜூஸ்தான் குடிக்க வேண்டும் என்று கபாலி சொல்லியிருந்ததால் தினமும் எலுமிச்சம்பழ ஜூஸ் குடித்தான். என்றைக்காவது ஒரு நாள் மது அருந்திக் கொள்ளலாம் என்று கபாலி விதியை சற்று தளர்த்தியிருந்தான். அன்று மட்டும் மது. ஒரே ஒரு கண்டிஷன், அன்றைக்கு கபாலிக்கு மூடு இருக்க வேண்டும்.

இப்படியே எத்தனை நாளைக்குத்தான் ஜூஸ் குடித்துக் கொண்டே இருப்பது? நாம் சினிமா எடுக்கப் போவது எப்போ? என்று ஒரு நாள் ராமன் கோபமாகக் கேட்க, கபாலி அவனை சமாளிக்கும் விதமாக ராமனின் பெயரை மாற்றினான். புதிதாக கற்பனை செய்தெல்லாம் ராமனுக்கு பெயர் வைக்கவில்லை. ஒரே ஒரு 'காந்த்'தை மட்டும் இணைத்து ராமனை ராம்காந்த் ஆக்கினான். ராம்காந்த் கொஞ்சம் அமைதியானான். நாள் ஆக ஆக சினிமாவில் நுழைவது குறித்து பெரும் சந்தேகம் வர ஆரம்பித்தது ராம்காந்துக்கு. காரணம், எல்லா திருநெல்வேலிக் காரர்களையும் போல கபாலியும் தச்சநல்லூரைத் தாண்டுவதாக இல்லை என்பது ராம்காந்துக்கு நன்றாக புரிந்து போனது. ராம்காந்தின் மனநிலை தனக்கு தெரிய வந்ததும் தினமும் சாப்பிடும் புரோட்டா சால்னாவுக்கும், இருட்டுக் கடை அல்வாவுக்கும், செகண்ட் ஷோ சினிமாவுக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தில் கபாலி அதிரடியாக ஓர் யோசனையைச் சொன்னான். ராம்காந்த்தை கதாநாயகனாக்கி ஒரு வீடியோ படம் எடுக்கும் திட்டம்தான் அது. ராம்காந்த் உற்சாகமானான்.

வீடியோ படத்துக்கான மொத்த செலவையும் கதாநாயகன் ராம்காந்த் ஏற்றுக் கொள்ள பட பூஜை சந்திப்பிள்ளையார் கோயிலில் போடப்பட்டது. படத்தின் பெயர் 'வராது வந்த நாயகன்'. அரைமணிநேரம் ஓடக்கூடிய அந்தப் படத்தின் கதாநாயகியைத் தேர்வு செய்ய கபாலி வள்ளியூர் கிளம்பிப் போனான். அங்கு கரகம் ஆடிக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்கு புடவையைச் சுற்றி கூட்டி வந்தான். ஆலங்குளத்துக்குப் பக்கத்திலுள்ள மானூரில் இரண்டு நாள் ஷூட்டிங். மூன்றாவது நாள் படம் ரிலீஸாகிவிட்டது. அதாவது நண்பர்களுக்குப் போட்டுக் காட்டினான். அந்த சமயம் பார்த்து நான் ஊருக்குப் போயிருந்தேன். நானும் 'வராது வந்த நாயகன்' பார்க்கும் பாக்கியம் பெற்றேன். படம் ஆரம்பித்த உடனேயே ராம்காந்த்தும், அந்த வள்ளியூர் பெண்ணும் 'வராது வந்த நாயகன்' பாடலுக்கு இடுப்பை அசைத்து ஆடினார்கள். பிறகு எங்கோ ஒரு காட்டுக்குள் சென்றார்கள். அவர்கள் இருவரும் காதல் செய்து கொண்டிருக்கும் போது டைரக்டர் கபாலி ஓரமாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு கிளைமாக்ஸ் வந்து விட்டது. கதாநாயகி மூன்று விடுகதைகள் போடுகிறாள். அதன் விடையை ராம்காந்த் சரியாக சொல்லி விடுகிறான். உடனே கதாநாயகி 'போட்டீல நீங்க செவுச்சிட்டீங்க. இனிமே இந்த காலா உங்களுக்குத்தான்' என்று ராம்காந்தைக் கட்டி அணைத்துக் கொள்கிறாள். படம் பார்த்து முடிந்ததும் கபாலியிடம் கேட்டேன்.

'ஜெயிச்சுட்டீங்கங்கிறதை செவுச்சிட்டீங்கங்கறா. அது புரியுது. அது என்ன காலா?'

*கபாலி பதில் சொன்னான்.*

*'அந்த கேரக்டர் பேரு கலா. அதைத்தான் அந்த ஆர்டிஸ்ட் அப்படி சொல்லிட்டா. டப்பிங்கல சரி பண்ணிடலாம்னு விட்டுட்டேன்.'*

*'வராது வந்த நாயகன்' எடுத்த பின் கபாலி தன்னை ஒரு இயக்குனராக உறுதி செய்து கொண்டான். நான் ஊருக்கு போனால் என்னிடத்தில் மணிரத்னத்தை மணி என்றும், வாத்தியாரை பாலு என்றும், இளையராஜாவை ராஜா என்றும் விளித்துப் பேசுவான். அவனைச் சுற்றியிருந்த இளைஞர்களுக்கு வயதாகி விட்டது. ஆளாளுக்கு அவரவர் வேலையைப் பார்க்கப் போய்விட்டனர். கடைசியாக நான் பார்க்கும் போது கபாலி ஒரு கரும்புச் சாறுக் கடையில் நின்று கொண்டிருந்தான். உடன் கருப்பாக ஒல்லியான ஒரு இளைஞன். கபாலி என்னிடம் வந்து பேசும் போது அந்த ஒல்லி இளைஞனும் அருகில் வந்து நின்றான். 'இது யாரு? புதுசா இருக்கு?' என்று கேட்டேன். உடனே கபாலி அவனைப் பார்த்து 'ம், சொல்லு உன் பேரை. அவாள் சினிமால இருக்கா. தெரியும்லா' என்றான். தயங்கித் தயங்கி கபாலியைப் பார்த்தவாறே அந்தப் பையன் என்னிடம் சொன்னான். ' என் பேரு செல்வகாந்த்'.*

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

***கலர்***

*காபி குடிக்கும் பழக்கம் ஏனோ என்னிடத்தில் சிறுவயதிலிருந்தே இல்லை. சென்னைக்கு, அதுவும் சினிமாவுக்கு, வந்த பிறகுதான் டீ குடிக்கும் பழக்கம் வந்தது. படப்பிடிப்பின் போது குடிக்கும் டீயின் எண்ணிக்கை தெரிவதேயில்லை. யார் வீட்டுக்குப் போனாலும் குடிப்பதற்கு காபி கொடுத்தார்களானால் வேண்டாம் என்று மறுத்து விடுவேன். 'ஒருவாய் காப்பி குடிக்கறதுனால ஒன் கிரீடம் ஒண்ணும் எறங்கிறாது'. குஞ்சு எத்தனையோ முறை சலித்திருக்கிறான். நான் கேட்டதேயில்லை. 'இங்கெ பாரு. ஒனக்கு காபி குடிக்கிற பழக்கம் இல்லேங்கறதுக்காக வேண்டாங்குறே. ஆனா அவங்க அதுக்காக ஒனக்குன்னு வேற ஏதோ தயார் பண்ணனும். எதுக்கு தேவையில்லாம மத்தவங்களுக்குக் கஷ்டத்த குடுக்கறே?' வாத்தியார் பாலு மகேந்திரா ஒருமுறை சொன்னார். அன்றிலிருந்து எங்கு சென்றாலும், என்னிடம் கேட்காமல் காபி கொடுத்தால் எதுவும் சொல்லாமல் வாங்கி குடித்து விடுவேன்.*

*காபியை விலக்கியே வைத்திருந்தாலும் மற்ற பானங்களான நன்னாரி சர்பத், எலுமிச்சை சாறுடன் சோடா கலந்து உப்பிட்டு குடிக்கிற போஞ்சி, பதனீர், இளநீர் என இவையெல்லாம் அவ்வப்போது என் வாழ்க்கையில் இடம்பிடித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இதில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரசனை. ராவண்ணா என்று எங்கள் குடும்பத்தினரால் அழைக்கப்பட்டு எங்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவராக இருந்த ராமையா பிள்ளை இப்போது உயிருடனில்லை. கட்டிட மேஸ்திரியாக இருந்த ராவண்ணா எங்கு சென்றாலும் உடன் செல்பவரிடம், 'யோவ் வாங்க. அந்தா அந்தக் கடைல போயி ஆளுக்கு ரெண்டு கலர் அணைச்சுக்கிடுவோம்' என்பார். டொரினோ, பவண்டோ, கோல்ட் ஸ்பாட் எதுவாக இருந்தாலும் மொட்டையாக அது கலர்தான்.*

*ராவண்ணாவின் வீட்டுக்கு ஒருமுறை சென்றிருந்தேன். அவரது மனைவி மட்டுமே இருந்தார். என்னைப் பார்த்ததுமே பரபரப்படைந்தார். 'உள்ள வாய்யா'. இரும்பு மடக்கு நாற்காலியை எடுத்துப் போட்டார். 'வராதவன் வந்திருக்கே. இந்தப் பய வேற இல்லையெ. பள்ளிக்கூடம் போயிருக்கானெ. ஒரு அஞ்சு நிமிசம் இருக்கியா? முக்குக் கடையில போயி கலர் வாங்கிட்டு வந்திருதென்' என்றார்கள். ராவண்ணா மட்டுமல்ல அவரது குடும்பத்துக்குள்ளும் கலருக்கு இருக்கும் செல்வாக்கைப் புரிந்து கொண்டேன். 'வீட்டுக்கு வந்த ஆளுக்கு ஒரு கலர் கிலர் வாங்கிக் குடுத்து அனுப்ப வேண்டாமாட்டி?' என்று ராவண்ணா சத்தம் போடுவார் போல. அதற்குப் பின் நான் அங்கு எத்தனை முறை போனாலும் கலர் குடிக்காமல் திரும்பியதில்லை. 'அவாள் வீடு வரைக்கும் வந்துட்டோம். போயி ஆளுக்கொரு கலர் குடிச்சுட்டுத்தான் வருவோமே'. கிண்டல் செய்வான் குஞ்சு.*

*சுந்தரம் பிள்ளை பெரியப்பாவும் கலர்ப்பிரியர்தான். குறிப்பாக டொரினோ. 'நேத்து ராயல் டாக்கீஸ்க்கு செகண்ட் ஷோ போயிருந்தேன். இண்டர்வல்ல டொரினோ குடிக்கும் போது கணேசன்பய வந்து பெரிப்பான்னு தோளத் தொடுதான். அத ஏன் கேக்கெ? அந்தாக்ல, வா மூதின்னு அவனுக்கும் ஒரு டொரினோவ வாங்கிக் குடுத்தேன்.' ஸ்ட்ரா போட்டுக் குடிப்பது பெரியப்பாவுக்குப் பிடிக்காத ஒன்று. ரொம்ப நாட்களாக ஸ்ட்ரா போட்டு உறிஞ்சிக்கொண்டுதான் இருந்தார். ஒரு முறை அப்படி உறிஞ்சிக் கொண்டிருந்த போது பாட்டில் காலியானது தெரியாமல் சத்தம் வரும் வரை உறிஞ்சியிருக்கிறார். 'பாத்தா பெரிய மனுசன் மாதிரி தெரியுது. இப்படியா பாட்டில் காலியானது தெரியாம அசிங்கம்*

*புடிச்சாக்ல சத்தம் போட்டு உறியறது மாடு களனி குடிக்க மாதிரி?' போகிற போக்கில் யாரோ சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். அவமானத்தில் அன்றோடு பெரியப்பா தூக்கி எறிந்தது, ஸ்ட்ராவை. டொரினோவை அல்ல. இறக்கும் வரை டொரினோவை அவர் மறக்கவேயில்லை.*

*ஸெவென் அப் வாங்கிக் குடித்து 'ஏவ் ஏவ்' என ஊரையே காலி செய்யுமளவுக்கு சத்தமாக ஏப்பம் விடும் நபர்களைப் பார்த்திருக்கிறேன். ஸ்டைலாக ஒரு சமோசா அல்லது ஒரு பஃப் வாங்கிக் கடித்துக் கொண்டு, கொக்க கோலாவைக் குடித்து விட்டு 'இதுதான் என்னாட லஞ்ச்' என்று சொல்லும் இளைஞர்களும், யுவதிகளும் இப்போது இருக்கத்தான் செய்கிறார்கள். இன்னும் கொஞ்சம் நாகரிகச் சிறுசுகள் பிஸ்ஸா தின்று பெப்ஸி குடிக்கிறார்கள். ஃப்ரூட்டி உறியாத சின்னப் பிள்ளைகள் இப்போது எங்குமே இல்லை.*

*மேற்படி பாட்டில் பானங்களில் சிலரது பிரத்தியேக ரஸனை ஆச்சரியத்தை வரவழைப்பவை. என் வாத்தியார் பாலு மகேந்திரா கோக்கில், பெப்ஸியில் கொஞ்சம் உப்பு போட்டு குடிப்பார். 'கேஸ கம்ப்ளீட்டா எடுத்துரும். குடிச்சு பாரேன்'. குடித்துப் பார்த்திருக்கிறேன். உண்மைதான். பாரதி மணி பாட்டையாவுக்கு அது சிம்லாவாகவே இருந்தாலும் ஃபிரிட்ஜில், அதுவும் ஃப்ரீஸரில் வைத்து ச்சில்லென்று கை நடுங்க எடுத்து கொடுக்கும் தண்ணீரோ, பாட்டில் பானங்களோ வேண்டும். இதமான சூட்டில் பருத்திப் பால் குடிப்பது போல் மடக்கென்று முழுங்கி விடுவார். 'இன்னும் சில்னஸ் பத்தல' என்பார். 'இவருக்கு ஐஸ ஒடச்சுத்தான் வாயில தட்டணும்'. மனதுக்குள் நினைத்துக் கொள்வேன்.*

*சென்னையில் ஆடம்பரமான குளிர்பானங்களை வேறு வழியில்லாமல் குடித்துப் பழகி வெறுத்துப் போயிருந்தார் கவிஞரும், ஒளிப்பதிவாளருமான நண்பர் செழியன். திருநெல்வேலியிலிருந்து நாங்கள் பாவநாசம் செல்லும் வழியில் திடீரென செழியனுக்கு ஓர் ஆசை தோன்றியது. ' ஏங்க, காளி மார்க் பவண்டோ குடிச்சு ரொம்ப வருஷமாச்சு. இங்கெ கெடைக்குமில?' என்றார். அப்போது நாங்கள் காரை நிறுத்திவிட்டு விக்கிரமசிங்கபுரத்தில் நின்று கொண்டிருந்தோம். உடனிருந்த மீனாட்சி பயலிடம் சொன்னேன். 'சித்தப்பா, நீங்க இங்கனையே இரிங்க. நான் போயி வாங்கிட்டு வாரேன்' என்று நகர்ந்தான். 'எல, கெடைக்கலென்னா விட்டுரு. திருநவேலி போயி பாத்துக்கிடலாம்' என்றேன். 'அவாள் ஆசப்பட்டுட்டா. ஒடனெ வாங்கிக் குடுக்கெண்டாமா? பெறகு நம்மள பத்தி என்ன நெனப்பா?' கொஞ்ச நேரத்தில் இரண்டு பவண்டோக்களோடு வந்து விட்டான். காரில் போகும் போது எங்களுக்கு பெருமாள் கோயில் தீர்த்தம் மாதிரி பேருக்குக் கொஞ்சம் போல கொடுத்து விட்டு, பவண்டோவுடனே வாழ்ந்து கொண்டு பாவநாசம் வரை வந்தார் செழியன்.*

*'ரொம்ப நாள் ஏங்கிக்கிட்டு இருந்துருப்பா போலுக்கு'. திரும்பிப் பார்த்து காதுக்குள் ரகசியமாகச் சொன்னான் மீனாட்சி. வயிறு நிறைய பவண்டோவை நிரப்பி விட்டு இரண்டொரு ஏப்பங்களோடு தூங்கியும் போனார் செழியன். பாவநாசம் தாண்டி உள்ளே சொரிமுத்தையனார் கோயில் பாலத்துக்குச் சென்றவுடன் காரை நிறுத்தினோம். ஸ்படிகம் போல் ஓடும் தாமிரபரணியைப் பார்த்தவுடன் எல்லோருக்கும் குளிக்கும் ஆசை வந்து விட்டது. குளிப்பதற்கு வாகான இடத்தை மீனாட்சி தேர்வு செய்துச் சொல்ல, ஒவ்வொருவராக ஆற்றுக்குள் இறங்கினோம். 'சித்தப்பா, மொதல்ல ஒரு முங்கு போட்டிருங்க' என்றான் மீனாட்சி. அவன் கையைப் பிடித்துக் கொண்டே முங்கி எழுந்தேன். மனம் குதூகலமடைந்தது. 'எல, இருட்டுற வரைக்கும் குளிப்போம். என்னா?' என்றேன். எல்லோரும் அவரவர்க்கு வசதியான இடத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள். செழியனை மட்டும் காணவில்லை.*

*'செளியன எங்கலெ?'*

*சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மீனாட்சி தூரத்தில் ஒரு திசையைக் காண்பித்து சொன்னான்.*

*'சித்தப்பா, அங்கெ பாருங்க'.*

*தோளில் கிழற்றி போட்டிருக்கும் பேண்டுடன் ஒரு புதருக்குள் ஓட்டமும், நடையுமாகச் சென்று கொண்டிருந்தார் செழியன். கையில் காலியான ஒரு பவண்டோ பாட்டில்.*

---

**விஞ்சை விலாஸின் சுவை**

*நண்பர் செழியன் ஒருமுறை கேட்டார். 'திருநெல்வேலியில ஒரு சின்னக் கடையில இட்லி சாப்பிட்டேன். அப்படி ஒரு ருசி. முறுக்கெல்லாம் கொடுத்தாங்க.அது என்ன கடை?'என்று. அந்தக் கடையின் பெயர்*

விஞ்சை விலாஸ். திருநெல்வேலி டவுணுக்குள் நுழையும் போது ஒரு பழைய ஆர்ச் பச்சைக் கலரில் வளைந்து நிற்கும். அதற்கு கொஞ்சம் அருகில் இடதுகைப்பக்கம் இருக்கிறது விஞ்சை விலாஸ். அதிகபட்சம் நான்கைந்து பெஞ்சுக்களே உண்டு. அதன் உரிமையாளரான கைலாசம் பிள்ளை தாத்தா உடம்பு, நெற்றி எல்லாம் நீறுமணக்க கல்லாவில் அமர்ந்திருப்பார். கழுத்தில் ஸ்படிக, ருத்திராட்ச மாலைகள். சின்ன பத்மினி ஊதுபத்தியைப் பொறுத்தி வைத்திருப்பார். அந்தப் பத்திப் பாக்கெட்டிலேயே ஒரு சின்ன துளை உண்டு. அதில் பத்தியை பொறுத்தி நிறுத்தியிருப்பார். அந்த வாசனை எப்போதுமே விஞ்சை விலாஸில் நிறைந்து நிற்கும். இன்றைக்கும் கைலாசம்பிள்ளைத் தாத்தாவை நினைக்கும் போதெல்லாம் அந்தப் பத்தியின் வாசனையையும் நுகர முடிகிறது. தாத்தாவுக்கு வயிறு வரை நீண்டு படர்ந்திருக்கும் வெண்ணிற தாடி. சட்டை அணிந்திருக்க மாட்டார். செக்கச் செவேலென இருப்பார். சின்ன வயதில் மதுரை பஸ்ஸ்டாண்டில் தமிழகம் எண்ணெய்ப் பலகாரக் கடை போர்டைப் பார்க்கும் போதெல்லாம் கைலாசம்பிள்ளைத் தாத்தாவுக்கு மதுரையிலும் ஒரு கடை இருப்பதாகவே நினைத்துக் கொள்வேன். அந்த போர்டில் உள்ளவர் ஈ.வெ.ரா. பெரியார் என்னும் விவரம் ரொம்ப நாட்கள் கழித்தே எனக்கு தெரிய வந்தது.

விஞ்சை விலாஸில் மிருதுவான இட்லியும், வீட்டு தோசை போன்ற குட்டி தோசையும், எள் மற்றும் சாதா மிளகாய்ப் பொடியும் கிடைக்கும். இது போக தேங்காய்ச் சட்னியும், சாம்பாரும் உண்டு. கைமுறுக்கு, அதிரசம், நெய்விளங்காய் போன்றவை அங்கே ரொம்ப விசேஷம். வேறு எங்குமே சாப்பிட முடியாத ருசியுடன் சின்ன ஆம வடையும் அங்கு கிடைக்கும். சில குறிப்பிட்ட நாட்களில் அடை போடுவார்கள். ஒரு நாள் நானும் குஞ்சுவும் சினிமாவுக்குக் கிளம்பிப் போய் கொண்டிருந்தோம். வீட்டைவிட்டு கொஞ்ச தூரம் வந்தவுடன் எனக்கு பசியெடுப்பதாகச் சொன்னேன். தான் இப்போதுதான் வீட்டில் சாப்பிட்டு வந்திருப்பதாகவும், கொஞ்ச நேரம் பொறுத்துக் கொண்டால் சினிமா முடிந்து இருவருமே ஹோட்டலுக்கு போய் நன்றாக சாப்பிடலாம் என்றான் குஞ்சு. எனக்கோ பசி பொறுக்க முடியவில்லை. நடந்து வந்த வழியில் விஞ்சை விலாஸும் வந்துவிட்டது. கால்கள் அதற்கு மேல் நகர மறுத்தன. 'சொன்னா கேக்க மாட்டியே, கொஞ்ச நேரம் கழிச்சுன்னா நானும் நல்லா சாப்பிடுவேம்லா' என்று சலித்தபடியே ,'சரி வந்துத் தொலை' என்று விஞ்சைக்குள் நுழைந்தான் குஞ்சு. அப்போதுதான் இட்லி ஊற்றித் தட்டியிருந்தார்கள். எல்லாமே சுடச்சுட பரிமாறப்பட ஐந்து இட்லிகளில் எனக்கு வயிறு நிறைந்து விட்டது. அப்போதுதான் சாப்பிட்டு வந்திருக்கும் காரணத்தால் நான்கு இட்லிகளும், இரண்டே இரண்டு தோசைகளும், ஒரு கல்கண்டு பாலும் குடித்து முடித்து, வாயைத் துடைத்துக் கொண்டே, 'சீக்கிரம் வா படம் போட்டிருவான்' என்றபடியே எழுந்தான் குஞ்சு. கைலாசம் பிள்ளைத் தாத்தாவிடம் பில் பணம் கொடுக்கும் போது, 'இன்னைக்கு அடை போடமாட்டேளோ தாத்தா?' என்று கேட்டுக் கொண்டான்.

சென்னைக்கு வந்த பிறகு என்னைப் போன்ற சைவர்களுக்கு சரவண பவனை விட்டால் வேறு கதியில்லை. இப்போது வசந்த பவன். திருநெல்வேலியின் ஓர் ஓரத்தில் சின்னஞ்சிறிய கடையான விஞ்சை விலாஸின் சுவை நாக்கிலேயே தங்கிவிட்டது.அதை மறக்காமல் இருக்கும் வண்ணமே சரவணபவனும், வசந்தபவனும் பேருதவி புரிகின்றன. பெரும்புகழ் பெற்ற முருகன் இட்லிக் கடையுமே விதிவிலக்கில்லை. எல்லாவற்றிலும் ஆடம்பரமே. விலையிலும், சுவையிலும். ஆனால் சென்னையில் வசிக்கும் மக்கள் சரவணபவனை கொண்டாடுகிறார்கள். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூதானே சர்க்கரை.

'சதிலீலாவதி' படப்பிடிப்பின் போது தயாரிப்பு ஊழியர்கள் ஒரு மாலையில் 'ஸாருக்கு திருநெல்வேலில டிஃபன் வாங்க மறந்துடாதிங்க' என்று பேசிக் கொண்டனர். ஸார் என்று அவர்கள் சொன்னது கமலஹாஸனை. திருநெல்வேலி என்று அவர்கள் எதை சொல்கிறார்கள் என்று குழம்பிப் போனேன். ஒருமணிநேரத்தில் திருநெல்வேலிக்கு போய் டிஃபன் வாங்கிவிட முடியுமா என்ன? அப்போதுதான் என் கேள்விக்கு விடை கிடைத்தது. விடை அளித்தவர், தயாரிப்பு நிர்வாகி சுந்தர்ராஜன் மாமா. ' உனக்கு தெரியாதாடா . . நாளைக்கு காலையிலே உன்னை கூட்டிக்கிட்டு போறேன்'. சொன்னபடியே கூட்டிக் கொண்டு போனார். சாலிகிராமத்தில் பிரசாத் ஸ்டுடியோவுக்கு எதிரே ஒரு தாழ்வான கட்டிடத்தில் 'திருநெல்வேலி சைவாள் ஹோட்டல். உரிமையாளர் - இசக்கியம்மாள்' என்று ஒரு அழுக்கு போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. அதில் எப்போதோ வைத்த சந்தனக் குங்குமப் பொட்டு காய்ந்திருந்தது. உள்ளே நுழைந்தவுடன் ஒரு திருநெல்வேலி வாசனை அடித்தது. இருட்டு லாலாக் கடை போன்றே ஒரு மங்கலான வெளிச்சம் கடைக்குள் இருந்தது. புகை படிந்த நான்கைந்து பெஞ்சுக்கள். கல்லாவில் உரிமையாளர் உட்கார்ந்திருந்தார். கருத்த, தடித்த உடல். பெரிய மூக்குக் கண்ணாடி. நெற்றியில் திருநீறு. 'எல, என்ன வேணும் கேளு' என்றார். இரண்டு சப்ளையர்களும் அவர் மகன்கள் என்பது புரிந்தது. மூத்தவன் அப்படியே அவர் அப்பாவைப் போல. இளைய மகன் கொஞ்சம் பலவீனமாக அப்பாவின்

சாயலில்லாமல், ஆனால் கண்ணாடி மட்டும் அணிந்திருந்தார். சுந்தர்ராஜன் மாமா சொல்லியிருந்த எண்ணெய் தோசை வந்தது. தொட்டுக் கொள்ள இரண்டு விதமான மிளகாய்ப் பொடிகள் மற்றும் சாம்பார், தேங்காய்ச் சட்னி. வெங்காயச் சட்னி காரச் சட்னி என்னும் பெயரில் வந்தது. அப்படியே விஞ்சை விலாஸில் சாப்பிட்ட மாதிரியே இருந்தது.

திருநெல்வேலி சைவாள் ஹோட்டலின் வாடிக்கையாளனாக ஆகிவிட்ட பிறகு எனது முகம் அவர்களுக்கு பழக்கப் பட்டுவிட்டது. உரிமையாளர் கருப்பையா பிள்ளையும் என்னைப் பார்த்தால் 'வாங்க . . எங்கே ஆளையே காணோம். ஊருக்கு போயிட்டேளோ' என்று சிரித்தபடியே வரவேற்க ஆரம்பித்திருந்தார். திருநெல்வேலியை விட்டு வந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட அவர், அவரது உறவினர்கள் ஒரு சிலரைப் பற்றி என்னிடம் சொல்லியிருந்தார். அவர்களை எனக்கும் தெரிந்திருந்தது. அவரைத் தவிர அவரது இரண்டு மகன்களை மட்டுமே பார்த்திருக்கிறேன். ஆச்சியின் குரலை மட்டும் கேட்டிருக்கிறேன். அடுப்படியில் நிற்பது அவர்கள்தான். அங்கிருந்து பதில் சொல்வர்கள். 'கல்லு காயுது. செத்த நேரம் ஆகும்'. மகன்கள் இருவரது வாயிலும் திருநெல்வேலி பாஷையின் சுவடே இல்லை. மிளகாய்ப் பொடியை சென்னைக் காரர்கள் மாதிரி இட்லிப் பொடி என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் சென்னைக்கு பழகியிருந்தார்கள்.

ஒரு நாள் இரவு நேரத்தில் சாப்பிடப் போனேன். கல்லாவில் கருப்பையா பிள்ளையின் பெரிய மகன் உட்கார்ந்திருந்தார். இளைய மகனிடம் கேட்டதற்கு அப்பா படுத்துட்டாரு என்றார். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே ஒரு சின்னக் குழந்தை வீட்டுக்குள்ளிருந்து வந்து என்னருகில் நின்று ஏதோ கேட்டது. என்ன கேட்கிறது என்று புரியவில்லை. சாப்பிடுறியா? என்றேன். அதற்குள் உள்ளிருந்து அதன் தாயார் வந்து , 'மாமாவை தொந்தரவு பண்ணக் கூடாது. சாப்பிடுதாங்கல்லா' என்றபடியே தூக்கிக் கொண்டு போனார்கள். கருப்பையா பிள்ளை தன் மகனுக்கு திருநெல்வேலியிலிருந்து பெண் எடுத்திருக்கிறார் என்பது அந்தப் பெண் பேசிய பாஷையிலேயே தெரிந்தது. அதன் பிறகு அதிகம் அங்கு போக முடியவில்லை. ஒரு நாள் அதிகாலை படப்பிடிப்புக்கு காரில் போய்க் கொண்டிருக்கும் போது திருநெல்வேலி சைவாள் ஹோட்டலின் வாசலில் பெஞ்சு ஒன்றை கழுவி அதில் கருப்பையா பிள்ளையின் புகைப்படம் ஒன்று மாலையணிவித்து வைக்கப் பட்டிருந்தது. போய் கேட்டிருக்கலாம்தான். அப்பாவுக்கு என்ன செய்தது என்று. அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. படப்பிடிப்புக்கான அவசரம். அதற்குப் பிறகு அந்தக் கடை அவ்வப்போது மூடியிருக்கும். திறந்திருக்கும். நான் போகவேயில்லை.

இளையராஜா அவர்களை பிரசாத் ஸ்டூடியோவில் போய் பார்த்துவிட்டு வாத்தியார் பாலு மகேந்திராவும், நானும் வெளியே வந்தோம். 'பசிக்குதுடா. வா போய் ஏதாவது சாப்பிடலாம்' என்றார் வாத்தியார். பிரசாத் ஸ்டூடியோவுக்கு நேரெதிரே உள்ள 'அக்ஷயா' ஹோட்டலுக்குள் நுழைந்தோம். அது கொஞ்சம் ஆடம்பரமான ஹோட்டல். வாத்தியாருக்காக வேறு வழியேயில்லாமல் மனசுக்கு பிடிக்காமலேயே போனேன். இளையராஜாவின் குழுவில் வாத்தியம் வாசிப்பவர்கள், மற்றும் ஸ்டூடியோவுக்கு வரும் மற்ற திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் என அந்த ஹோட்டல் எப்போழுதுமே பிஸியாக இருக்கும். வாத்தியாரும், நானும் போய் இடம் பிடித்து உட்கார்ந்தோம். 'என்ன ஸார் சாப்பிடுறீங்க?' கேட்ட சப்ளையரை பார்த்தேன். கருப்பையா பிள்ளையின் இளைய மகன்.

கருப்பையா பிள்ளையின் இளைய மகன்

'விஞ்சை விலாஸின் சுவை' கட்டுரையில் சாலிகிராமத்திலுள்ள 'திருநெல்வேலி சைவாள் ஹோட்டல்' பற்றி எழுதியிருந்தேன். அதில் அந்த ஹோட்டல் உரிமையாளரின் இளைய மகன் வேறொரு ஹோட்டலில் சப்ளையராக வேலை செய்த விஷயத்தையும் சொல்லியிருந்தேன். இதை படித்த அன்பரொருவர் திருநெல்வேலி ஹோட்டலுக்குப் போயிருக்கிறார். வழக்கமாக அவர் அங்கு போய் சாப்பிடுவதுண்டாம். கருப்பையா பிள்ளையின் மறைவுக்குப் பின் அந்த ஹோட்டலை இப்போது நடத்தி வருபவர் அவரது இளைய மகன். வேறொரு ஹோட்டலில் வேலை செய்வதாகச் சொல்லப்பட்டவர் இந்த ஹோட்டலை நடத்துகிறாரே என்று அன்பருக்குத் தோன்றியிருக்கிறது. மெல்ல அவரிடம் 'நீங்க 'அக்ஷயா ஹோட்டல்ல வேல செஞ்சீங்களோ!' என்று வினவியிருக்கிறார். கருப்பையா பிள்ளையின் இளைய மகன் அந்தத் தகவலை மறுத்திருக்கிறார். உடனே இவர் கட்டுரையின் அந்தக் குறிப்பிட்ட பகுதி எழுதியவரின் கற்பனை என்று முடிவு செய்திருக்கிறார். சிறிது நேரம் கழித்து கருப்பையா பிள்ளையின் இளைய மகன் தானாகவே வந்து 'ஆமா, கொஞ்ச நாள் அங்கெ வேல செஞ்சேன். ஒங்களுக்கு எப்படி தெரியும்?' என்று கேட்டிருக்கிறார்.

'வார்த்தை' இதழில் வெளிவந்த 'விஞ்சை விலாஸின் சுவை' கட்டுரையில் இந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சொன்னவுடன் கருப்பையா பிள்ளையின் இளைய மகன் அந்தக்

கட்டுரையைப் படிக்க ஆசைப்பட்டிருக்கிறார். மறுமுறை இவர் அங்கு செல்லும் போது 'வார்த்தை' இதழை கொண்டு கொடுக்கவும், அதை வாங்கிப் படித்து ஆனந்தப்பட்ட கருப்பையா பிள்ளையின் மகன், 'ஒங்களுக்கு என்ன வேணுமோ நல்லா சாப்பிடுங்க' என்று இவரை உணர்ச்சி பொங்க உபசரித்தாராம். இதை எழுதியவரை நான் பார்க்கணுமே என்று கேட்க, இவரும் தான் அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார். இந்தத் தகவல்களையெல்லாம் பிரபுராம் என்கிற அந்த அன்பரே எனக்கு மெயில் மூலம் சொல்லியிருந்தார்.

கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளாக அந்த ஹோட்டலுக்குச் சென்று வருகிறேன். 'லீஞ்சை விலாஸின் சுவை' எழுதிய பிறகும் கூட பலமுறை சென்றிருக்கிறேன். திருநாஞ்சில் நாடன் அவர்களையும் சமீபத்தில் அங்கு அழைத்துச் சென்றேன். எண்ணெய் தோசையும், ஆம வடையும் சாப்பிடும் போது, 'ஏ அய்யா, நம்ம ஊர்ல சாப்பிடுற மாதிரில்லா இருக்கு' என்றார் நாஞ்சிலார். கூடவே 'இதெல்லாம் வயித்துக்கு ஒண்ணும் பண்ணாது' என்று சான்றிதழும் வழங்கினார். அன்றைக்கும் கருப்பையா பிள்ளையின் மகனிடம் என்னை நான் காட்டிக் கொள்ளவில்லை. இத்தனைக்கும் 'என்னண்ணே, ஆளையே காணோம்' என்றார் என்னைப் பார்த்து.

சில நாட்களாக 'திருநெல்வேலி' ஹோட்டல் பூட்டப்பட்டிருந்தது. நேற்று மாலை நான் சாலிகிராமத்தில் நடந்து கொண்டிருந்தவன் 'திருநெல்வேலி' ஹோட்டல் திறந்திருப்பதைப் பார்த்து நுழைந்தேன். கடை கொஞ்சம் நகர்ந்திருந்தது. உள்ளுக்குள் சில பூச்சு வேலைகள் செய்யப்பட்டிருந்தாலும், கடைக்கே அழகு சேர்க்கும் அந்தப் பழைய இருட்டும், வாசனையும் அப்படியே இருந்தன. 'தோச கொண்டு வரவாண்ணே' என்று கேட்ட கருப்பையா பிள்ளையின் மகனிடம் தலையாட்டினேன். உள்ளே சென்றவர் போகும் போதே வானொலி ஸ்விட்சை ஆன் செய்து விட்டுப் போனார். உலகமே பண்பலை வரிசையில் சிக்குண்டு 'சொல்லுங்க, ஒங்க லவ்வருக்கு நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க' என்று கேட்டுக் கொண்டு இளிக்க, 'திருநெவேலி ஹோட்டலின் வானொலி' ஆல் இண்டியா ரேடியோவின் வழக்கமான சோகக்குரல் அறிவிப்பாளரின் எச்சில் முழுங்கலோடு பழைய பாடல் ஒன்றை ஒலிபரப்பியது. இளையராஜா என்னும் புதிய இசையமைப்பாளர் அறிமுகமாயிருந்த காலத்துக்கு ஒரே நிமிடத்தில் நகர்ந்து நான் மூழ்கியிருந்த போது, கருப்பையா பிள்ளையின் மகன் தோசையுடன் வந்து என் கவனம் கலைத்தார்.

சாப்பிடும் போது எனக்கு முன்னே உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த வழுக்கைத்தலை பெரியவர் எழுந்து கைகழுவினார். சில்லறையை எண்ணி கொடுத்துவிட்டு அவர் சென்றுவிட, இப்போது நானும், கருப்பையா பிள்ளையின் மகனும் மட்டும். 'சாம்பார் ஊத்தட்டுமாண்ணே?'. சாம்பார் ஊற்றிக் கொண்டிருந்தவரிடம் மெல்ல கேட்டேன். 'ஒங்களப் பத்தி ஒரு பத்திரிக்கைல வந்திருந்துதே'. மூக்குக் கண்ணாடிக்குள் கண்கள் அகல விரிந்தன. 'ஆமாண்ணே. யாரோ ரொம்ப உன்னிப்பா கவனிச்சு எளுதியிருக்காங்க. அப்பா காலத்துல இருந்தே இங்கெ வந்து போறவங்கன்னு மட்டும் தெரிஞ்சுது. அத படிச்சுட்டு அன்னிக்கு பூரா சந்தோசமா இருந்தேண்ணே' என்றார்.
நான்தான் அதை எழுதியவன் என்பதைச் சொல்ல எனக்கு தயக்கமாக இருந்ததற்குக் காரணம், அவர் அதை எப்படி எடுத்துக் கொண்டார் என்பது சரியாகத் தெரியாததால். திடீரென 'எல, எங்க குடும்பம் கஷ்டப்பட்டதையெல்லாம் நீ ஊரு பூரா சொல்லி அசிங்கப்படுத்துதியோ' என்று சொல்லி சாம்பார் வாளியை என் தலையில் கவிழ்த்து விட்டால் என்ன செய்வது என்ற யோசனை. ஆனால் அவர் தொடர்ந்து அந்தக் கட்டுரையைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசிக் கொண்டேயிருந்தார். இப்போது சொல்லலாம் என்றால் மற்றுமோர் யோசனை. ஒருவேளை இவர் உணர்ச்சிவசப்பட்டு சாப்பிட்டதற்கு பணம் வாங்க மறுத்து விட்டால் என்ன செய்வது என்று நினைத்தேன். சாப்பிட்டு முடித்த பின் கைகழுவி விட்டு, காசும் கொடுத்துவிட்டு வெளியே வரும் போது சொன்னேன். 'அத நாந்தான் எளுதினென்'. சட்டென்று என் கையைப் பிடித்தார் கருப்பையா பிள்ளையின் மகன்.

கண்கள் கலங்க, 'அண்ணே, நீங்கதானா அது? ரொம்ப சந்தோஷண்ணே. எங்க அப்பாவப் பத்தி, அம்மாவப் பத்தில்லாம் படிக்கதுக்கு அவ்வளவு இதா இருந்துதுண்ணே.' வார்த்தைகள் சிக்காமல் திணறினார். 'பொறந்ததுலேருந்தே மொதலாளியா இருந்துட்டு, அப்பா எறந்ததுக்கப்புறம் வேற வளியில்லாம கொஞ்ச நாள் அந்த கடைல வேல பாத்தேன். அப்பொ கரக்டா நீங்க அங்கெ வந்துருக்கியெ.' அழுதுவிடுவார் என்று தோன்றியது. அவர் தோளைத் தொட்டு 'இப்போதான் நல்லா இருக்கீங்களே. அப்பா கடைய நல்லா நடத்திக்கிட்டிருக்கும் போது வேற என்ன வேணும்?' என்றேன். கண்ணாடிக்குள் கைலியின் நுனியை விட்டு துடைத்தபடி, ' ரொம்ப நன்றிண்ணே' என்றபடி என் கையைப் பிடித்தபடி வாசல் வரை வந்தார் கருப்பையா பிள்ளையின் இளைய மகன்.

***திருநவேலி***

*திருநெல்வேலியை விட்டு எவ்வளவு தூரம் சென்று வாழ்ந்தாலும் ஊரை மறக்க முடியாமல் ஊர்நினைப்பிலேயே வாழும் எத்தனையோ பேரை சந்தித்திருக்கிறேன். திருநெல்வேலிக்காரரான எழுத்தாளர் வண்ணநிலவனால் சென்னைக்கு வந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் திருநெல்வேலியை மறக்க முடியவில்லை என்பதை அவர் எழுதும் கதைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 'சென்னையில் வாழ்வது ஒரு பெரிய வாளை கையில் வைத்துக் கொண்டு சண்டை போடுவது மாதிரி இருக்கிறது. இப்போதே திருநெல்வேலியில் ஏதேனும் ஒரு பலசரக்குக்கடையில் ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு யாராவது வேலை கொடுத்தால் சந்தோஷமாகச் சென்று விடுவேன்' என்று ஒருமுறை சொன்னார். திருநெல்வேலிக்காரரான பி.ஏ.கிருஷ்ணன் எழுதிய 'புலிநகக்கொன்றை' நாவலைப் படித்தவுடன் அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அப்போது அவர் தில்லியில் இருந்தார். 'திருநெல்வேலியை விட்டுச் சென்று எத்தனையோ ஆண்டுகள் நீங்கள் தில்லியில் வாழ்ந்து வந்தாலும் தினமும் சுலோச்சனா முதலியார் பாலத்தில் ஏறி ஏறி இறங்குகிறீர்கள் என்பதை உங்கள் நாவலைப் படிக்கும் போது உணர முடிந்தது' என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதை மகிழ்ச்சியுடன் ஆமோதித்து பதில் எழுதினார்.*

*சென்னைக்கு வந்த புதிதில் ஊர் நினைப்பு வந்து வாட்டும்போதெல்லாம் ரொம்பவும் சிரமப்படுவேன். சாலிகிராமத்திலிருந்து கிளம்பி பாரிமுனை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலயத்துக்குச் செல்வேன். அப்போதெல்லாம் கோயம்பேடு பஸ்நிலையம் வந்திருக்கவில்லை. பாரிமுனைக்குத்தான் செல்ல வேண்டும். திருநெல்வேலிக்குச் செல்லும் பஸ்கள் நிற்கும் பகுதிக்குச் சென்று அங்கு சிறிது நேரம் அமர்ந்திருப்பேன். எப்படியும் எனக்குத் தெரிந்த ஒரு திருநெல்வேலி முகத்தையாவது பார்த்து விடுவேன். இல்லையென்றாலும் காது குளிர ஊர் பாஷையைக் கேட்டுவிட்டு திரும்பி விடுவேன்.*

*'ஏட்டி . .இட்லி பார்ஸல் வாங்கிக்கிடட்டுமா?'*

*'இட்லியவே கெட்டி அளுங்கோ . . அதான் நெதமும் முளுங்குதேளே . . ஒரு சப்பாத்தி கிப்பாத்தி வாங்கினா என்ன கொள்ள?'*

*'நம்ம வீட்ல இட்லி வாயில வைக்க மாதிரியாட்டி இருக்கு?'*

*'நல்லா வருது என் வாயில . . . பெறகு ஈரமண்ணையா திங்கியொ . . . அவிச்சுப் போட்டு முடியல . . . பேசுதாவோ பேச்சு . . எவ நல்லா அவிச்சு போடுதாளோ அங்க போயி நிக்க வேண்டியதானே தட்டத் தூக்கிட்டு . . . . .'*

*திருநெல்வேலிக்காரர்கள் சுகவாசிகள். தாமிரபரணித் தண்ணீரும், குறுக்குத்துறைக்காற்றும், நெல்லையப்பர் கோயிலும், இருட்டுக் கடை அல்வாவும் லேசில் அவர்களை அந்த ஊரை விட்டு எங்கும் நகர விடாது. ஒரு சில இளைஞர்களைத் தவிர பெரும்பாலானவர்கள் கூடுமானவரை அந்த ஊரிலேயே இருக்க முனைவார்கள். எஸ்.எஸ்.எல்.சியோ, பிளஸ்-டூவோ முடித்து விட்டு ஆர்.எம்.கே.வி.யில் வேலைக்குச் சேர்ந்தால் போதும். மூவாயிரம் ரூபாய் சம்பளத்தில் ராஜா மாதிரி வாழலாம் என்பார்கள். ஆர்.எம்.கே.வி. வேலை என்றால் கண்ணை மூடிக் கொண்டு பெண் கொடுப்பார்கள் என்பது அவர்கள் நம்பிக்கை. அப்படி நடந்தும் இருக்கிறது. தினமும் தாமிரபரணிக்குச் சென்று குளியல். சனிக்கிழமை கண்டிப்பாக எண்ணெய்க் குளியல் உண்டு. மாலையில் சின்ன வாழையிலையில் சுற்றிய ஐம்பது கிராம் இருட்டுக்கடை அல்வா. கொசுறாகக் கொஞ்சம் காரச்சேவு. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை விடவும் பரப்பளவில் பெரிதான நெல்லையப்பர் கோயிலை ஒரு முறை சுற்றி வந்தால், 'ஆடு மேய்ச்சாப்புலயும் ஆச்சு அண்ணனுக்குப் பொண்ணு பாத்தாப்பிலயும் ஆச்சு' என்பது போல நடைக்கு நடையும் ஆயிற்று. சாமி கும்பிட்ட மாதிரியும் ஆயிற்று. மேற்படி சமாச்சாரங்களில் சிறு வயதிலிருந்தே முங்கிப் பழகிய மீனாட்சி சுந்தரத்திற்கு பட்டப் படிப்பு முடித்தவுடன் சென்னையில் வேலை பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. மறுத்துவிட்டான். சென்னையில் கிடைக்கும் சம்பளத்தில் இரண்டாயிரம் ரூபாய் கம்மியாகக் கிடைத்தாலும் திருநெல்வேலியில்தான் தனக்கு நிம்மதியாக இருக்க முடியும். அதுவே தனக்கு சந்தோஷம் என்று கறாராகச் சொல்லிவிட்டான். 'சித்தப்பா, திருநவேலில இருந்தா நமக்கு மனச்சிக்கலும் கெடையாது. மலச்சிக்கலும் கெடையாது. பெறகு என்ன மயித்துக்கு அசலூருக்கு போகணும்ங்கேன் . . என்ன சொல்லுதிய . . . தச்சநல்லூரைத் தாண்டுனாலே நமக்குக் காய்ச்சல் வந்துரும், கேட்டேளா' என்றான். திருநெல்வேலிக்கு அடுத்த ஊரான தச்சநல்லூர், திருநெல்வேலியிலிருந்து மதுரைக்குப் போகும் வழியில் உள்ளது.*

*நண்பன் குஞ்சு சிறுவயதில், 'இந்த ஊர்ல மனுஷன் இருப்பானாலெ . . நான்லாம் பெரியவனானா*

அமெரிக்கா போயிருவேன்' என்றே சொல்லிவந்தான். அதென்ன அமெரிக்கா என்று கேட்டால், 'பின்னே . . . என்ன இருந்தாலும் நாங்க பிராமின்ஸ்ல்லா' என்று வேண்டுமென்றே நக்கலாக அழுத்திச்சொல்வான். நானும் அவனும் பாளையங்கோட்டையில் ஒரு கடைப்பக்கம் நின்று கொண்டு பெண்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு பதினாறு வயது மதிக்கத் தக்க பையன் கடைக்கு வந்தான். நெற்றியிலும் உடம்பிலும் குழைத்துப் பூசப்பட்ட திருநீற்றுப்பட்டைகள். பிராமணப்பையன் என்பது அந்த நெற்றிப்பட்டையிலேயே எழுதிச் சின்னதாக ஒட்டியிருந்தது. வண்ணமாக இருந்தான். அபோதுதான் வேஷ்டி கட்டப் பழகியிருக்கிறான் என்பது அவனது கவனமான நடையிலேயே தெரிந்தது. வந்தவன் நேரே கடைக்காரரிடம் சென்று அங்கு நின்று கொண்டிருக்கும் மற்றவர்களைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல் சத்தமாக, 'கடக்காரரே, கடக்காரரே . . எனக்கு ஒரு எல்.ஜி.பெருங்காய டப்பா ஒண்ணு குடுங்கோளேன்' என்றான். எனக்கு அவன் அப்படி கேட்டது அடக்க முடியாத சிரிப்பை வரவழைத்தது. உடனே குஞ்சு, ' ஆமா நீ இப்படி சிரிச்சுக்கிட்டே இரி . . .இன்னும் மூணு வருஷத்துல அம்பி அமெரிக்கா போயிருவான்' என்றான். அப்போதெல்லாம் அநியாயத்துக்கு குஞ்சு என்னை கிண்டல் பண்ணுவான். தான் அமெரிக்காவிலிருந்து குடும்பத்துடன் விடுமுறைக்கு வரும் போது நான் திருநெல்வேலியில் ஒரு அழுக்கு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு வெற்றிலை போட்டபடி திண்ணையில் சாய்ந்திருப்பேனாம். அப்போது அவனுடைய மகனிடம் என்னைக் காட்டி, 'பாத்தியா . . இவன்லாம் நான் அமெரிக்கா கௌம்பும் போது இப்படி சாஞ்சு ஒக்காந்தவன். இன்னும் எந்திரிக்கவே இல்லை' என்று சொல்வானாம். காலம் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டு விட்டது. வெற்றிலைக்கு பதில் சிகரட் பிடித்தபடி இப்போது திண்ணையில் சாய்ந்தே இருப்பது அவன்தான். நான் எப்போதாவது ஊருக்குப் போகிறேன்.

பிராமணர்கள் அதிகம் குடியிருக்கும் தெப்பக்குளத் தெருவில் ராமசாமி என்னும் செக்கச்செவேல் நண்பன் ஒருவன் இருந்தான். எங்களை விட ஒன்றிரண்டு வயது சீனியர்.தளதளவென்று உயரமாக இருப்பான். ரஜினி ரசிகன். நெல்லைவாசிகளான பிராமணர்களின் வாயில் பெரும்பாலும் பிராமண பாஷை வராது என்றாலும் ராமசாமியின் வாயிலிருந்து சுத்தமான திருநெல்வேலி பாஷை மட்டுமே கிளம்பும். மறந்தும் வேறு பேச்சு வராது. சொல்றேன் என்பதை நெல்லைக்காரர்கள் சொல்லுதேன் என்பார்கள். வரேன் என்பதை வாரேன் என்பார்கள். ராமசாமி வாரேன் என்பதையும் வருதேன் என்பான். அவனைத் தவிர எனக்குத் தெரிந்து எந்தத் திருநெல்வேலிக்காரனும் வருதேன் என்று சொல்லி நான் கேட்டதில்லை. ராமசாமிக்கும் தச்சநல்லூரைத் தாண்டினால் காய்ச்சல்தான். அது மட்டுமல்லாமல் தனக்குத் தெரிந்த யாராவது திருநெல்வேலியை விட்டு வெளியூருக்கு வேலை தேடிச் சென்று விட்டால் ரொம்பவே ஆத்திரப் படுவான். சுவற்றில் அடித்த பந்தாய் எப்படியும் அவர்கள் திரும்பி திருநெல்வேலிக்கே வருவார்கள் என்று சொல்லிக் கொண்டே இருப்பான். அதன் படியே அவர்களில் யாராவது ஊரை விட்டு இருக்க முடியாமல் திரும்பி ஊருக்கே வந்து விட்டால் ராமசாமிக்கு குஷி அதிகமாகிவிடும். ' யோவ், யாரை கேட்டுய்யா திருநவேலியை விட்டுப் போனீரு . . மறுபடியும் ஒம்ம ஊருக்குள்ள சேக்கணும்னா நெல்லையப்பர் கோயில் வாசல்ல உக்காந்து நீரு செருப்பு தொடைக்கணும்' என்று சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்வான். ராமசாமி இப்போது இருப்பது பட்டுக்கோட்டையில்.

திருநெல்வேலியை விட்டு பட்டுக்கோட்டைக்குச் சென்றுவிட்ட ராமசாமி சுத்தமாக திருநெல்வேலியையும், அதைவிட ஆச்சரியமாக திருநெல்வேலி பாஷையையுமே மறந்து விட்டதாக எல்லோரும் சொன்னார்கள். சில நாட்களுக்கு முன் எனது மொபைல் ஃபோனுக்கு தெரியாத வெளியூர் லேண்ட்லைன் நம்பரிலிருந்து ஓர் அழைப்பு வந்தது. யாராக இருக்கும் என்று தயங்கியபடியே ஹலோ என்றேன்.

'சௌக்யமா? நான் ராமசாமி'

'தெரியலியே . . . எ . .ந்த ராமசாமி?'

'தெப்பக்குளத்தெரு ராமசாமி'

உற்சாகமானேன்.

'ராமசாமி . . . ஏ அப்பா . . .எவ்வளவு நாளாச்சு . . .சௌக்கியமா?'

'நல்லா இருக்கேன். நான் இப்போ பட்டுக்கோட்டையில இருக்கறேன். குஞ்சுக்கிட்டேதான் நம்பர் வாங்கினேன். ரொம்ப நாளாச்சுல்ல நாம பேசி'.

ஸ்டைலாக ராமசாமி பேசியது எனக்கு அந்நியமாக இருந்தது. மகிழ்ச்சி அனைத்தும் வடிந்து சம்பிரதாயமாகப் பேசினேன்.

'திருநவேலிக்கு இப்போதைக்குப் போகலியா ராமசாமி?'

'ம் ம் ம் . . .இங்கேயிருந்து திருநெல்வேலிக்கு எங்கே போறது? ரொம்ப நாளாச்சு'.

திருநவேலியை திருநெல்வேலி என்று சுத்தமாகச் சொல்லும் அளவுக்கு ராமசாமி மாறிவிட்டானே என்று வருத்தமாக இருந்தது. பேச்சை முடிக்கும் எண்ணம் வந்து விட்டது.

'அப்புறம் ராமசாமி . . .மெட்றாஸ் பக்கம்லாம் வாரதில்லையா . . '
'ஒரு ஃபங்ஷனுக்கு வரவேண்டியதிருக்கு. வரும்போது ஃபோன் பண்ணிட்டு கண்டிப்பா நேர்ல பாக்க வருதேன்'.

எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

---

**வாசம்**
கிறிஸ்டி டீச்சர் வீட்டுக்கு டியூஷனுக்குப் போகும் போதெல்லாம் டெட்டால் வாசமடிக்கும். டீச்சரின் தகப்பனார் ஒரு டாக்டரிடம் கம்பவுண்டராக வேலை பார்த்தார். அதனால்தான் டெட்டால் வாசம். இத்தனைக்கும் என் கண்ணுக்கு டெட்டாலோ, வேறேதும் மருந்துகளோ தட்டுப்பட்டதேயில்லை. ராதாகிருஷ்ணன் டாக்டரின் ஆஸ்பத்திரிக்கு காய்ச்சலுக்குக் காட்டப் போகும் போது அங்கு கிறிஸ்டி டீச்சர் வீட்டுவாசமடித்தது. அப்போதுதான் அது ஆஸ்பத்திரி வாசம் என்று எனக்கு பிடிபட ஆரம்பித்தது. ஹைஸ்கூலுக்குப் போன பிறகு நான் கிறிஸ்டி டீச்சரைப் பார்க்கவேயில்லை, இன்றுவரை. ஆனால் ஒவ்வொரு ஆஸ்பத்திரி வாசத்திலும் காட்டன் புடவையணிந்த, ஒல்லியான, எப்போதும் பவுடர் பூசிய கிறிஸ்டி டீச்சரின் முகம் என் நினைவுக்கு வந்து போகிறது.

நண்பன் குஞ்சுவின் வீட்டுக்கு நான்கு வீடுகள் தள்ளி இருக்கிறது, இருட்டு லாலாக்கடை மாமாவின் வீடு. அவர் வீட்டுக்கு அருகேயே இன்னொரு வீட்டில்தான் இருட்டுக் கடை அல்வா தயாராகிறது. குஞ்சுவின் வீட்டைத் தாண்டும் போதே நெய்கலந்த ஒரு இனிப்பு வாசம் சுற்றிச் சுற்றி வரும். பழக்கப்பட்டு விட்டதால் அங்குள்ள ஜனங்கள் அந்த வாசத்தை சட்டை பண்ணுவதில்லை. அந்த வாசத்தைக் கடந்து செல்பவர்களில் யாரேனும் 'ஏ எப்பா, என்னமா மணக்கு' என்று மூச்சை இழுத்துச் சொல்லி வாசம் எங்கிருந்து வருகிறது என்று திரும்பித் திரும்பிப் பார்த்து சென்றார்களானால் அவர்கள் வெளியூர்க்காரர்கள் என்று எங்களுக்கு தெரிந்துவிடும். இருட்டு லாலா மாமாவிடம் ஒரு நாளும் அல்வா வாசமடித்து நாங்கள் பார்த்ததில்லை.

வேறொரு லாலாக்கடையில் சரக்கு போடும் நண்பன் சந்திரஹாஸன் தூரத்தில் வரும்போதே டால்டா வாசம் நம் மூக்கை வந்து முட்டும். 'எல, கட்டையன் வாரான் போலுக்கு' என்பான் குஞ்சு. இத்தனைக்கும் சந்திரஹாஸன் வேலை முடிந்து வீட்டுக்குப் போய் நன்றாகக் குளித்து முழுகி வேறு உடை அணிந்துதான் வருவான். டால்டா வாசம் அவன் உடம்புடனே தங்கிவிட்டது. 'எல, இவன் என்னத்தெ குளிச்சாலும் இந்த டால்டா வீச்சம் போக மாட்டக்கெ'. அவன் காதுக்குக் கேட்டால் கஷ்டப்படுவான் என்பதால் நாங்கள் எங்களுக்குள்ளே பேசிக் கொள்வோம்.

சுருட்டு வாசத்தை எங்களுக்கு முதன்முதலில் காண்பித்தது சண்முகம் பிள்ளை. பேப்பர் போடும் சண்முகம் பிள்ளை நடந்தே திருநெல்வேலியைச் சுற்றி வருபவர். திருநெல்வேலியின் எல்லா தெருக்களிலும் அவரை பார்க்கலாம். மடித்து கட்டிய வேட்டியும், மேல் துண்டும் அணிந்திருப்பார். நெஞ்சோடு அணைத்துப் பிடித்திருக்கும் பேப்பர், புத்தகங்கள். அவர் மார்போடு மார்பாக எங்களின் நாயகர்களான இரும்புக்கை மாயாவி, ரிப் கிர்பி, டெஸ்மாண்ட், மந்திரவாதி மாண்ட்ரேக், லொதார், சுட்டிக் குரங்கு கபிஷ், வேட்டைக்காரன் மாத்தையா என எல்லோரும் சாய்ந்திருப்பர். சண்முகம் பிள்ளையின் வாயில் எப்போதும் சுருட்டு புகைந்து கொண்டிருக்கும். அதை பாதியைச் சவைத்துத் தின்றிருப்பார். பக்கத்தில் வந்தால் நாற்றம் முகம் சுளிக்க வைக்கும்.

'அண்ணாச்சி, இந்த நாத்தத்தை எப்படி குடிக்கியெ? சை . . .'

மூக்கைப் பொத்திக் கொண்டு கேட்போம்.

'நாத்தம் ஓங்களுக்குத்தானடே!'

சுருட்டின் நுனியைச் சவைத்துக் கொண்டே சொல்வார்.

வாழ்க்கையில் காபி குடித்து பழக்கமில்லாத எனக்கு காபி வாசமென்றால் அது ஆறுமுகச் சித்தப்பாதான். நரசுஸ் காபிக்கடையின் மேனேஜராக நீண்ட நாட்கள் வேலை பார்த்த ஆறுமுகம் சித்தப்பாவை நாங்கள் அழைப்பதே 'நரசுஸ் சித்தப்பா' என்றுதான். அந்த காலத்தில் நெல்லையில் புகழ் பெற்ற நாடக நடிகர். கலாட்டா கல்யாணம் படத்து சிவாஜி சாயலில் இருப்பார். பெரும்பாலும் வேட்டி சட்டைதான் உடையென்றாலும் பேண்ட் ஷர்ட்டும் அணிவதுண்டு. பெயருக்கேற்ப சித்தப்பாவின் வேட்டி சட்டையெங்கும் காபி மணக்கும். அதுவும் நரசுஸ் காபி. 'சித்தப்பாவை பக்கத்துல உக்கார வச்சுக்கிட்டு ஒரு தம்ளர்ல சூடா வெந்நி குடிச்சாலும் காபி குடிச்சாப்புல இருக்கும்லா'. நையாகச் சீண்டுவான் கணேசண்ணன். 'ஆனா ஒன்கிட்ட வந்தாலே கிரகப்பிரவேசத்துக்குப் போன மாதிரிலாடே இருக்கு' என்பார் நரசுஸ் சித்தப்பா. கணேசண்ணன் நன்றாகப் படித்து ஏதேதோ வேலை பார்த்து இப்போது வீடுவீடாக வெள்ளையடித்து வருகிறான். சுண்ணாம்பு, பெயிண்ட் என கலந்து கட்டி எப்போதும் ஒரு புது வீட்டுவாசம் அவன் மீது அடிக்கும்.

கோடை விடுமுறைக்கு ஆழ்வார்குறிச்சியில் அம்மையின் வீட்டுக்குப் போகும் போதெல்லாம் நெல் அவித்துக் கொண்டிருப்பார்கள். வெயிலோடு இந்த புழுங்கல் வாடையும் சேர்ந்து கொண்டு ஒருவித கதகதப்பான மணம் வீசும். இப்போது அங்கு நெல்லெல்லாம் அவிப்பதில்லை. ஆனால் அந்த வாசம் மட்டும் அந்த வீட்டிலேயே தங்கிவிட்டதாகத்தான் தெரிகிறது. கல்யாண வீடுகளின் ஆக்குப்புரைகளில் வீசும் சோற்று வாசமும், குழம்புக் கொதியின் வாசமும் எனக்கு ஏனோ நெல் அவிக்கும் வாசத்தோடு சேர்ந்து ஆழ்வார்குறிச்சியின் ஞாபகத்தை ஏற்படுத்தும்.

நண்பன் ராமசுப்ரமணியனின் வீட்டுக்கு எப்போது சென்றாலும் சாம்பிராணி வாசமடிக்கும். அவனது ஆச்சிக்கு சாம்பிராணி வாசமில்லையென்றால் வீட்டில் இருக்கவே பிடிக்காது என்பார்கள். அவ்வளவு பெரிய வீட்டில் ஏதோ ஒரு மூலையில் கொளுத்தி வைக்கப்பட்டிருக்கும் சாம்பிராணியின் புகை வீடு முழுக்க தவழ்ந்து வரும். இப்போது அந்த வீட்டை விற்றுவிட்டார்கள். வீட்டின் முகத்தைத் திருத்தி உள்ளேயும் ஏதேதோ வாஸ்து மாற்றங்கள் செய்து பழமையை இழந்து அந்த வீடு அதே இடத்தில் வேறொரு வீடாய் நின்றுகொண்டிருக்கிறது. உள்ளே சாம்பிராணி வாசம் அடிக்கிறதா என்று போய் பார்க்கவில்லை.

திருநெல்வேலியில் அப்போதெல்லாம் கையிலுள்ள டேப்பைத் தட்டி பாடியபடியே ஒரு சாய்பு வருவார். நீண்ட தாடியுடன் அநேகமாக பச்சை நிற நீள அங்கியும், கூம்புவடிவக் குல்லாவும் அணிந்து கொண்டு வீடு வீடாக வந்து வாசலில் நின்று பாடுவார். காசு கொடுத்தவுடன் தன் தோள்ப்பையிலிருக்கும் விதவிதமான குச்சிகளில் ஒன்றை தேர்ந்தெடுத்து சிறுவர்களுக்குக் கண்மை வரைந்து விட்டு செல்வார். நெருக்கமாக அவரிடம் கண்மை வரைவதற்கு கண்ணைக் காட்டிக் கொண்டு நிற்கும் போது ஒரு வாசமடிக்கும். அப்போது அது என்ன வாசமென்று தெரியவில்லை. 'கண்மைசாய்பு' வாசம் என்றுதான் அதற்கு பெயர் வைத்திருந்தோம். பின்னர் வெகுகாலத்துக்குப் பின் சர்வோதய சங்கத்தில் ஜவ்வாது வாங்கியபோதுதான் 'கண்மைசாய்பு' வாசத்தின் உண்மையான பெயர் தெரிய வந்தது.

குட்டிக்குரா பவுடரை இப்போது நான் எங்குமே பார்க்கவில்லை. சின்ன வயதில் அந்தப் பவுடரின் வாசத்துடனேயேதான் வளர்ந்தேன். ஸ்டேட் பேங்கில் வேலை பார்க்கும் எனது பெரியண்ணன் குட்டிக்குரா பவுடர்தான் போடுவான். எல்லோரையும் போல முகத்துக்கு மட்டுமல்ல. முகம், கழுத்து, கை, கால் என குட்டிகுராவில் குளித்து எழுவான். அவன் பேங்க் முடிந்து தெரு முக்கு திரும்பும் போதே 'பெரியண்ணன் வாரான்' என்று சொல்லிக் கொள்வோம். வயதாக ஆக அவனது முடி முழுதும் கொட்டிப் போக பிறகு குட்டிக்குரா அவனது தலையிலும் இடம் பிடித்து விட்டது. அண்ணனின் புண்ணியத்தில் இத்தனை ஆண்டுகளில் இப்போது நினைத்தாலும் குட்டிக்குரா பவுடரின் வாசத்தை என்னால் உணர முடிகிறது.

ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று என் வீட்டுக்கு வந்த உதவி இயக்குனர் தியாகு 'ஸார், கீழே யார் வீட்டிலயோ இன்னைக்கு மீன் கொழம்பு' என்றான். குஞ்சுவும் இப்படித்தான். யார் வீட்டில் உப்புமா

*கிண்டினாலும் தெருவில் நடந்து போகும் போதே சொல்லிவிடுவான். இதைவிட கொடுமை, எங்காவது கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்தாலே அவன் மூக்கு கண்டுபிடித்துவிடும். அந்த விதத்தில் அவன் ஒரு உசத்தியான நாய். தாமிரபரணியில் குளிக்கும் போது யார் யார் என்னென்ன சோப் போடுகிறார்கள் என்பதை பார்க்காமலேயே சொல்லும் திறன் அவன் மூக்குக்கு உண்டு. மீனாட்சி ஒரு படி மேல். 'சித்தப்பா, அந்த அக்கா தலைக்கு வேப்பெண்ணெ தேச்சிருக்கா' என்பான். தாமிரபரணியை நினைவு கொள்ள எவ்வளவோ விஷயங்கள் இருந்தாலும், லைஃப்பாய் சோப் வாசத்தோடுதான் தாமிரபரணி என் கண்முன் ஓடுகிறது. கூடவே கோபால் பல்பொடி வாசமும். மேலுக்கும், வேட்டிக்கும் லைஃப்பாய் சோப்பையே பயன்படுத்தும் மனிதர்களை நான் அதிகம் தாமிரபரணியில் பார்த்திருக்கிறேன்.*

*சமீபத்தில் ஒரு கல்யாண வீட்டில் கிறிஸ்டி டீச்சரைப் பார்த்ததாக குஞ்சு சொன்னான். முன்னை விட இப்போது டீச்சர் குண்டாகியிருப்பதாகவும், உடன் வளர்ந்த இரண்டு பையன்கள் இருந்தனர் என்றும் சொன்னான். தன்னை அவர்களுக்கு அடையாளம் தெரியவில்லையென்பதால் தான் போய் அவர்களிடம் பேசவில்லை என்றான். 'நீ எப்பவும் சொல்லுவியே, ஆஸ்பத்திரி வாட. அது அவங்ககிட்டெ இல்லயே' என்ற குஞ்சுவிடம், 'அப்படின்னா அது கிறிஸ்டி டீச்சர் இல்ல' என்றேன்.*

---

***வலி***

*இரண்டு தினங்களுக்கு முன் காலை எட்டு மணியளவில் எழுத்தாளர் வ.ஸ்ரீனிவாசன் அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்தார். சாதாரணமாக எப்போதும் பேசும் தொனியில் 'சொல்லுங்க ஸார்' என்றேன். ஆனால் எதிர்முனைக்குரல் பதற்றமாக இருந்தது.*

*'சுகா, இங்கெ பாரதிமணி ஸாரை பாக்க வந்தேன். ஸார் கால்வலியால துடிச்சிக்கிட்டு இருக்கார். அவரால உக்கார, நிக்க, படுக்கன்னு எதுவுமே செய்ய முடியலெ. ரொம்ப சிரமப்படுறார்'.*

*'ஒடனெ வரென் ஸார்'.*

*ஃபோனை வைத்த பதினைந்தாவது நிமிடத்தில் நானும், நண்பர் மனோவும் பாரதி மணி ஸார் வீட்டுக்குச் சென்றோம். (நான், வ.ஸ்ரீ, மனோ, பாரதிமணி அனைவரும் 'எழுத்தும், எண்ணமும்' குழுமத்தில் தொடர்ந்து எழுதி வருபவர்கள்) அதற்குள் வ.ஸ்ரீ ஸார் மாத்திரை வாங்கிக் கொடுத்திருந்தார். எங்களைப் பார்த்ததும் பாட்டையாவுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி. இருந்தாலும் 'என்ன இது. ஒங்க எல்லாரையும் சங்கடப்படுத்துறேனே' என்றார். ஆஸ்பத்திரிக்கு அழைத்தோம். 'பொறுத்துக்கக் கூடிய வலிதான். இப்போ அவசியமில்லை' என்றார். சுமார் ஒருமணிநேரம் அவருடன் இருந்தோம். உயிர்மை வெளியிட்டிருக்கும் பாரதிமணி அவர்கள் எழுதிய 'பல நேரங்களில் பல மனிதர்கள்' புத்தகம் சுடச்சுட வந்திருந்தது. அதில் அவரைப் பற்றி அடியேன், வ.ஸ்ரீ, மனோ மூவரும் எழுதியிருந்தோம். எழுதிய பொய்க்கு தண்டனையாய் ஆளுக்கொரு புத்தகம் கொடுத்தார். வணங்கி வாங்கிக் கொண்டோம். கலை, இலக்கியம், இசை என பல்வேறு திசைகளில் எங்கள் உரையாடல் பயணித்தது. பேச்சு சுவாரஸ்யத்தின் நடுவே பாட்டையா கால் மடக்கி உட்கார்ந்திருந்ததை கவனித்தோம். 'அட, இப்பொ என்னால உக்கார முடியுதே' என்றார். பேச்சில் உற்சாகம் மேலும் கூடியது. அன்றைக்கு நாங்கள் பேசிச் சிரித்த அனைத்து சமாச்சாரங்களும் 'கழுத்தும், கன்னமும்' குழுமத்தில் வரவேண்டியவை.*

*'ஒங்க காலுக்கு ஒண்ணும் இல்லெ ஸார். எதுனாலும் எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க. எந்த ராத்திரியும் எங்கள கூப்பிடறதுக்கு நீங்க தயங்க வேண்டாம்' என்று சொல்லி விட்டு கிளம்பினோம். 'ஆகா, உங்களுக்கெல்லாம் நான் என்ன கைம்மாறு செய்யப் போறேன்'. பாட்டையாவின் குரல் தழுதழுத்தது. மாலையில் மறுபடியும் தொலைபேசிமூலம் விசாரித்துக் கொண்டோம். 'இப்போ கொஞ்சம் தேவலை' என்றார். நேற்று காலை மறுபடியும் வ.ஸ்ரீ அவர்களிடமிருந்து ஃபோன். மணிஸார் இரவு முழுவதும் தூங்காமல் அவதிப்பட்டிருக்கிறார் என்று தகவல் சொன்னார். மீண்டும் நானும், மனோவும் கிளம்பிச் சென்றோம். அழைப்பு மணி அழுத்தி காத்து நின்றோம். கதவை வந்து திறப்பதில் கூட சிரமம் இருந்தது பாட்டையாவுக்கு. 'என்னால முடியலப்பா. என் கால் என் வசமில்ல' என்றார். சுவர் பிடித்தே தன்*

அறைக்குச் சென்றார். சற்று நேரத்தில் வ.ஸ்ரீ அவர்கள் தன் காரை எடுத்துக் கொண்டு வந்துவிட பாட்டையாவை எந்த மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது என்று விவாதித்தோம். சில நண்பர்களிடம் ஃபோன் மூலம் யோசனை கேட்டுக் கொண்டிருந்தோம்.

'நீங்கல்லாம் எனக்குன்னு கௌம்பி வரேளே. எத்தன பேருக்கு இந்த கொடுப்பினை கெடைக்கும்'. பாட்டையா நெகிழ்ச்சியுடன் பேச ஆரம்பித்தார். 'ஒரு மார் வலி, கீர்வலின்னா கௌரமாவாது இருக்கும். கால்வலில செத்துப் போறதுன்னா கேவலம் இல்லையா'. இப்படி இருந்தது அவரது பேச்சு. 'சினிமாலதான் ஆஸ்பத்திரி ஸீனெல்லாம் பாத்திருக்கேன். நானா ஆஸ்பத்திரில இத்தனை வருஷத்துல ஒரு நாளும் அட்மிட் ஆனதேயில்ல' என்றார். 'இப்பவும ஆஸ்பத்திரிக்கு போறதுக்கு நான் சம்மதிக்கறதுக்கு காரணம் அடுத்த வாரம் எனக்கு ஷூட்டிங் இருக்கு. நம்மள நம்பி படம் எடுக்கறான். அவன் செரமப்படக்கூடாது பாரு' என்றார். ரஜினிகாந்துக்கு அப்புறம் இவருக்கு சினிமா மீது இருக்கும் தொழில் பக்தியை நினைத்து கண்ணீர் விட்டேன். 'அளாதெ சுகா, எனக்கு ஒண்ணும் ஆகாது' என்றார் பாட்டையா.

அதுவரை பரணி ஆஸ்பத்திரியா, விஜயாவா என்பது குறித்து எங்களால் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வர முடியாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தோம். 'ஏம்பா, ஆபரேஷன் தியேட்டருக்குள்ளெல்லாம் சினிமாவுல வர்ற மாதிரி எல்லாரும் முகமுடி போட்டுக்கிட்டு பயமுறுத்துவாளா என்ன' என்றார். 'அதெல்லாம் ஒண்ணுமில்ல ஸார். ஒரு அரை மணிநேரம் டென்ஷனுக்கு பெறகு டாக்டர் வெளியில வந்து பெண் குளந்த பொறந்துருக்குன்னு சொல்வார்' என்றார் வ.ஸ்ரீ. 'அத மனோக்கிட்டே வந்து சொல்லி கைகுடுத்து கங்கிராஜுலேஷன்ஸ்ன்னு சொல்வாரில்லையா ஸார்' என்றேன் நான். சிரித்துக் கொண்டே மனோ கிளம்பி எங்களுக்கு முன்னால் விஜயா ஹெல்த் சென்டர் சென்றார்.

சிறிது நேரத்தில் மனோ டாக்டரிடம் பெயரை பதிவு செய்து விட்டு ஃபோன் பண்ணவும் நானும், வ.ஸ்ரீ அவர்களும் பாட்டையாவை மெல்ல மாடிப்படியிலிருந்து இறக்கிக் கூட்டி வந்து வ.ஸ்ரீ அவர்களின் புதிய சான்ட்ரோ காரில் ஏற்றினோம். வடபழனி பஸ்ஸ்டாண்ட் அருகில் வந்தவுடன் என்னுடைய வழக்கமான திசையறிவில் விஜயா கார்டனுக்குள் காரை திருப்பச் சொன்னேன். திசை விஷயத்தில் எனக்கு தாத்தாவான வ.ஸ்ரீயும் உடனே காரை விஜயா கார்டனுக்குள் திருப்ப எத்தனித்தார். எதற்கும் கேட்டு விடுவோமே என்று மனோவுக்கு ஃபோன் பண்ணினேன். 'சரியா போச்சு. ஏன் சுகா, அவர என்ன ரெக்கார்டிங் தியேட்டருக்கா கூட்டிக்கிட்டு போகப் போறோம்? அடுத்த லெஃப்டுல திரும்புங்கய்யா' என்றார் கடுப்புடன்.

விஜயா ஹெல்த் சென்டரை முதன்முறையாக சுற்றிப் பார்த்தபடியே உள்ளே சென்று பாட்டையாவை உட்கார வைத்தோம். வ.ஸ்ரீ அவர்கள் பாட்டையாவுடன் டாக்டரின் அறைக்குள் செல்ல, நானும், மனோவும் வராந்தாவில் நகம் கடித்துக் காத்திருந்தோம். ஸ்கேன் எடுக்கச் சொல்லியிருப்பதாக ஒரு சீட்டுடன் இருவரும் வெளியே வந்தனர். எதிரே இருக்கும் ஸ்கேன் சென்டருக்குச் சென்றால் அங்கு இரண்டு மணிநேரம் காத்திருக்கச் சொன்னார்கள். மணி மதியம் ஒன்றைத் தொட இருந்தது. கேன்டீனுக்குச் சென்று வரலாம் என்று கிளம்பினோம். ஒரே காம்பவுண்ட்டுதான் என்றாலும் கேன்டீனுக்கு கொஞ்சம் நடக்க வேண்டியிருந்தது. பாட்டையாவால் முடியவில்லை. ஒரு ஓரமாக உட்கார்ந்து பைப்பைப் பற்ற வைத்து இழுக்க ஆரம்பித்து விட்டார். 'ஸார், ஹாஸ்பிட்டல் ஸார்' பதறினேன். 'ஸோ வாட்?' என்றார் எகத்தாளமாய். ஒருமாதிரியாக கிளப்பிக் கூட்டிச் சென்றோம். போகும் வழியில் ஒரு வீல் சேர் இருந்தது. இதில் வைத்து தள்ளிச் சென்று விட்டால் என்ன? என்றார் மனோ. அங்கிருக்கும் செக்யூரிடி அதற்கு அனுமதிக்க மறுத்தார். பாட்டையாவோ 'மனோகர் வேற ஆச காட்டிட்டான். நான் இதுவரைக்கும் இந்த வண்டில போனதே இல்ல. வந்தா நான் இதுலதான் வருவேன்' என்று அடம் பிடிக்க ஆரம்பித்தார். இதென்னடா வம்பாப் போச்சு என்று வ.ஸ்ரீ அவர்கள் உள்ளே சென்று அனுமதி வாங்கி வந்தார்.

முணாங்கிளாஸ் பையன் ரங்கராட்டினம் ஏறுவது போன்ற முகபாவத்துடன் சந்தோஷம் பொங்க பாட்டையா வீல் சேரில் அமர, மனோ அதைத் தள்ள ஆரம்பித்தார். நானும், வ.ஸ்ரீ அவர்களும் 'பொன்னை விரும்பும் பூமியிலே' பாடியபடியே பின் தொடர்ந்தோம். 'சுகா, நானும் எத்தனையோ

*வண்டில போயிருக்கென். இந்த வண்டி ரொம்ப நல்லாயிருக்கு. எவ்வளவுன்னு கேட்டு ஒண்ணு வாங்கி போடு. ஆனா டிரைவர் மட்டும் மனோதான். சும்மா சொல்லக் கூடாது. நல்லாவே ஓட்டறான்' என்றார் பாட்டையா. மனோ சிரித்தபடியே தள்ளிச் செல்ல கையில் சாப்பாட்டுக் கூடையுடன் ஒரு பெண்மணி எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்தபடியே தெலுங்கில் ஏதோ முணுமுணுத்தபடி கடந்து சென்றார்.*

*கேன்டீனில் அதிகக் கூட்டமில்லை என்றாலும் வாகாக ஒரு இடம் பார்த்து அங்கு அமர்ந்து கொண்டார் பாட்டையா. காலையில் காபி மட்டும் குடித்திருந்ததால் தனக்கு ஒரு தயிர் சாதம் வேண்டும் என்றார். மனோ காலையிலேயே சாப்பிட்டுவிட்டதால் தனக்கு அவ்வளவாக பசியில்லை என்று சொல்லி ஒரு தயிர் சாதமும், குண்டாக ஒரு சமோசாவும் வாங்கிக் கொண்டிருந்தார். எனக்கும் தனக்கும் கூல்டிரிங்க்ஸ் வாங்க வ.ஸ்ரீ அவர்கள் சென்று விட, நான் மட்டும் பாட்டையாவுடன் அமர்ந்திருந்தேன். சுற்றும் முற்றும் பாட்டையா பார்த்தார். நான் பயந்த மாதிரியே சட்டென்று பைப்பைப் பற்ற வைத்தார். அதற்குள் ஒருவன் ஓடி வந்து 'ஸார், இங்கெல்லாம் சிகரெட் குடிக்கக் கூடாது' என்றான். 'இது சிகரெட் இல்லெப்பா' என்று வம்பு பண்ணினார் பாட்டையா. 'ஐயா, கொஞ்ச நேரந்தான் அந்த எளவெ குடிக்காம இருங்களென். ஒங்களுக்கு கால் வலின்னு காமிக்க வந்துருக்கோம். அத மறந்துராதீங்க' என்றேன்.*

*மனோ இரண்டு பிளேட்டுடன் வந்து அமர்ந்தார். வ.ஸ்ரீ இரண்டு அமுல் ரோஸ் மில்க் பாட்டில்களுடன் வந்தார். ஒன்றை வாங்கிக் கொண்டேன். 'ஸார், நாம ரெண்டு பேரும் ஒண்ணா சேந்து மொதமுறையா குடிக்குறோம் இல்லையா?' என்றேன் வ.ஸ்ரீயிடம். 'ஆமா சுகா. சியர்ஸ்' என்று பாட்டிலை பாட்டிலால் இடித்து கண் சிமிட்டினார் வ.ஸ்ரீ. மேஜையில் இருக்கும் தன் மெடிக்கல் ரிப்போர்ட் ஃபைலின் மேல் ஒரு கையை வைத்துக் கொண்டு தயிர் சாதம் சாப்பிட ஆரம்பித்த பாட்டையா எங்களைப் பார்த்து வாய் விட்டு சிரித்தார். அவருக்கு வலி சரியாகிவிடும் என்று தோன்றியது.*

---

***சின்னப்பையன்***

*சரவணன் என் பால்ய சினேகிதன். தற்போது திரைப்பட விநியோகஸ்தர். படப்பிடிப்பிற்கான சில லொக்கேஷன்கள் தேர்வு செய்ய திருநெல்வேலியைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் அவனுடன் அலைந்து கொண்டிருந்தேன். மூலக்கரைப்பட்டியைத் தாண்டி முனைஞ்சிப்பட்டிக்குள் கார் நுழைந்த போது தற்செயலாக என் மாமனார் 'பெங்களூருவிலிருந்து' போனில் அழைத்தார். நான் முனைஞ்சிப்பட்டியிலிருக்கிறேன் என்பதை சொன்னவுடன் உற்சாகமாகி பக்கத்திலிருக்கும் கஸ்தூரிரங்கபுரம் என்னும் கிராமத்தைப் பற்றிச் சொல்லி அங்கு சென்று பார்த்தால் நான் எதிர்பார்க்கிற சில இடங்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாக சொன்னார். அதோடு நிற்காமல் அங்கு கணபதி என்று ஒரு பையன் இருப்பதாகவும், பிறருக்கு உதவுவதில் அவன் அதிக ஆர்வம் காட்டுபவன் என்றும் சொல்லி அவனிடம் தன் பெயரை சொன்னால் தேவையான உதவிகளை உற்சாகமாகச் செய்வான் என்றும் சொன்னார்.*

*கஸ்தூரிரங்கபுரம் சின்ன கிராமம். அழகாக இருந்தது. மாமனார் சொன்ன பையன் கணபதியின் முகவரியைக் கண்டுபிடிப்பதில் அதிக சிரமம் இருக்கவில்லை. சரியாக கணபதியின் வீட்டு வாசலில் நின்றுகொண்டு 'அம்மா' என்றேன். ஒரு வயதான ஆச்சி வந்தார்கள்.*

*யாரு வேணும் . . .*

*ஆச்சி. . . கணபதி இல்லீங்களா . . .*

கேக்கல . . .

*ஆச்சிக்கு காது கேட்கவில்லை. சரவணன் உடனே சத்தமாக 'கணபதி இருக்கானா' என்றான். யாரு . . ஆச்சியின் குரலில் ஒரு மாற்றம் தெரிவதை கவனிக்காத சரவணன்,'கணபதி இருக்கானா, வெளியே போயிருக்கானா ஆச்சி' என்றான். ஆச்சி உடனே கடும் கோபம் கொண்டு, 'வாரியல கொண்டு அடி . . ஆருல நீ . . எங்கெருந்து வாரே . . ஒரு மரியாத வேண்டாம் . . . சின்னப் பயவுள்ள' என்றார்கள். சரவணன் திகிலடைந்து என்னைப் பார்க்க, நான் என்ன செய்வதென்று புரியாமல் அவனைப் பார்க்க, உள்ளிருந்து ஒரு தாத்தா வந்து, 'வாங்க யாரு நீங்க, நான்தான் கணவதி' என்றார். திக்கித்திணறி என்*

மாமனாரின் பெயரை சொல்லி நான் அவருடைய மருமகன் என்றேன். கணபதித் தாத்தா உடனே பிரகாசமாகச் சிரித்து 'சரியாப் போச்சு. . . அவன் என் கிளாஸ்மேட்லா . . .உள்ளே வாங்க மருமகனே' என்றார். ஆச்சியை காபி கொடுக்க சொன்னார். எங்களைப் பார்த்து முறைத்துக் கொண்டே ஆச்சி உள்ளே சென்றார்கள். பாயை எடுத்துப் போட்டு உட்காரச் சொன்னார்,கணவதித் தாத்தா. தானும் உட்கார்ந்து கொண்டார். ஆச்சி வந்து காப்பி கொடுத்தார்கள். குறிப்பாக சரவணனைப் பார்த்து மருந்துக்கும் சிரிக்காமல். வாங்கும் போது சரவணனின் கைகள், ஆச்சியின் கைகளைவிட நடுங்கின. காபியை குடிப்பதில் சரவணனுக்கு சந்தேகம் கலந்த பயம் இருந்தது. ஒரு மடக்கு குடித்த பிறகு அது காப்பிதான் என்பதை உறுதி செய்து கொண்டு மிச்சத்தையும் குடித்தான்.

இதே போல் ஒரு முறை அம்மையைப் பெற்ற தாத்தாவைப் பார்க்க கிராமத்துக்கு போயிருந்தேன். பேரனைப் பார்த்த மகிழ்ச்சி இருந்தாலும் தாத்தாவின் முகத்தில் எப்போதும் காணப்படும் மலர்ச்சி இல்லை. பேசிக் கொண்டிருக்கும் போதுதான் அதற்கான காரணம் தெரிய வந்தது. தாத்தாவின் ஒன்றுவிட்ட தம்பி 'பரமசிவத்தின்' மரணத்துக்கு போய்விட்டு அப்போதுதான் தாத்தா வந்திருக்கிறார். இறந்து போன தாத்தாவை எனக்கு தெரியுமென்பதால் அதிர்ச்சியும்,சோகமும் அடைந்தேன். ஆறுதலாக கேட்பதாக நினைத்துக் கொண்டு 'பரமசிவம் தாத்தாவுக்கு வயசு இருக்கும்லா' என்றேன். . சே . . அவன் எம்புட்டு பய . . .சின்ன வயசுதான்' . .என்று சொன்னார் தாத்தா. எனக்கு தெரிந்து பரமசிவம் தாத்தாவுக்கு எழுபத்தைந்து வயது. 'சாகிற வயசா அவனுக்கு' . .வருத்தமாகச் சொன்னார் எழுபத்தைந்து வயதுத் தம்பியின் எண்பத்தைந்து வயது அண்ணன்.

சில ஆண்டுகளுக்கு முன் அறிவுமதி அண்ணனின் (பாடல் பெற்ற ஸ்தலமான) புகழ்பெற்ற அறைக்குச் சென்றேன். அங்கு யாரோ ஒரு பெரியவர் ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார். புகைப்படங்களைக் காட்டி அண்ணனிடம்'இது யார் எடுத்தது' என்று அந்த பெரியவர் கேட்க அண்ணன் 'பாலு மகேந்திரா ஸார்' என்றார். உடனே அவர்,'அதானே பார்த்தேன். அவன் எடுத்தால் பின்ன நன்றாக இல்லாமல் எப்படி இருக்கும்' என்றார். நான் உடனே அறிவுமதியின் காதில், 'அண்ணே யாருண்ணே இந்த ஆளு, வாத்தியார மரியாதை இல்லாம பேசுறாரு' என்றேன். பதறிப் போன அண்ணன் என்னை தனியே கூட்டி வந்து, 'தம்பி அவர்தானடா கவிஞர் காசி ஆனந்தன்.நம் வாத்தியாருடைய பள்ளித் தோழர்' என்றார். அன்றளவும் இளமையாக, ஜம்மென்றிருந்த என் வாத்தியாரின் கிளாஸ்மேட் இந்த பெரியவரா என்று வருத்தமாக இருந்தது. இருந்தாலும் மனம் சமாதானமடையாமல் எதற்கும் வாத்தியாரிடம் போய் கேட்டு விடுவோம் என்று கேட்டே விட்டேன். நான் கேட்டதுதான் தாமதம். வாத்தியார் படு உற்சாகமாக 'அப்படியா . . . காசி வந்திருந்தானா . . . நீ பாத்தியா அவனை. உனக்கு தெரியுமா . . அவன்தான் எனக்கு பெண் பார்த்து கல்யாணம் பண்ணி வைத்தான்' என்றெல்லாம் சொன்னவுடன் அது உறுதியாகி மனதுக்கு ஏனோ கஷ்டமாக இருந்தது.

சமீபத்தில் திருநெல்வேலி போயிருக்கும் போது ராதாபுரத்தில் ஒரு நண்பரைப் பார்க்க சென்றிருந்தேன். அங்கிருந்து கிளம்பும்போதுதான் பக்கத்து ஊர் பரமேஸ்வரபுரம் என்பது ஞாபகம் வந்தது. ஆகா,அது நம் மாமனாரின் சொந்த ஊராச்சே,அங்கே போய் வீட்டம்மாவிடம் நல்ல பெயர் வாங்குவோம் என்று அவளுக்கு போன் பண்ணி சொல்லிவிட்டு பரமேஸ்வரபுரத்துக்கு சென்றேன். ஊருக்குள் நுழைவதற்குள் பெங்களூருவிலிருந்து போன். அதற்குள் மகள் சொல்லிவிட்டாள் போல.

சொல்லுங்க மாமா . . ஒங்க ஊருக்குத்தான் போயிக்கிட்டு இருக்கேன்.

சொன்னா சொன்னா . . . ரொம்ப சந்தோஷம் மாப்ளே . . . .அங்கே ஒரு அம்மன் கோயில் இருக்கும். . . அதுதான் எங்க குலதெய்வம். . . .அதுக்கு போகாம வந்துராதீங்க. . . . கோயில் பூட்டியிருந்துதுன்னா அங்கே தனுஷ்கோடின்னு நம்ம பையன் ஒருத்தன் இருப்பான். . . .கோயிலுக்கு பக்கத்துலேயே மூணாவது வீடு. . . . அவன போய் பாருங்க . . .

எனக்கு கஸ்தூரிரங்கபுரம் கணபதி தாத்தா ஞாபகம் வந்தது. தயக்கத்துடன் கேட்டேன்.

மாமா . . . கேக்குறேன்னு தப்பா நெனைக்காதீங்க . . . . இந்த தனுஷ்கோடி உங்க செட்டா . . .இல்ல . . . . . .

உடனே சொன்னார்.

சே சே . . . நீங்க வேற . . .அவன் ரொம்ப சின்னப்பையன் . . ரிட்டயர்ட் ஆகி ரெண்டுமூணு

வருஷந்தான் இருக்கும்.

---

## ஜெயா நீ ஜெயிச்சுட்டே

கீழப்புதுத் தெரு என்று ஏனோ அழைக்கப் படுகிற திருநெல்வேலி டவுணில் உள்ள பாரதியார் தெருவில் ஒரு உச்சினிமாகாளி கோயில் உள்ளது. உழக்கு சைஸிலுள்ள அந்த கோயிலின் கொடைவிழா வருடாவருடம் சித்திரை மாதம் சிறப்பாகக் கொண்டாடப்படும். எந்த ஊரில் இருந்தாலும் அந்த தெருக்காரர்கள் இந்த கொடைக்கு மட்டும் எப்படியாவது வந்து சேர்ந்து விடுவார்கள். இதில் பல பேருக்கு அங்கு வீடே இருக்காது. ஆனாலும் நண்பர்களின் வீட்டில் தங்கிக் கொண்டு கொடை முடிந்ததும் கிளம்பிச் செல்வார்கள். மற்ற சமயங்களில் அவர்கள் வந்தால் தங்க இடம் கொடுக்கும் நண்பர்கள் திரும்பிக் கூட பார்க்க மாட்டார்கள். கொடைக்கு மட்டும் அப்படி ஒரு சலுகை.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிகழ்ச்சி நடக்கும். பட்டிமன்றம் ஒன்றின் நடுவராக ஒருமுறை குன்றக்குடி அடிகளார் வந்திருந்தார். உச்சினிமாகாளிக்கு பூஜை செய்யும் சிதம்பரம் பிள்ளையிடம் அடிகளார் 'தமிழில்தானே பூஜை செய்கிறீர்கள்' என்று கேட்டார். சிதம்பரம் பிள்ளை என்னும் தன் பெயரை சிதம்பாரம்பிள்ளை என்று கொட்டை எழுத்தில் கையெழுத்து போடும் பிள்ளைவாள் வேறு என்ன பதில் சொல்வார். 80 களில் புகழ்பெற்ற கோவை சேரன் போக்குவரத்துக் கழக மெல்லிசைக் குழுவின் கச்சேரி நடந்தது. அதில் பாடிய ஒரு ஸ்டார் பாடகரை ரொம்ப வருடங்கள் கழித்து தேவாவின் குழுவில் கோரஸ் பாடகராக பார்த்தேன். உள்ளூர்ப் பிரமுகர்களின் சொற்பொழிவும் உண்டு. ஒரு எழுத்து மேஜையை முன்னே போட்டு தேங்காப்பூ டவல் விரித்து உட்கார்ந்து பிச்சையா பிள்ளையின் மகன் பூதத்தான் எதைப் பற்றியும் கவலைப் படாமல் சைவ சித்தாந்தப் பேருரை ஆற்றிக் கொண்டிருப்பான். தூக்கம் வராத ஒன்றிரண்டு விதவை ஆச்சிகள் மட்டும் அவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். அவர்களில் இருவருக்கு காது கேட்காது.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் சிஷ்யர் எஸ்.ஆர்.கோபாலின் நாடகம் ஏற்பாடாகியிருந்தது. அதில் போலிஸ் இன்ஸ்பெக்டராக நடித்த நெல்லையைச் சேர்ந்த நடிகர் வசனத்தை மறந்து திரைச்சீலைக்குப் பின் வசன பேப்பரை வைத்தபடி நின்று கொண்டிருந்தவரிடம் 'சொல்லு சொல்லு' என்று கேட்டு நடித்ததைப் பார்த்து சிரித்த நான், பல வருடங்களுக்கு பிறகு திரைப்படப் படப்பிடிப்புகளில் பல நடிகர்களுக்கு தொடர்ந்து வசனம் ப்ராம்ப்ட் பண்ணும் போது ஏற்படும் எரிச்சலினூடே நாடகத்தில் நடிக்கும் கஷ்டத்தை புரிந்து கொண்டேன்.

திருநெல்வேலிப் பகுதியின் புகழ்பெற்ற கணியன் குழுவினரின் மகுட இசை.விரல்களை உருட்டி அறைந்து அடிவயிற்றிலிருந்து அவர்கள் பாடும் உச்சினிமாகாளி கதை, இசக்கியம்மன் கதை, முத்தாரம்மன் வரலாறு போன்றவை நம்மை இழுத்துப் பிடித்து நிறுத்தி விடும். தீச்சட்டி ஏந்தி வரும் சாமி கொண்டாடிக்கு முன்பாக அவர்கள் பாடி வருவார்கள். சில சமயங்களில் காளி வேஷமும் உண்டு. சின்ன வயதில் காளி வேஷம் போட்டவரைப் பார்த்து பல முறை பயந்திருக்கிறேன். ஆனால் மேளக் காரர்கள் வாசிக்கும் அப்போது வந்த சினிமாப் பாடல்களின் தாளத்துக்கு ஏற்ப காளி நடனமாடுவதைப் பார்க்க, பார்க்க பயம் குறைந்து பின் வேடிக்கையாகவே ஆகிவிட்டது.

வருடத்தின் 355 நாட்களில் சீந்துவாரின்றி சாதாரணமாக நடத்தப் படும் அருணாசலம்பிள்ளைதான் சாமி கொண்டாடி. கொடைக்கு கால் நட்ட நாளிலிருந்து பிள்ளைவாளின் நடையே மாறிவிடும். கையில் போட்டிருக்கும் பித்தளைக் காப்புகளை அவ்வப்போது மேலே ஏற்றுவதும், இறக்குவதுமாக இருப்பார். கொடை முடியும் வரை உச்சினிமாகாளி அம்மனாகவேதான் நடந்து கொள்வார். அவரின் தர்மபத்தினியாகிய பிரமு ஆச்சிக்கும் சாமி வரும். அதில் பிள்ளைவாளுக்கு வருத்தமுண்டு. அவர் கம்பீரமாக தன்னை மறந்து ஆடிக் கொண்டிருக்கும் போது வீட்டிலிருக்கும் அவர் மனைவி, சாமி வந்து தலைவிரிகோலமாகக் கோயிலுக்கு ஓடி வந்து நாக்கைத் துருத்திக் கொண்டு தனக்கு போட்டியாக ஆடுவதை எப்படி சகிப்பார்? இங்கும் நிம்மதியாக இருக்க விட மாட்டேங்கிறாளே முண்டை என்கிற நினைப்பில் சாமி என்கிற சலுகையில் பொண்டாட்டியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து போட்டு அடிப்பார்.

நீ எங்கே உள்ளவட்டி . . என் கோயில்ல ஓனக்கென்ன சோலி

சொல்ல மாட்டேன் சொல்ல மாட்டேன்

*சொல்லப் போறியா உன் ரத்தத்த குடிக்கட்டுமா?*

*சுக்கு வெந்நீர் குடித்தாலே விக்கிக் கொள்கிற அருணாசலம் பிள்ளை கேட்பார். இதற்குள் மேளக்காரர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு அடிக்கத் தொடங்க தம்பதி சமேதராக தாளத்துக்குத் தக்க ஆடி முடிப்பார்கள். ஒரு முறை கொடை முடிந்த பின் பிரமு ஆச்சி வந்து கோயில் முன் எதையோ குனிந்து தேடிக் கொண்டிருந்தாள். அருள் வந்து ஆடும்போது, தான் காதில் அணிந்திருந்து எங்கோ விழுந்து விட்ட ஒற்றைத் தோட்டைத்தான் ஆச்சி அழுது கொண்டே தேடினாள் என்பது எங்களுக்கு பிறகு தெரிய வந்தது. அதற்கு அடுத்த வருஷத்திலிருந்து ஆச்சி கவனமாக தோடுகளை கழற்றி வீட்டில் வைத்து விட்டு வந்த பிறகே உச்சினிமாகாளி அவள் மீது வந்தாள்.*
*இத்தனை சுவாரஸ்யங்கள் நடந்தாலும் எனக்கென்னவோ கொடையின் கடைசி நாளன்று தெரு நடுவில் திரை கட்டி காட்டப்படும் திரைப்படங்களில்தான் ஆர்வம். "ஐந்து பூமார்க் பீடி வழங்கும்" என்கிற துணி பேனர் கட்டப் படும்போதே எனக்கு உற்சாகத்தில் வேர்க்கத் தொடங்கி விடும். எப்படியும் ஒரு எம்.ஜி.ஆர். படம் உண்டு. அது போக இரண்டு படங்கள் கண்டிப்பாக திரையிடப்படும். அதில் ஒன்று, இன்றுவரை எனக்கு புதிராக உள்ள 'ஜெயா நீ ஜெயிச்சுட்டே'. வி.சி.குகநாதனின் படம் என்று நினைவு. அவர் மனைவி ஜெயாதான் படத்தின் கதாநாயகி. வருடா வருடம் இந்த படம் திரையிடப்படும். வி.சி.குகநாதனே அந்த படத்தை அத்தனை தடவை பார்த்திருக்க மாட்டார். இந்த படத்தைப் பற்றி குகநாதனைத் தவிர யார்யாரிடல்லாமோ விசாரித்துப் பார்த்து விட்டேன். யாருக்கும் எந்த தகவலும் தெரியவில்லை. எந்த தனியார் தொலைக்காட்சியும் இந்த படத்தை இதுவரை ஒளிபரப்பவில்லை, ராஜ் டிஜிட்டல் பிளஸ் உட்பட. எனக்கு இருக்கிற சந்தேகமே, வி.சி.குகநாதன் ஐந்து பூமார்க் பீடி கம்பெனிக்கென்றே இந்த படத்தை எடுத்து, அதை திருநெல்வேலி கீழப்புதுத் தெரு உச்சினிமாகாளி அம்மன் கோயில் கொடைக்கு மட்டும்தான் திரையிட வேண்டும் என்று எழுதி வாங்கியிருப்பாரோ என்பதுதான்.*

*மற்றொரு படம் ரஜினிகாந்த் நடித்த படமான குப்பத்து ராஜா. அது நெல்லையைச் சேர்ந்த தயரிப்பாளரால் எடுக்கப் பட்டது. அதில் ஒரெ ஒரு காட்சியில் நெல்லையைச் சேர்ந்த ஒரு மனிதர் நடித்திருப்பார். அவர் ஒரு சகல கலாவல்லவர்.நடிகர்.சித்த மருத்துவர். இலக்கிய சொற்பொழிவாளர். நெல்லையப்பர் கோயில் ஆனித் திருவிழாவின் போது நின்றசீர் நெடுமாறன் கலையரங்கில் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களை கண்ணீர்ப் புகையில்லாமலேயே விரட்டி விடும் வல்லமை அவரது சொற்பொழிவுக்கு உண்டு. குப்பத்து ராஜாவில் அவர் வரும் ஒரே காட்சிக்காக ஜனங்கள் காத்திருப்பர். அந்த காட்சியில் அவரது வீட்டின் கதவை ரஜினிகாந்த் தட்டுவார். இவர் கதவைத் திறந்து 'ஆ ஐக்கு நீயா' என்பார். உடனேயே ரஜினி இவர் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவார். மக்களின் கரகோஷத்தைப் பார்க்க வேண்டுமே.*

*சுகா*

---

**கவிஞர் சுகுமாரனும், நானும்.**
*புத்தகக் கண்காட்சிக்கு முதல் முறை நானும், நண்பர் மனோவும் சென்றிருந்தோம். இரண்டாவது முறை நான் சென்ற போது திருமதி.ப்ரீத்தம் வெங்கடேஷ் சக்கரவர்த்தி அவர்களை சந்திக்கும் நோக்கத்துடன் என்னுடன் உதவி இயக்குனர் தியாகு வந்தான். அவன் ப்ரீத்தம் இருக்கும் பகுதிக்குச் சென்றுவிட, நான் எனி இந்தியனுக்குச் சென்றேன். உட்கார்ந்து மும்முரமாக வேலையில் மூழ்கியிருந்த தேவராஜன் என்னைக் கண்டதும் துள்ளி எழுந்து கைகுலுக்கி, 'மொதல்ல உக்காருங்க ஸார்' என்று என்னை அமரவைத்தார். 'ரொம்ப சந்தோஷப்படுத்திட்டீங்க ஸார்'. சிரித்துக் கொண்டே இருந்தார். 'எழுத்தும், எண்ணமும்' குழுமத்தில் நான் எழுதியிருந்த குழுமம் ஓர் உரையாடலைப் படித்து விட்டு அன்று காலையிலேயே என்னை தொலைபேசியில் அழைத்து சிரித்திருந்தார். மீண்டும் அதைப் பற்றியே சொல்லிச் சொல்லிச் சிரித்தார். 'ஸார், நான்ல்லாம் சிரிக்கவே மாட்டேன் ஸார். இன்னிக்கு நீங்க எழுதியிருந்ததப் படிச்சுட்டு அப்படி சிரிச்சேன் ஸார். ரொம்ப சந்தோஷமா இருந்துது. என் கவலையெல்லாம் கொஞ்ச நேரத்துக்கு மறந்தே போச்சு. ரொம்ப சந்தோஷம் ஸார்', மீண்டும் சொன்னார். சிறிது நேரத்திலேயே தியாகு வந்துவிட, தேவராஜனிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினேன்.*

*எனி இந்தியனிலிருந்து கிளம்பி செல்லும் வழியில் கவிஞர் சுகுமாரனைப் பார்த்தேன். ஒரு ஸ்டாலில் நின்று கொண்டிருந்தார். சுகுமாரனை ஒரே ஒருமுறை (சென்ற வருடம் மதுரை புத்தகக் கண்காட்சியில்) பார்த்திருக்கிறேன். மற்றபடி அவருக்கும், எனக்கும் மின்னஞ்சல் நட்பு மட்டுமே உண்டு. தொலைபேசியில் கூட பேசியதில்லை. தான் சென்னையில் இருக்கும் விவரத்தை அன்று காலைதான் எனக்கு மின்னஞ்சலில் சொல்லியிருந்தார், சுகுமாரன். சட்டென்று அவரிட்ம போய் பேசுவதற்கு தயக்கமாக*

இருந்தது. அதுபோக அவர் சுகுமாரன் தானா என்பதிலும் எனக்கு சந்தேகம் இருந்தது. நண்பர் ஹரன் பிரசன்னாவுக்கு ஃபோன் பண்ணினேன்.

பிரசன்னா . . .
யாரு?
யாரா? யோவ், நாந்தான்யா சுகா . . .
அண்ணாச்சி மன்னிச்சுக்குங்க . . . . ஃபோன் தொலைஞ்சு போனதுல நம்பரெல்லாம் போயிட்டு . . .சொல்லுங்க . .
கவிஞர் சுகுமாரன் வந்துருக்காரா?
தெரியலயே . . . வந்துருப்பாராயிருக்கும். ஏன் கேக்கியெ?
இல்ல . . . இங்கெ புதுகைத் தென்றல்ன்னு ஒரு ஸ்டால் முன்னாடி நிக்காரு. அவர்தானான்னு எனக்கு ஒரு டவுட்டு . . .அதான் கேக்கென்.
இவ்வளவுதானெய்யா. கொஞ்சம் இரிங்க. அவரு ஃபோன் நம்பர் தாரென். பேசி கன்ஃபர்ம் பண்ணிட்டு அப்புறம் போய் பேசுங்க.
சரி. குடுங்க.
ஒரு நிமிஷம். . . . . . . . . . அண்ணாச்சி, அவரு ஃபோன் நம்பரையும் தொலச்சுட்டேன் போலுக்கெ. வைங்கய்யா ஃபோன.

இன்னொரு முறை எட்டிப் பார்த்தேன். சுகுமாரனுக்கும் நான் அவரை பார்ப்பது தெரிந்து விட்டது. நைசாக என்னைப் பார்க்க ஆரம்பித்தார். நான் தியாகுவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேறு பக்கம் நகர்ந்தேன். 'தியாகு, அந்த ஸார்கிட்டெ போயி அவரு கவிஞர் சுகுமாரனான்னு கேளேன்' என்றேன். தியாகு முன்னோக்கி நகரவும் ஒரு யோசனை. அவனை ஒரு நிமிஷம் நிற்கச் சொல்லிவிட்டு தேவராஜனுக்கு ஃபோன் பண்ணி நான் நிற்கும் இடத்துக்கு வரச் சொன்னேன். தேவராஜனிடம் சுகுமாரனைக் காண்பித்து கேட்கவும், 'சுகுமாரன் ஸார்தான். எனக்கு நல்லா தெரியுமே' என்றார். 'அப்போ நான் போயி பேசலாங்கரீங்களா?' தயக்கத்துடன் நான் கேட்கவும், 'ஸார், உங்களுக்கு யோசனையா இருந்தா நான் வேணா வந்து பேசி உங்களை அறிமுகப்படுத்தட்டுமா?' என்றார். தியாகு எரிச்சலடைந்தான். 'ஸார், இதுக்கு போயி ஏன் ஸார் இவ்வளவு தயங்குறீங்க? வாங்க ஸார், நாமளே போய் பேசலாம்' என்றான். தேவராஜனுக்கு நன்றி சொல்லி அனுப்பிவிட்டு, நானும், தியாகுவும் கவிஞர் சுகுமாரனை நோக்கிச் சென்றோம்.

பதினைந்து இருபது நிமிடங்களுக்கும் மேலாக எங்களின் அலைக்கழிப்பை கவனித்துக் கொண்டிருந்த சுகுமாரன், நாங்கள் அவரை நெருங்கவும் குத்துமதிப்பாக புன்முறுவல் பூத்தபடி எங்களை எதிர்நோக்கினார். நேரே அவரிடம் சென்று நான் கையை நீட்டவும், அவரும் சிரித்தபடி கை பற்றி குலுக்கினார். முகத்தில் மட்டும் குழப்ப ரேகை. நானேதான் பேச ஆரம்பித்தேன்.

'கவிஞர் சுகுமாரன்?'
'நீங்களா?'
'நான் உங்கள கேட்டேன். நீங்க கவிஞர் சுகுமாரன்தானே?'
'இன்னிக்கு மட்டுமே நாலஞ்சு பேரு கேட்டுட்டாங்க. அதுல ரெண்டு பேரு லேடீஸ்'.
எனக்கு ஒன்றும் புரியவில்லை. தியாகு என் சட்டையைப் பிடித்து இழுத்தான்.

'ஸார், போயிரலாம்'.
சுகுமாரன் தொடர்ந்தார்.
'பரவாயில்லை. நீங்களே என்கிட்டெ வந்து பேசுனதால ஒங்களுக்கு என்னோட அன்புப் பரிசு.'
ஒரு கவிதைப் புத்தகத்தை எடுத்து கொடுத்தார். அந்த புத்தகத்தின் பெயர் 'இரவின் நரை'. எழுதியவரின் பெயர் 'பிச்சினிக்காடு இளங்கோ' என்று போட்டிருந்தது.

புத்தகத்தை வாங்கிக் கொண்டு பிச்சினிக்காடு இளங்கோவுக்கு நன்றி கலந்த வணக்கத்தை கண்கலங்கச் சொல்லிக் கொண்டு கிளம்பினோம். நேரே கிழக்கு பதிப்பகத்தைத் தேடிச் சென்றேன். தூரத்திலிருந்து பார்க்கும் போதே இரண்டு நாற்காலிகள் போட்டு பிரசன்னா உட்கார்ந்திருப்பது தெரிந்தது. மூச்சிரைக்க சுகுமாரனை சந்தித்த கதையை பிரசன்னாவிடம் சொன்னேன். 'அய்யோ அண்ணாச்சி, என்னால தாங்க முடியலியே. அநியாயத்துக்கு அசிங்கப்பட்டிருக்கியளே' கைகொட்டி உடல் குலுங்கச் சிரித்தார் பிரசன்னா. ஓங்கி ஒரு குத்து குத்த வேண்டும் போலிருந்தது. அவ்வளவு பெரிய பிரதேசத்தில் எந்தப் பகுதியில் குத்துவது என்று தெரியாமல் என் கண்கள் களைத்தன. 'போதும்யா, ரொம்பவும் சிரிக்காதேரும்.

நான் வாரேன்'. கோபத்துடன் நான் திரும்பி நடக்கும் போது பின்னால் சிரிப்பொலி கேட்டுக் கொண்டுதானிருந்தது.

என்னை வீட்டில் விட்டுவிட்டு தியாகு கிளம்பும் போது அவனிடம் மெல்ல சொல்லிப் பார்த்தேன். 'நீ வேணா இந்த புஸ்தகத்த கொண்டு போயி படிச்சு பாரேன். நல்ல் . . .லா . .த்தான் இருக்கும்னு நெனைக்கிறேன்'
'இல்ல ஸார். நான் மெடிஸின் சாப்பிட்டுக்கிட்டு இருக்கேன். இன்னோரு நாள் வாங்கிக்கிறேன்'. தியாகு கிளம்பிப் போனான். 'இரவின் நரை' புத்தகத்தின் பின்னட்டையைப் பார்த்தேன். பிச்சினிக்காடு இளங்கோ என்னைப் பார்த்து சிரித்தபடி இருந்தார்.

---

**முருகன்சாமி பேரு**

கணவன் பெயரை சொல்லாத மனைவிமார்கள் இப்போதும் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. அப்படி இருந்த ஆச்சிகள், அத்தைகள், அக்காக்கள், மதினிகள், சித்திகள் என்று பலரை நான் பார்த்திருக்கிறேன். இதில் ரொம்பவும் அந்தக் காலத்துப் பெண்கள் பழமையில் ஊறி மற்றவர்களைப் படுத்துவார்கள். தாத்தாவின் பெயரான சுப்பையாவில் சுப்பு என்று வருகிறதாம். அதற்காக ஆச்சி உப்பு என்று சொல்வதற்குக் கூடத் தயங்கி லவங்கம் என்பாள். மூச்சுக்கு மூச்சு தன் கணவர் செய்யும் சகல விஷயங்களையும் விமர்சித்து பேசும் மனோன்மணி அத்தைக்கு மாமா மேல் ஏதேனும் கொஞ்சமாவது மரியாதை இருக்கிறதா என்று எங்களுக்கெல்லாம் சந்தேகம் உண்டு. ஆனால் அவளுமே கூட அவர் பெயரை உச்சரிக்கமாட்டாள். 'உங்க வாத்தியார் மாமா இருக்காகளே' என்றுதான் சொல்வாள். அவள் மாமாவைப் பேசும் பேச்சுக்கு அவர் பெயரை சொல்வதால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. இதை ஒருமுறை அவளிடமே சொன்னதற்கு 'எல, எங்க அம்மை என்னை அப்படியா வளத்திருக்கா?' என்று கடுங்கோபம் கொண்டாள்.

தாத்தாக்களின் பெயர் விடப்பட்ட பேரன்களின் மேல் இந்த ஆச்சிகளுக்கு இருக்கும் பிரியம் சொல்லி மாளாது. அவர்களை ஒரு வார்த்தை சொல்ல விட மாட்டார்கள். பெற்ற தாயாக இருந்தாலும் அந்தப் பயல்களை அவள் ஒன்றும் சொல்லிவிட முடியாது. 'அந்த மனுஷன் பேரை விட்ட பயலை இப்படி தாறுமாறா பேசலாமா, நீயே சொல்லுளா' என்று ஊர் முழுவதும் அந்தக் கேஸை எடுத்துக் கொண்டு கிளம்பிவிடுவார்கள் ஆச்சிகள். இத்தனைக்கும் ' எல, இங்கெ வா' என்றுதான் அம்மை சொல்லியிருப்பாள். இறந்து போன தன் புருஷனை, தன் கண் முன்னால் தன் மருமகள் அவமானப் படுத்திவிட்டதாகவே ஆச்சி நினைப்பாள். இந்த பிரச்சனை சில சமயங்களில் பெரிய குடும்பச் சண்டையாக மாறிவிடுவதும் உண்டு. ஊரிலிருந்து வரும் மகளிடம் ஆச்சி சொல்லி அழுவாள். ' நல்ல வேளை. இதையெல்லாம் பாத்து அசிங்கப்படாம ஒங்க அப்பா போய் சேந்தா. ஏந்தலையெளுத்து. இந்த எளவையெல்லாம் பாக்கணும்னு இருக்கு. ஒன் தம்பியும்லாம்மா பொண்டாட்டி பேசுத பேச்சைக் கேட்டுக்கிட்டு வாயில மண்ணைப் போட்டுக்கிட்டு இருக்கான்'.

ஆச்சிக்கு அப்புறம் நான் அப்படி பார்த்தது பெரியம்மையைத்தான். பெரியம்மையின் பெயரிலேயே பெரியப்பாவின் பெயரும் இருந்தது. பெரியப்பாவின் பெயர் சங்கரன். பெரியம்மையின் பெயர் சங்கரவடிவு. சங்கரன்கோவிலைக் கூட தவசுக் கோயில் என்றுதான் சொல்வாள். உன் பேரு என்ன பெரியம்மை என்று நான் சிறுவனாக இருந்த போது கேட்டதற்கு 'பாவி' என்று அவள் பதில் சொன்னது இன்னமும் நினைவிருக்கிறது. முப்பத்தைந்து வயதில் நான்கு பிள்ளைகளுடன் விதவையாகிப் போன ஒரு பெண்மணி அப்படித்தானே சொல்வாள். சின்ன பெரியப்பாவின் மகன் ஒருவனின் பெயரும் சங்கரன். அவன் சமஸ்திபூரில் பிறந்தான். அதனால் அவனை பெரியம்மை 'சமத்திபுரான்' என்று அழைப்பாள். எங்கள் தலைமுறையில் எங்களுக்கெல்லாம் மூத்த அண்ணனுக்கு தங்கள் மாமனாரின் பெயர் என்பதால் பெண்கள் எல்லோருக்கும் அவன் 'பெரியவன்'தான். எங்களுக்கு பெரியண்ணன்.

இன்னும் சில சுவாரஸ்யங்கள் உண்டு. தன் கணவனின் மூத்த சகோதரனின் பெயரையும் சில பெண்கள் சொல்ல மாட்டார்கள். 'ஒங்க பேங்க் பெரியப்பாவைக் கேக்காங்க பாரு' என்பாள் அம்மா. 'வாத்தியார் அத்தான் நேத்து வந்தாக' என்பாள் இன்னொரு பெரியப்பாவை. இன்னும் சில வீடுகளில் கொழுந்தனுக்கும் இந்த மரியாதை உண்டு. மிகச் சமீபத்தில் என் நண்பன் சரவணனுக்கு ஃபோன் பண்ணினேன். அவன் மதினி ஃபோனை எடுத்து 'கொளுந்தன் குளிக்காங்க. நீங்க யாரு பேசுதீங்க?' என்றார்கள். அவன் வீட்டுக்கு நான் போயிருந்த போதும் அவனை கொழுந்தன் என்றுதான் அழைத்தார்கள். சரவணனும் அந்த மதினியிடம் தன் தாயை விடவும் மரியாதையாக, பிரியமாக நடந்து கொண்டதை பார்த்தேன். சரவணனின் அண்ணன் உயிருடன் இல்லை.

மகளைக் கட்டிய மருமகனிடம் மாமியார்கள் நடந்து கொள்வதில் பல வேடிக்கைகள் உண்டு. மருமகனின் பெயரை உச்சரிக்காமல் இருப்பது மட்டுமில்லை. மருமகனுக்கு முன்னால் மாமியார்கள் வந்து விடமாட்டார்கள். மருமகன் முன் வாசலில் இருந்தால் மாமியார் பின் வாசலை விட்டு வரவே மாட்டார். சாப்பிட வந்தால் அடுக்களைக்குள்ளேயே இருப்பார். மகளும் காலமாகிவிட்டாள். பேரன்களுக்கு திருமணமாகி அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்துவிட்டனர். ஆனால் இன்னமும் அம்மையைப் பெற்ற ஆச்சி என் அப்பாவுக்கு முன் வந்து விட மாட்டாள். மருமகன் சாப்பிட வரும் போது மெல்ல எழுந்து அடுக்களைக்குள் சென்று விடுவாள் எண்பத்தைந்து வயது மாமியார்.

எங்கள் குடும்ப வழக்கமாக இப்படி பெண்கள் நடந்து கொள்வதை உதவி இயக்குனரும், தற்போது விளம்பர மாடலாகவும் இருக்கிற தோழி காமேஷ்வரியிடம் ஒருமுறை சொன்னேன். அவள் நம்பவில்லை. 'வேண்டுமானால் உன் அம்மா, பாட்டியிடம் கேட்டுப் பார். அவர்களுக்கு இந்த வழக்கம் பற்றி தெரிந்திருக்கலாம்' என்றேன். மறுமுறை சந்தித்தபோது சொன்னாள். ' டேய், நீ சொன்ன மாதிரி எங்க குடும்பத்துல முன்னாடி இருந்ததாம். ஆனா ராஜீவோட பாட்டி இப்பவும் அவ ஹஸ்பண்ட் பேரை சொல்ல மாட்டாங்களாம்' என்றாள். ' நீ அவங்களைப் பாத்தியா' என்றேன். 'இல்லை. ராஜீவ்தான் சொன்னான்' என்றாள். ராஜீவ் அவள் கணவன்.

நண்பன் ராமசுப்ரமணியனுக்கு சொந்தமான பல வீடுகளில் ஒரு வீட்டில் குடியிருந்தார்கள், வேலாயுதம் அண்ணனும், கனகு மதினியும். சீட்டுக் கம்பெனியில் வேலை பார்த்து வந்த வேலாயுதம் அண்ணன் 'அச்சமில்லை அச்சமில்லை' ராஜேஷ் மாதிரியே இருப்பார். சைக்கிளில்லாத வேலாயுதம் அண்ணனை நான் ஒரு நாளும் பார்த்ததில்லை. அவர் வேலைக்குப் போயிருந்த சமயத்தில் வாக்காளர்கள் பெயர் சரி பார்க்கும் பணிக்காக வந்தவர் கனகு மதினியிடம் அவள் கணவன் பெயரைக் கேட்டு முழி பிதுங்கிப் போராடிக் கொண்டிருந்தார்.

'அதான் சொல்லுதெம்லா முருகன்சாமி பேருன்னு.'

'எம்மா, இதையே சொல்லிக்கிட்டிருந்திய்யென்னா எப்படி? சண்முகமும் இல்லெங்கியெ. கந்தன், சுப்ரமணியனும் இல்லை. அப்பெ நான் எப்படிம்மா கண்டுபுடிக்க?'

நானும், ராமசுப்ரமணியனும் அந்தப் பக்கமாகச் செல்ல கனகு மதினி ராமசுப்ரமணியனைப் பார்த்து, ' எய்யா, நல்லாயிருப்பெ. ஒங்க அண்ணன் பேரை சொல்லு' என்றாள். ராமசுப்ரமணியன் சொல்லவும் அந்த மனிதர், நிம்மதிப் பெருமூச்சு விட்டு, 'இது எனக்கு தோணாமப் போச்சே. எம்மா, குடிக்கக் கொஞ்சம் தண்ணி குடுங்க' என்றபடியே மதினி வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். கனகு மதினி ஒரு சொம்பில் மோர் கொண்டு வந்து கொடுத்தாள்.

வேலாயுதம் அண்ணனுக்கும், கனகு மதினிக்கும் மூன்று பெண் குழந்தைகள். வேலாயுதம் அண்ணனின் சொற்ப சம்பாத்தியத்தை மட்டும் வைத்துக் கொண்டு குடும்பம் நடத்துவதில் கனகு மதினிக்கு கடும் சிரமம் இருந்தது. வீட்டிலேயே சின்ன அளவில் இட்லி வியாபாரம் செய்து வந்தாள். மரப்பொடி, மண்ணெண்ணெய் அடுப்பு வைத்திருந்தாள். கேஸ் அடுப்புக்கு விண்ணப்பித்துக் காத்திருந்தாள். ஒரு நாள் ராமசுப்ரமணியனின் வீட்டுக்கு, வேலாயுதம் அண்ணன் வேலை பார்த்து வந்த சீட்டுக் கம்பெனியிலிருந்து தகவல் ஒன்று வந்தது. சென்ட்ரல் தியேட்டர் பக்கம் ஒரு லாரியின் அடியிலிருந்து வேலாயுதம் அண்ணனின் நொறுங்கிப் போன சைக்கிளை எடுத்த போது ராமசுப்ரமணியனோடு, நானும் போய்ப் பார்த்தேன்.

ராமசுப்ரமணியனின் வீட்டுக்குப் பின்புறமே கனகு மதினி குடியிருந்தாள். அதற்கு பக்கத்தில் உள்ள காலி மைதானத்தில் நாங்கள் வாலிபால் விளையாடி வந்தோம். நானும், ராமசுப்ரமணியனும் ஆளுக்கொரு கம்பத்தில் ஏறி வாலிபாலுக்கான நெட் கட்டிக் கொண்டிருந்த போது கனகு மதினி கேஸ் சிலிண்டர் போடும் பையனிடம் கத்திக் கொண்டிருந்தாள். வேலாயுதம் அண்ணன் இறந்த பின் நாங்கள் கனகு மதினியின் முகம் பார்த்துப் பேச முடியாமல் தவி(ர்)த்து வந்தோம். அதனால் அவள் பக்கம் போகவில்லை. சிலிண்டர்க்காரன் சொன்னான்.

'என் கையில இருக்கிற லிஸ்ட்படிதான்மா நான் சிலிண்டர் போட முடியும். நீங்க கேக்கறதுக்காகல்லாம் குடுக்க முடியாது.'

'காலையில ஒங்க ஆபீஸ்ல இன்னைக்கு எப்படியும் ஒங்களுக்கு சிலிண்டர் வந்துரும்னு சொல்லப் போயிதான் கேக்கேன். சும்மா கேக்கதுக்கு நான் என்ன கோட்டிக்காரியா?'

'சரி. இருங்க. என் கையில இருக்கான்னு பாக்கேன்'.

தோளிலிருந்த சிலிண்டரை கீழே இறக்கி வைத்து விட்டு தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து சீட்டுகளை எடுத்தான்.

'பேரு சொல்லுங்க'.

'எஸ்.வேலாயுதம்' என்றாள் கனகு மதினி.

---

**Giant வீல்**

அரசுப் பொருட்காட்சி பொதுவாக திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஆனிமாதம்தான் நடத்தப்படும்.வேறு பொழுதுபோக்குக்கு வழியேயில்லாத நெல்லை மக்கள் பொருட்காட்சிக்கு தினமும் வருவார்கள்.குறிப்பாக பெண்களுக்கு அபூர்வமாக வெளியே சுற்றும் தருணம் வாய்ப்பதால், பார்த்த விஷயங்களையே மீண்டும் மீண்டும் பார்ப்பதில் அலுப்பு ஏற்படுவதில்லை.தேரோட்டம் பார்ப்பதில் கூட அவர்களுக்கு அவ்வளவு ஆர்வமிருக்காது.வைகாசி மாதமே அவர்களிடம் பொருட்காட்சி பற்றிய எதிர்பார்ப்பு வந்துவிடும்."எக்கா,இந்த வருசமாவது பொருள்காட்சி போடுவானா . . இல்ல போன வருசம் மாதிரி த்ராட்டுல விட்டுருவானா" . . . . "இந்த வருசம் கண்டிப்பா உண்டுமாம் . . ஒங்க அத்தான் சொன்னா . . ."

பொருட்காட்சித் திடலில் சாமான்கள் வந்து இறங்கி பந்தல் வேலைகள் ஆரம்பமான உடனேயே ஊருக்குள் உற்சாகம் பரவ ஆரம்பித்து விடும்.குற்றால சீஸனும்,ஆனித்திருவிழா கொண்டாட்டங்களும்,பொருட்காட்சியும் திருநெல்வேலி ஊரை வேறு ஊராக மாற்றிவிடும்.பணமுள்ளவர்கள் பொருட்காட்சிக்குள் ஸ்டால் எடுப்பார்கள். வேலையில்லாத இளைஞர்கள்,வயதுப் பெண்கள் அந்த தற்காலிக ஸ்டால்களில் வேலை செய்வார்கள்.

தூரத்தில் இருந்து பார்க்கும் போதே பொருட்காட்சி நடக்கும் இடத்தை ராட்சத ராட்டினம் என்னும் Giant wheel காட்டிக் கொடுத்து விடும்.அப்போதைய முதல்வரின் ஆளுயர கட்டவுட்டுக்கள் பொருட்காட்சித் திடலின் நுழைவுவாயிலில் நம்மை வரவேற்கும்.பொருட்காட்சியில் மட்டுமே நாங்கள் காணக் கிடைக்கிற பேல் பூரி,பானி பூரி வகையறாக்கள் வாசனையோடு சுண்டி இழுக்கும்.பானி பூரிக்கு ஆசைப் பட்டு,எது பேல் பூரி,எது பானி பூரி என்ற வித்தியாசம் தெரியாமல், வருடா வருடம் மிகச்சரியாக பேல் பூரியை வாங்கி திணறலோடு தின்போம்.

"இன்றோடு சென்றுவிடு",வசந்தத்தைத் தேடி" போன்ற நாடகங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கும்.டில்லி அப்பளம் வாங்கி தின்றபடியே நடந்து செல்பவர்கள் போகிற போக்கில் அந்நாடகங்களை ஒரு பார்வை பார்த்த படி செல்வர்.எல்லா அரசுத் துறை அரங்குகளிலும் வேகவேகமாக சுற்றி விட்டு வெளியே வரும் இளைஞர்கள்,சுகாதாரத் துறையில் மட்டும் அதிக நேரம் செலவிடுவர்.குடும்பக்கட்டுப்பாடு பற்றிய சில மருத்துவ புகைப்படங்களைப் பார்த்து அறிவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவர்.வேளாண்துறை பக்கம் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.சிறிய தொலைக்காட்சிப் பெட்டிகளில் பீலிசிவம்,என்னத்த கன்னையா போன்ற டிரேட்மார்க் நடிகர்கள் நடித்த அரசாங்கக் குறும்படங்கள் பார்ப்பாரின்றி ஓடிக் கொண்டிருக்கும்.குறிப்பாக ஹெரான் ராமசாமி நடித்த குமரிக்கண்டம் விளக்கப் படம் போடும் பகுதியில் ஜனநடமாட்டமே இருக்காது.

அம்மாவுக்கு எப்போழுதுமே பொருட்காட்சிக்கு போனால் giant wheel இல் ஏறி சுற்ற ஆசை.தைரியமெல்லாம் கிடையாது.பல்லைக் கடித்துக் கொண்டே பயந்தபடி அந்த த்ரில்லை அனுபவிக்க வேண்டும் அவளுக்கு.தான் பயந்தாலும்,பயப்படும் மற்றவர்களை கேலி செய்வதும் உண்டு.அம்மா இறந்த பிறகு அவள் நினவாகத்தானோ என்னவோ எனக்கும் giant wheel மேல் ஒரு காதல்.Giant wheel இல் ஏறிச் சுற்றுவது போக யார்யாரெல்லாம் பயப்படுகிறார்கள் என்று வேடிக்கை பார்ப்பது ஒரு பழக்கமாகவே ஆகிவிட்டது.

சுந்தரம்பிள்ளை பெரியப்பா கமிஷன் கடை வைத்திருந்தார்.சிவதீக்ஷை எடுத்திருந்ததால் தினமும் சிவ

பூஜை பண்ணுபவர்.உட்கார்ந்தால்,எழுந்தால்,படுத்தால் சிவநாமம்தான்.கழுத்து வழியாக போடும் அந்த கால தொள தொள சட்டையும்,வேஷ்டியும்தான் உடை.அசப்பில் டி.எஸ்.பாலையா மாதிரியே இருப்பார்.வேர்க்கும் போதெல்லாம் 'V' cut உள்ள சட்டையின் கீழ்ப் பகுதியை இரண்டு கைகளாலும் பிடித்து விசிறியாக மேல் நோக்கி வீசிக் கொள்வார். சின்னப் பையனான என்னை பொருட்காட்சிக்கு அழைத்து போகும் பொறுப்பை ஒரு நாள் அவர் ஏற்றுக் கொண்டார்.கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தார்.எல்லா அரங்குகளுக்கும் சென்றோம்.இந்து அறநிலையத் துறையில் மட்டும் அதிக நேரம் ஆனது.மரணக்கிணறு பார்த்தே தீர வேண்டும் என்றார்."உயிரைக் கொடுத்து மோட்டார் சைக்கிள் ஓட்டுதான். . . அவனுக்கு துட்டு குடுத்தா புண்ணியம். . ." பக்கத்திலேயே giant wheel.என் முகத்தை பார்த்து என் ஆசையை புரிந்து கொண்டார்.நிறைய செலவழித்து விட்டாரே என்று நானாக கேட்கவில்லை.
"ராட்டுல ஏறணுமாடே" . . . . .

"பரவா இல்ல பெரியப்பா வேண்டாம்" . . .

"அதான் உன் மூஞ்சியே சொல்லுதே . . .வா ஏறுவோம் . . .பயப்பட மாட்டயே . . . . . ."
Giant wheel இல் ஏறும்வரை பேசிக் கொண்டிருந்த பெரியப்பா,ஏறி அமர்ந்தவுடன் 'சிவாயநம' என்று சொல்லிவிட்டு அமைதியாகிவிட்டார்.சுற்ற ஆரம்பிக்கும் முன்பே கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டார்.ஆட்கள் நிறைந்தவுடன் பெல் அடித்து சுற்ற ஆரம்பித்தது.ஒரு சுற்றிலேயே பெரியப்பா கதறலுடன் ". . ஏ . . .நிறுத்து . . .சின்னப்பையன் பயப்படுதான்" என்றார்."எனக்கு ஒண்ணும் பயமில்ல பெரியப்பா . . ஜாலியாத்தான் இருக்கு" . . . "எல . . .நிறுத்தப் போறியா இல்லியால" . . . .ராட்டுக்காரனுக்கு காதில் விழவில்லை."எல . .அய்யா . .நல்லாயிருப்ப . . .கூட துட்டு தாரேன் . . .எறக்கி விடு" . . . வெட்கத்தை விட்டு லேசாக அழுது பார்த்தார்.வேகம் எடுத்தது.இனி கத்தி பிரயோஜனமில்லை என்பது தெரிந்து போனது.கீழிருந்து மேலே போகும்போது சிவநாமமும்,மேலிருந்து கீழே வரும் போது மலச்சிக்கல் முக்கலுமாகத் தொடர்ந்தார்.சுற்று முடிந்தது.சிரிப்பை அடக்கியபடி உட்கார்ந்திருந்தேன்.ஆட்கள் இறக்கப்பட்டனர்.சரியாக நாங்கள் அமர்ந்திருந்த இருக்கை உச்சிக்கு வந்து நின்றது.பெரியப்பா என்னை பார்ப்பதையும் பேசுவதையும் தவிர்க்கும் விதமாக உர்ரென்று அமர்ந்திருந்தார்.முகமெல்லாம் வேர்த்து திருநீறு அழிந்திருந்தது.மற்ற நேரம் என்றால் சட்டையை பிடித்து விசிறிக்கொள்வார்.இப்போது சிக்கென்று கம்பியை பிடித்தபடி உட்கார்ந்திருந்தார்.சுற்று முடிந்த நிம்மதி முகத்தில் தெரிந்தது.ஆனாலும் பதற்றம் குறையவில்லை.மனிதர் அவமானப் பட்டுவிட்டார்.நாம்தான் சரி செய்ய வேண்டும் என்று மெதுவாக பேச்சு கொடுத்தேன்.

பெரியப்பா . . . அங்கே பாத்தேளா . . . நெல்லையப்பர் கோயில் தெரியுது . . .

சிவப்பழமான பெரியப்பா கடும் எரிச்சலுடன் சொன்ன பதில்.

ஒரு மயிராண்டி கோயிலையும் நான் பாக்கல.

---

**க்ளோ**
நண்பர் சீமானின் வீடு ஒரு சேவற்கூடாரம். பத்திலிருந்து இருபது சேவல்கள் வரை உண்டு. ஒரு கம்யூன் வாழ்க்கை வாழ்ந்து வருகிற கூட்டம். உதவி இயக்குனர்கள், ஒளிப்பதிவாளர்கள், சின்ன நடிகர்கள் . . இப்படி நிறைய நண்பர்கள் அங்கு ஒரு குடும்பமாக உள்ளனர். யார்யாருக்கு வேலை கிடைக்கிறதோ, அவர்கள் செலவைப் பார்த்துக் கொள்ள, மற்றவர்கள் சாமான்கள் வாங்க, ஒரு சிலர் சமைக்க, எல்லோரும் சாப்பிடுவார்கள். யாருக்கும், யாரோடும் வருத்தமோ, கோபமோ வருவது இல்லை. எங்கோ பிறந்து, எங்கெங்கோ வளர்ந்து அங்கு வாழும் சகோதரர்கள் ஒருவருக்கொருவரை முறை சொல்லி அழைத்துக் கொள்வதைப் பார்ப்பதே அழகு. மாமா, மருமகன், அத்தான், மைத்துனன், சித்தப்பா, மகன், அண்ணன், தம்பி இப்படி பல. எப்போதும் கூட்டம் நிரம்பி வழியும். சமையல் வேலைகள் சதா நடந்து கொண்டே இருக்கும். யாராவது ஒருவர் வெங்காயம் நறுக்கிக் கொண்டிருப்பதை நான் அங்கு போகும் போதெல்லாம் தவறாமல் பார்த்திருக்கிறேன். எப்படியும் ஒருவர் சவரம் செய்து கொண்டிருப்பார். ஒருவர் தூங்கிக் கொண்டிருப்பார். ஒருவர் ராஜ் டிஜிட்டல் ப்ளஸ்ஸில் பழைய பாடாவதிப் படமொன்றை உணர்ச்சி பொங்கப் பார்த்துக் கொண்டிருப்பார். மற்றொருவர் சத்தமாக தினத்தந்தி படித்துக் கொண்டிருப்பார். படிக்கும் ஒவ்வொரு செய்திக்கும் தனது கமெண்ட்டுடன். உதா. என்னைப் பார்த்து மற்ற கட்சிகள் பயப்படுகின்றன - விஜயகாந்த். பயப்படுவாஞ்ஞல்ல . . . முதுகில் குத்திய தேவகௌடா - எடியூரப்பா. குத்தத்தான் செய்வென் . . . இப்படி மதுரைத் தமிழில். வயதில் மூத்த ஒரு சிலர் அந்த

வீட்டில் இருந்தாலும் குடும்பத் தலைவர் என்னவோ சீமான்தான்.

ஒரு நாள் காலையில் நண்பர் சீமானை செல்பேசியில் அழைத்தேன். பதிலில்லை. உடனே அவரது இல்லத் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டேன். எதிர்முனையில் ஒரு குரல், 'க்ளோ' என்றது. அராஜகம் இல்லையா? நான் ஒருவன்தான் சீமானை அராஜகம் என்றழைப்பேன் என்பது அங்குள்ள எல்லோருக்கும் தெரியுமென்பதால், எதிர்முனைக் குரல் என்னை அடையாளம் கண்டுகொண்டு, 'அண்ணே, வணக்கமுண்ணே . . நான் ஜிந்தா பேசுறேன்னே. அண்ணன் குளிக்கிறாருண்ணே என்றது. சரி, நான் வற்றேன்னு சொல்லு. போனை வைத்த பின் எனக்கு யோசனை. இவன் போனை எடுத்து என்னவோ வினோதமாகச் சொன்னானே. சரி, அப்புறமாகக் கேட்டுக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன்.

மற்றோர் நாள் சீமான், மற்றும் சில நண்பர்களுடன் நானும் அமர்ந்து அவர் வீட்டில் பேசிக் கொண்டிருக்கும் போது தொலைபேசி மணி ஒலித்தது. ஜிந்தா போய் போனை எடுத்து 'க்ளோ' என்றான். அடடே, இப்படித்தான் அன்றைக்கு நம்மிடமும் சொன்னானா? ஏன் இப்படி உச்சரிக்கிறான்? என்று நண்பர்களிடம் கேட்க நினைத்து, அதை அங்குள்ள யாருமே கவனிக்காமல் இருக்க, சரி அவங்க ஊரில் ஹலோவுக்கு பதில் க்ளோதான் போல என்று சும்மா இருந்து விட்டேன். இனி அந்தத் தொலைபேசி உரையாடல்.

க்ளோ . . .யாருங்க . . கிருஷ்ணமூர்த்தியா . . . ? ஒரு நிமிசம் . . . சுற்றி எங்கள் எல்லோரையும் பார்த்தான். எங்கள் யார் முகத்திலாவது கிருஷ்ணமூர்த்தி தெரிகிறாரா என்று . அங்கு கிருஷ்ணமூர்த்தி என்கிற பெயரில் யாருமே இல்லை என்பது எனக்கே தெரியும்.அப்படி யாரும் இல்லீங்களே.ஓ . . அப்பிடீங்களா . . .என்னங்க . . . இன்னொரு தடவ சொல்லுங்க . . .
சீமான் பொறுமை இழக்க ஆரம்பித்தார்.

ஜிந்தா விடுவதாக இல்லை. சத்தமாக,நீங்க என்ன நம்பர் போட்டீங்க ?ரெண்டு மூணு ஏளு ஆறு ஆறு எட்டு மூணு சைபரா? அடடா , இது ரெண்டு மூணு ஏளு ஆறு ஆறு எட்டு ரெண்டு சைபராச்சே?

ராங்நம்பர்ன்னு சொல்லேன்டா, சீமான் கத்தினார். பவ்யமாகத் திரும்பி, அதாண்ணே சொல்லிக்கிட்டு இருக்கேன், என்றான் ஜிந்தா.தலையைக் குறி வைத்துப் பறந்து வந்த வஸ்துவுக்கு லாவகமாகக் குனிந்து சமாளித்து போனை வைத்து விட்டு வந்த ஜிந்தாவுக்கு கடும் எச்சரிக்கை விடப்பட்டது. இனி நீ போனை எடுத்தால், தென்னை மரத்தில் கட்டி வைத்து உதைப்போம். உதைப்பார்கள். நான் கண்கூடாகப் பார்த்து மிரண்டிருக்கிறேன்.

ஜிந்தாவின் உண்மையான பெயர் கணேசனோ, ரவியோ, குமாரோ. சினிமாவில் நடிப்பதற்காக அவனாக வைத்துக் கொண்ட பெயர்தான் ஜிந்தா. மதுரைக்காரன். கருத்த முரட்டு உடல். முறுக்கிய மீசை. கையில், காதில் வகை வகையாய் ஏதேதோ வளையங்கள். கொஞ்சம் காது மந்தம். அதற்கு ஒரு பின்னணிக் கதையுண்டு. ஊரில் த.மு.எ.ச., மற்றும் பல கலை குழுக்களுடன் சேர்ந்து நாடகங்களில் நடித்து வந்த அனுபவம் உண்டு ஜிந்தாவுக்கு. அப்படி ஒரு நாடகத்தில் போராட்டம் நடத்தும் விவசாயக் கூட்டத்தில் ஜிந்தாவும் ஒருவன். போராட்டக்களம், போர்க்களமாகிறது. போலீஸ் வந்து கண்ணீர்ப் புகை குண்டுகளை எறிகிறார்கள். பதிலுக்கு போராட்டக்காரர்களும் வெடிகுண்டுகளை எறிய, இருபுறமும் உயிர்ச்சேதம். செத்து விழும் போராட்டக்காரர்களில் ஜிந்தாவும் ஒருவன். இறந்து கிடக்கும் ஜிந்தாவின் காதருகில் வெடிக்காமல் புகைந்து கொண்டிருந்திருக்கிறது ஒரு வெடிகுண்டு. அசையாமல் பிணமாகக் கிடந்த ஜிந்தா, ஒரு கண்ணைத் திறந்து புகைந்து கொண்டிருந்த குண்டைப் பார்த்திருக்கிறான். ஆனாலும் தீராக்கலைவெறியில் பாத்திரமாகவே, அதாவது பிணமாகவே அசையாமல் கிடந்து, அது வெடிக்கும் வரை பொறுமைகாத்து பாதி கேட்கும் திறனை இழந்தான்.

ஒருமுறை ஊருக்குப் போய்விட்டு வீட்டுக்குள் நுழையும் ஜிந்தாவின் கையில் பையுடன் இருந்த இன்னொரு பொருளைப் பார்த்து ஒரு கணம் எல்லோருமே துணுக்குற்றிருக்கின்றனர். அவன் கையிலிருந்தது உறையிடப்பட்ட உண்மையான ஒரு நாதஸ்வரம். என்னடா இது ஜிந்தா? பஸ்ல வரும் போது ஒரு மேளக்காரங்கூட தகராறுண்ணே. க்காளி, என்ன சொல்லியும் அடங்க மாட்டேண்ணுட்டென். அதான் அடிச்சு இதை புடுங்கிட்டு வந்துட்டேன். அதோடு விட்டிருந்தால் அவன் ஜிந்தாவே இல்லை. ஒரு அதிகாலையில் அசந்துத் தூங்கிக் கொண்டிருக்கும் சீமான் குடும்பத்தினரின் காதுகளில் நிறைமாத கர்ப்பிணிப்பூனை ஒன்றின் பிரசவக்கதறலொலி கேட்க, தூக்கம் கலைந்த எரிச்சலோடு எழுந்து பார்த்திருக்கின்றனர். சத்தம் வந்த திசை, மொட்டை மாடியிலிருந்து. தூக்கக் கலக்கத்துடன் பூனைக்கு உதவும் நோக்கோடு மாடிக்குப் போன அவர்கள் கண்டது, ஜிந்தாவின் நாதஸ்வரச் சாதகக் காட்சி.

*பிறகென்ன. அந்த நாதஸ்வரத்தைப் பிடுங்கி, அதாலேயே . . . . . . .*

*ரொம்ப நாள் ஃபோனைத் தொடாமலேயே இருந்தான் ஜிந்தா. ஒரு நாள் நாங்கள் அனைவரும் சீமானின் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம். தொலைபேசி மணியடித்தது. எடுறா ஜிந்தா என்றார் சீமான். வேண்டாண்ணே, தயங்கினான். எடுறான்னா. இன்னும் தயங்கினான். நான் உடனே சீமானிடம், ஏன் அராஜகம்? போனை எடுத்தா தென்னைமரத்துல கட்டி வச்சு அடிப்பேன்னா, அவன் எப்படி எடுப்பான் என்றேன். ஐயாமகனே . . அது சும்மா ஒரு கோபத்துல சொன்னது. ஜிந்தா நம்ம தம்பியில்லியா? அவன அடிப்போமா, சொல்லுங்க என்றார். மணியடிப்பது நின்றுவிட்டது. சீமான் தொடர்ந்தார். இப்பெல்லாம் தம்பி ஜிந்தா புத்திசாலியா ஆயிட்டானே! இல்லியாடா தம்பி! பெருமிதம் பொங்கும் முகத்துடன் அதை ஆமோதிக்கும் விதமாக மெல்ல சிரித்தபடி தலைகுனிந்தான் ஜிந்தா. மீண்டும் மணியடித்தது. உற்சாகத்துடன் சென்று போனை எடுத்த ஜிந்தா,*

*க்ளோ . . .*

*சீமான் அண்ணனா . . . .*

*இருக்கறாருங்க . . . .*

*நீங்க?*

*ஒரு நிமிசம் . .*

*கவனமாக மவுத்பீஸைப் பொத்திக் கொண்டு, பணிவுடன் சீமானிடம் சுபோனை நீட்டியபடியே ஜிந்தா சொன்னது,*

*அண்ணே, புருசோத்தமன்னு யாரோ ஒரு முஸ்லிம் பேசுறாருண்ணே.*

---

***தாயார் சன்னதி***

*அடையாறு புற்று நோய் மருத்துவமனையில் தனது இறுதி நாட்களை அம்மா கழித்துக் கொண்டிருந்த போது அங்கு அவளுக்கு பல ஸ்நேகிதிகள் கிடைத்தனர். எல்லோரும் அம்மாவைப் போலவே. நோயின் தன்மையும், தீவிரமும் மட்டுமே மாறுபட்டிருந்தது. அவர்களில் சிலர் அம்மாவின் வயதை ஒத்தவர்கள். ஒரு சிலர் மூத்தவர்கள். தங்களின் நோய் குறித்த கவலைகளை மறந்து ஏதோ பிக்னிக் வந்தது போல அவர்கள் பழகிக் கொள்வதைப் பார்க்கும் போது கொஞ்சம் ஆறுதலாக இருந்தாலும், ஒரு கட்டத்தில் அவர்கள் அனைவருக்குமாக சேர்த்து வேதனை மனதைப் பிசையும். ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடத்திலிருந்து வந்தவர்கள். அங்கிருந்த நாட்களில் அநேகமாக ஒருவரின் குடும்பத்தைப் பற்றி மற்றவர்களுக்கு தெரிந்திருந்தது. தங்களின் நோய் போக அவரவர், தங்களின், மற்றவரின் குடும்பங்களுக்காகவும் கவலைப்பட ஆரம்பித்தனர். அது போலவே சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்ள அவர்கள் தவறவில்லை.*

*திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்மணி ஒருவரும் அம்மாவுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு முஜிபுர் என்று ஒரு மகன். இருபது வயது இருக்கலாம். சட்டையும், கைலியும் அணிந்திருப்பான். மண்டை சின்னதாகவும், உடம்பு குண்டாகவும் இருக்கும். கொஞ்சம் மனநிலை சரியில்லாதவன். என் தகப்பனாரைப் பார்த்தால் 'மாமா, சும்மா இருக்கேளா' என்பான். பதிலுக்கு 'மருமகனே' என்று என் தந்தை அழைக்கும் போது சந்தோஷமாகச் சிரிப்பான். என்னிடமும் நன்றாக பழகினான். முஜிபுரின் தாயார் தன மகன் யாரிடமும் பேசுவதை கட்டுப்படுத்தியே வந்தார்கள். அவனது மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் யாரும் அவனையும், தன்னையும் காயப் படுத்தி விடுவார்களோ என்ற பயம் அந்தத் தாய்க்கு. ஆனால் எங்களிடம் முஜிபுர் பழகுவதை நாளடைவில் அவர்கள் தடுக்கவில்லை. முஜிபுருக்கு எந்த நேரமும் சாப்பாட்டைப் பற்றி மட்டுமே சிந்தனை. 'மெட்ராசுல ஒரு ஹோட்டல்லயும் சின்ன வெங்காயத்தையே கண்ணுல காணோம். எல்லாத்துக்கும் பல்லாரி வெங்காயத்தத்தான் போடுதானுவொ. இட்லியை ஒரு கடையிலயும் வாயில வைக்க வெளங்கலையே. திருநெவேலி அல்வான்னு போர்டு போட்டிருக்கான். ஆனா வாயில போட்டா சவுக்குன்னு சவுக்குன்னு சவைக்கவே முடியலே' . . இப்படி பல புலம்பல்கள். ஒரு நாள் அம்மாவைப் போய்ப் பார்த்துவிட்டு வெளியே வந்து உட்கார்ந்திருந்தேன். மனது அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. முஜிபுர் அருகில் வந்து*

உட்கார்ந்தான். 'அண்ணே, இங்கனக்குள்ளெ நல்ல மீனு எந்த கடையில கிடைக்கும்' என்று கேட்டான். 'எனக்கு தெரியாதே முஜிபுர். நான் சாப்பிடறதில்லையே' என்றேன். 'நீங்க ஐயரா? கருப்பா இருக்கீங்க?' என்றான். நான் பதிலேதும் பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன். உடனேயே 'மன்னிச்சுக்கிடுங்க. உங்களை கருப்பா இருக்கீங்கன்னு சொல்லிட்டேன்' என்று எழுந்து சென்றான். வருகிற, போகிற எல்லோரிடமும் போய் பேசிக் கொண்டே இருக்கிறான் என்று முஜிபுரை அவன் தாயார் மனமே இல்லாமல் சில நாட்களிலேயே ஊருக்கு அனுப்பிவிட்டார்கள்.

அம்மாவின் வார்டிலேயே பாப் ஹேர்கட்டிங்கில் ஒரு பெண்மணி இருந்தார்கள். நீண்ட காலம் டெல்லியில் வாழ்ந்த அவர்களுக்கு சாந்தமான முகம். மெல்லப் பேசுவார்கள். நன்கு படித்தவர்கள் என்பது அவர்களின் தோற்றத்திலேயே தெரிந்தது. சில வேளைகளில் ப்ரீத்தி ஜிந்தா சாயலில் உள்ள அவர் மகள் அவருக்கு சாப்பாடு எடுத்து வருவாள். எப்போதும் பேண்ட் ஷர்ட்தான் அணிந்திருப்பாள். தன் தாயாருக்கு நேரெதிராக முகத்தில் ஒரு துளி சிரிப்பு இருக்காது. அவளைப் பார்க்கும் போதெல்லாம் அம்மாவிடம் 'அந்தப் பொண்ணுக்கிட்டே ஏதோ சோகம் இருக்கும்மா' என்பேன். 'எல்லா ஆம்பிளைப் பயல்களும் பொம்பளைப் பிள்ளையைப் பாத்து சொல்றது இது. உளறாதே' என்பாள் அம்மா. ஒரு நாள் அம்மாவின் அறைக்கு சென்ற போது அந்தப் பெண்ணின் தாய், அம்மாவிடம் அழுது கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் சிரமப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டு அவசர அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள். நான் வெளியே வந்துவிட்டேன். பிறகு அம்மா சொன்னாள். 'நீ சொன்னது சரிதான். அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் ஆகி ஒரு மாசம் கூட புருஷனோட வாழலியாம். இன்னிக்கு அவளோட கல்யாண நாளாம். தான் போறதுக்குள்ளே அவளுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி பாத்துரணும்னு சொல்லுதாங்க' என்றாள். இந்த விஷயம் தெரிந்ததிலிருந்து அந்தப் பெண் ப்ரீத்தி ஜிந்தாவை என்னால் இயல்பாகப் பார்க்க முடியவில்லை.

கீமோதெரபி என்னும் கதிரியிக்கச் சிகிச்சையை அம்மாவுக்குக் கொடுக்கத் துவங்கினார்கள். அம்மாவுக்கு எப்போதுமே நீண்ட கரு கரு கூந்தல். கீமோதெரபியின் விளைவாக முதலில் கடுமையான வாந்தியும், பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தலைமுடி உதிர்வதும் ஆரம்பிக்கும். அம்மாவுக்கும் அதுவே நேர்ந்தது. சில நாட்களிலேயே மொட்டையாகிப் போனாள். அம்மாவின் உடன்பிறந்த தங்கையான என் சித்தி சிறு வயதிலிருந்தே அம்மாவின் தலைமுடியைப் பார்த்து சொல்வாள். ' உனக்கு முடியும் உதிர மாட்டேங்குது. நரைக்கவும் இல்லையே' என்று. அம்மாவின் மொட்டைத் தலையைப் பார்த்து தாங்க மாட்டாமல் கதறி அழுதவள் சித்திதான். திரையுலகின் பிரபல விக் மேக்கரான ரவியிடம் சொல்லி ஒரு நல்ல விக் ஏற்பாடு செய்து அம்மாவுக்குக் கொடுத்தேன். ஓரிருமுறை அதை அணிந்திருப்பாள். பிறகு அவள் அதை விரும்பவுமில்லை. அதற்கு அவசியமும் இல்லாமல் போனது.

அந்த கொடுமையான கட்டத்திலும் அம்மா மகிழ்ச்சியாகவே இருந்தாள். அதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, அம்மாவுடன் சிகிச்சை பெற்று வந்த ஒரு பிராமணப் பாட்டி. சதா சிரிப்பும், கேலியுமாக சந்தோஷமாக மருத்துவமனையில் வளைய வந்து கொண்டிருந்தார் அந்த பாட்டி. பார்ப்பதற்கு மூன்றாம் பிறை படத்தில் கமலின் வீட்டுக்கு அருகில் ஒரு பாட்டி இருப்பாரே! அவரை அப்படியே உரித்து வைத்திருப்பார். நான் விளையாட்டாக இதை அவரிடம் கேட்டு வைக்க, என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'என் ஆட்டோகிராஃப் வேணுமா' என்பார். தீவிர கிரிக்கெட் ரசிகையான பாட்டியைப் பார்க்க அவரது மகன் வருவார். அவருக்கு ஒரு நாற்பது வயதிருக்கும். 'இன்னிக்கு மேட்ச் இருக்காடா?'. மகனைக் கேட்பார் பாட்டி. 'ஆமாமா. எப்படியும் இந்தியா தோத்திரும். ஆஸ்திரேலியா definite ஆ win பண்ணிருவான்'. . . வம்பு பண்ணுவார் மகன். 'அடேய் தேசத் துரோகி'. . . சிரித்துக் கொண்டே மகனை கடிந்து கொள்வார் அந்த வயதான தாய்.

முஜிபுர், ப்ரீத்தி ஜிந்தா, மூன்றாம் பிறை பாட்டியின் மகன் என தங்கள் தாயார்களை உள்ளே அனுமதித்து விட்டு, மருத்துவமனைக்கு வெளியே இருந்த அனைவருமே ஒருவருக்கொருவர் ரகசியமாக மற்றவரைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருப்பார்கள்தான். அதில் நானும், அம்மாவும் நிச்சயம் இருந்திருப்போம். சிகிச்சை முடிந்து வெளியே வந்த சில காலத்திலேயே அம்மா காலமாகிவிட்டாள். அந்தத் தாயார்கள் யாரைப் பற்றிய தகவலும் எங்களுக்கு தெரியவில்லை. அம்மாவுக்கு தெரிந்திருக்கும்.

---

## ஹார்மோனியம்

ஹார்மோனியத்தை நான் முதன்முதலில் பார்த்தது, தியாகராஜ மாமா வாசிக்கும் போதுதான். எங்கள் வீட்டின் முன்னறையில் மெல்லிசைக் கச்சேரிக்கான ரிஹர்ஸலில் பள்ளி ஆசிரியரான தியாகராஜ மாமா ஹார்மோனியமும், பெரியண்ணன் தபலாவும் வாசிக்கும் போது அருகில் இருந்து பார்த்திருக்கிறேன்.

தியாகராஜ மாமா ஹார்மோனியம் வாசிப்பதில் சூரர். எந்த சங்கதியையும் சர்வசாதாரணமாக ஹார்மோனியத்தில் கொண்டு வந்துவிடுவார். அண்ணனும், அவரும் போட்டி போட்டுக் கொண்டு வாசிப்பார்கள். 'அன்றொரு நாள் இதே நிலவில்' பாடலில் வரும் ஹார்மோனிய பிட்டை (bit) மாமா வாசித்துக் கேட்க வேண்டும். அதேபோல் ஜி.ராமநாதனின் பெரும்பாலான பாடல்கள். உதாரணத்துக்கு 'வீரபாண்டிய கட்டபொம்மன்' படத்தின் 'இன்பம் பொங்கும் வெண்ணிலா'.

அதற்குப் பிறகு நான் ஹார்மோனியத்தைப் பார்த்தது ஷாஃப்டர் மேல்நிலைப்பள்ளியில். கையால் போடும் பெல்லோஸுக்கு பதில் காலால் பெடல் செய்து வாசிக்கும் 'கால் ஹார்மோனியம்' அந்தப் பள்ளியில் இருந்தது. ஷாஃப்டர் பள்ளியில் கிறிஸ்தவ ஸ்தோத்திரப் பாடல்கள் பாடும் குழுவில் பாடுவதற்காகப் பையன்களைத் தேர்வு செய்தார்கள். ஒவ்வொருவராகப் பாடச் சொல்லி கால் ஹார்மோனியத்தில் ஸ்வரம் பிடித்து வாசித்துக் கொண்டிருந்தார் கோயில் பிள்ளை ஸார். அதில் நான் தேர்வானேன். நியாயமாகப் பார்த்தால் கோயில் பிள்ளை ஸார் வாசித்தது ஹார்மோனியம் இல்லை. ஆர்கன். அவ்வளவு பெரிது. அதன் கருப்பு வெள்ளை கட்டைகளில் கோயில் பிள்ளை ஸாரின் விரல்கள் விளையாடும் போது அதிலிருக்கும் கிளம்பும் இசை, அந்தப் பெரிய சர்ச் ஹால் முழுவதையும் அதிர வைக்கும்.

'சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய மும்இலதாய்சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற
திரித்துவமே,எத்தால்நானடியேன் கடைத்தேறுவேன் என்பவந்தீர்ந்துஅத்தா உன்னையல்லால்
எனக்கார்துணை யாருறவே?'

ஸ்கூல் அஸெம்பிளியில் கோயில் பிள்ளை ஸார் ஹார்மோனியத்தில் இந்தப் பாட்டை வாசிக்கத் தொடங்க, அதைத் தொடர்ந்து நாங்கள் பாடுவோம். இந்தப் பாடலின் மெட்டு சங்கராபரணம் ராகத்தில், ரூபக தாளத்தில் போடப்பட்டிருந்தது. மற்ற பையன்களை விட எனக்கு இந்த மெட்டு சீக்கிரம் வசப்பட்டது. காரணம், இந்த மெட்டு நினைவு தெரிந்த நாளிலிருந்தே என் காது கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட 'பொன்னார் மேனியனே'யை ஒத்து இருந்தது. அந்தக் குழுவில் சிறுவயதில் நான் பாடிய பல பாடல்களை இன்று ஹாரிஸ் ஜெயராஜ் புண்ணியத்தில் சினிமாப் பாடல்களாக கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

பள்ளிப் படிப்புக்குப் பிறகு எனக்கும் ஹார்மோனியத்துக்கும் தொடர்பில்லாமல் போனது. ஹார்மோனியத்தின் இடத்தை சிறிது காலம் மிருதங்கம் பிடித்துக் கொண்டது. முறையாக மிருதங்கம் கற்றுக் கொள்ளத் துவங்கினேன். கிருஷ்ணமூர்த்தி ஸாரும், அவர் மகன் ராஜுவும் எனக்கு மிருதங்க வகுப்பெடுத்தார்கள். இந்த ராஜு பள்ளியில் என்னைவிட ஒரு வகுப்பு சீனியர். அவன் வகுப்பெடுக்கும் போதெல்லாம் மிருதங்கம் சொல்லிக் கொடுப்பதை விடவும் அவன் காலில் விழுந்து நான் வணங்குவதில் மட்டுமே அதிக பிரியம் காட்டுவான். அதில் அவனுக்கு அப்படி ஒரு ஆனந்தம். அவனாலேயே மிருதங்கத்தின் மீது எனக்கிருந்த விருப்பம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையலாயிற்று. அதன் பிறகு வீரகேரளம்புதூர் விநாயகத்துப் பெரியப்பாவின் ரூபத்தில் ஹார்மோனியம் என் வாழ்வில் மீண்டும் நுழைந்தது. விநாயகத்துப் பெரியப்பா எங்கள் வீட்டு கொலுவுக்கு வரும் போதெல்லாம் அவர் ஹார்மோனியம் வாசித்தபடி இருமிக் கொண்டே பாட, நான் அவரது இருமலுக்கு பாதியும், பாட்டுக்கு மீதியுமாக மிருதங்கம் வாசிப்பேன். 'நாத தனுமனிஷம்' என்று பெரியப்பா ஆரம்பிக்கும் போதே ஹார்மோனியமும் சேர்ந்து அவருடன் இரும ஆரம்பிக்கும்.

பூட்டியிருந்த எங்கள் வீட்டின் மாடியறைக்குள் செல்ல, பக்கச் சுவர் வழியாக நண்பன் சந்திரஹாசனுடன் சேர்ந்து நான் போக முயலும் போது சுவற்றின் விளிம்புப் பகுதி உடைந்து கீழே விழுந்தேன். விளைவு, எனது இரண்டு மணிக்கட்டுகளும் முறிந்து போயின. ஆறு மாதத்துக்குப் பிறகு மிருதங்கம் வாசிக்க முயலும் போது அது இனிமேல் முடியாது என்பது தெரிய வந்தது. பூஜையறையின் ஒரு மூலையிலிருந்த ஹார்மோனியம் என்னை மெல்ல தன் பக்கம் இழுத்தது. மெல்ல மெல்ல நானாக வாசிக்கத் தொடங்கினேன். ஒருவிதப் பித்து தலைக்கேற, இரவுபகலாக ஹார்மோனியத்துடனேயே கிடந்தேன். மதுரையிலிருந்து வரும் போது அப்பாவின் காரிலிருந்து ஒரு சின்ன கேஸியோ (casio) இறங்கியது. பல வாத்திய ஒலிகளடங்கிய அந்தப் புத்தம்புது வாத்தியத்துடன் சில காலம் கழிக்க, அடுத்து பெரிய கேஸியோ ஒன்றும் கிடைத்தது. இளையராஜாவின் பாடல்களனைத்தையும் வெறி பிடித்தவன் போல் வாசித்துக் கொண்டிருந்ததை கவனித்த விநாயகத்துப் பெரியப்பா, இவனை இப்படியே விட்டுவிடக் கூடாது என்று முடிவு செய்தவராய், அவரது நண்பர் ஒருவரிடம் அழைத்துச் சென்றார். திருநெல்வேலியின் புகழ் பெற்ற வயலின் இசைக் கலைஞரான அவர் பெயர் கிருஷ்ணய்யர்.

வயலின் என்றாலே நமக்கு ஞாபகம் வருகிற குன்னக்குடி வைத்தியநாதன் சாயலிலேயே கிருஷ்ணன் ஸாரும் இருப்பார். நெற்றியில் டிராஃபிக் சிக்னல் லைட்டும், உடம்பில் பொன்னாடைச் சட்டையும் இல்லாத வைத்தியநாதனே, கிருஷ்ணன் ஸார். பெரும்பாலும் சட்டை அணிய மாட்டார். வேஷ்டியின் இடுப்புப் பகுதியில் ஹியரிங் எய்டு மிஷின் இருக்கும். நாம் பேச ஆரம்பிக்கும் போது அதன் வால்யூமைக் கூட்டிக் கொள்வார். மனைவியை இழந்தவர். எல்லா திருநெல்வேலி பிராமணர்களையும் போல சுத்தமான நெல்லை பாஷைதான் பேசுவார். அபூர்வமாகவே பிராமண பாஷைச் சொற்கள் வரும். கூன் விழுந்தமாதிரிதான் உட்காருவார். அப்படி உட்கார்ந்திருக்கும் போது வயிற்றில் விழும் மடிப்புகளும், நெற்றியில் இருக்கும் சுருக்கங்களும் ஒரே மாதிரி இருக்கும். கிருஷ்ணன் ஸார் வயலின் கலைஞராக இருந்தாலும், எனக்கு ஹார்மோனியம் சொல்லிக் கொடுக்கச் சம்மதித்தார். ஹார்மோனியம் போக அவரிடம் புல்லாங்குழல், வீணை, வயலின் கற்றுக் கொண்ட மாணவர்களும் உண்டு. நான் ஏற்கனவே ஓரளவு ஹர்மோனியம் வாசிக்கக் கூடியவன் என்பதால் வெகு சீக்கிரத்திலேயே கிருஷ்ணன் ஸாரின் சீனியர் மாணவனானேன். அவர் வயலினில் வாசிக்கும் எதையும், நான் ஹார்மோனியத்தில் வாசித்து விட அவருக்கு பிரியமான, நம்பிக்கைக்குரிய சிஷ்யனானேன். அவர் இல்லாத நேரங்களில் என்னிடம் மற்ற மாணவர்களை பாடம் வாசித்து காட்டச் சொல்லும் அளவுக்கு என்னை உயர்த்தினார். வீணை கற்றுக் கொண்டிருந்த, கிட்டத்தட்ட வீணை சைஸிலுள்ள ஜானகி மாமிக்கு இது பொறுக்கவில்லை. ஒரு சின்னப் பயலிடம் போய் பாடத்தை வாசித்துக் காட்டுவதா என்று பொருமினார். ஸாரிடம் ஜாடைமாடையாக சொல்லியும் பார்த்தார். அவர் அதை காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. அந்த மாமி செய்யும் தவறுகளையெல்லாம் சுட்டிக்காட்டி என்னை சரியாக அவற்றை ஹார்மோனியத்தில் வாசித்துக் காட்டச் சொல்லி மாமியை மேலும் வெறுப்பேற்றுவார்.

எங்கள் வீட்டில் உள்ள ஹார்மோனியத்தை விடவும் கிருஷ்ணன் ஸார் வீட்டு ஹார்மோனியமே எனக்கு வாசிப்பதற்கு சுகமாக இருந்தது. இத்தனைக்கும் எங்கள் வீட்டு ஹார்மோனியம் புத்தம் புதியது. ஸாரின் ஹார்மோனியம் அருதப் பழசு. ஆனாலும் அதுவே எனக்கு பிடித்திருந்தது. என்னுடைய பாடம் முடிந்த பிறகும் நான் ஏதேனும் ராகங்கள் வாசிப்பேன். பெரும்பாலும் இளையராஜாவின் இசையில் உள்ள பாடல்கள்தான். வேஷ்டியின் மடிப்பில் உள்ள மெஷின் பக்கம் ஸாரின் கை தானாகச் செல்லும். 'இது ஸ்ரீரஞ்சனில்லா? ஆரு போட்டது? அவந்தானா?' தரையில் 'இ' என்று எழுதிக் காண்பித்து கேட்பார். ஆமாம் என்பேன். 'அவனை வாரியலக் கொண்டு அடிக்க வேண்டாமா. என்னமா போட்டிருக்கான். இன்னொரு மட்டம் வாசி' என்று கேட்டு, அவரும் வயலினை எடுத்துக் கொள்வார். சிம்மேந்திர மத்தியமம், அம்ருதவர்ஷினி, குந்தலவராளி, மணிரங்கு என பல ராகங்களில் இளையராஜா மெட்டமைத்த பாடல்களை வாசித்துக் காட்டி நான் கிருஷ்ணன் ஸாரிடம் அந்தந்த ராகங்களின் நுணுக்கங்கள் பற்றி கேட்டுத் தெரிந்து கொள்வேன். அடிக்கடி சொல்வார். 'ஒனக்கு குரு அவம்லா'. தரையில் எழுதி காண்பிப்பார் 'இ' என்று.

சென்னைக்கு நான் கிளம்பும்போது அவரிடம் சொல்லிக் கொள்ள போனேன். காலில் விழுந்து வணங்கியவனை திருநீறு பூசி ஆசீர்வதித்தவர், நான் சற்றும் எதிர்பாராவண்ணம் கட்டிப் பிடித்து ஓவென அழத் துவங்கிவிட்டார். உடைந்து உருகிப் போனேன். நீண்ட நேரம் கழித்தே என்னால் இயல்பு நிலைக்கு வர முடிந்தது. கிருஷ்ணன் ஸாரின் நான்கு மகன்களும் வயலின் கலைஞர்களே. திண்டுக்கல் அங்கிங்கு இசைக்குழுவில் வாசித்து வந்தார்கள். ஸாரின் கடைசி மகன் பாலாஜிதான் எனது இசைத் தோழர். இன்றைக்கும் எனது இசை குறித்த எந்த ஒரு சந்தேகத்தையும் தீர்த்து வைப்பவர் அவரே. என்னைத் தொடர்ந்து பாலாஜியும் சென்னைக்கு வந்துவிட, கொஞ்ச நாளில் கிருஷ்ணன் ஸாரும் வந்து விட்டார். சென்னையில் சில நாட்கள் இளைய மகன் வீட்டிலும், சில காலம் மகள் வீட்டிலும், இன்னும் சில காலம் மற்றொரு மகன் வீட்டிலுமாக ஸார் இருந்தார். அவ்வப்போது பார்க்கப் போவேன். ஒருமுறை அவர் மகள் வீட்டில் அவரைப் பார்க்கப் போயிருந்தேன். கமலா அக்காதான் கதவைத் திறந்தார்கள். 'ஏ அப்பா. தம்பிக்கு இப்போதான் அக்கா வீட்டுக்கு வர வளி தெரிஞ்சுதாக்கும்' என்றபடியே வரவேற்றார்கள். 'அப்பா, இங்கே பாரு, யாருன்னு' சத்தமாகச் சொன்னார்கள். மெஷினை எடுத்துக் காதில் மாட்டியபடியே என்னைப் பார்த்த ஸாருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ' வா வா. இரி' என்றபடியே தரையில் அமர்ந்தார். நானும் உட்கார, உட்கார்ந்தபடியே நகர்ந்து சற்றுத் தள்ளியிருந்த ஹார்மோனியம் ஒன்றை இழுத்து என் பக்கம் தள்ளினார். 'ஃபர்ஸ்ட் கிளாஸ் சரக்காக்கும் ஜெர்மன் ரீடு.' அந்த ஹார்மோனியத்தில் பெல்லோஸ் பக்கவாட்டில் இருந்தது. ஹிந்துஸ்தானி இசைக் கச்சேரிகளில் பார்த்திருக்கிறேன். வாசிக்க வாசிக்க வழுக்கிக் கொண்டு போனது. 'ஸ்பீடு இளுக்கு பாத்தியா. நீ வந்து வாசிக்கணும்னு ஆசைப்பட்டேன். வந்துட்டே' என்றார்.

பிறகு கொஞ்ச காலம் திருநெல்வேலி, இன்னொரு மகனுடன் திண்டுக்கல், பின் மறுபடியும் சென்னை என்று கிருஷ்ணன் ஸார் சுற்றிக் கொண்டிருந்தார். 'அப்பா வந்திருக்கா' என்று பாலாஜி ஃபோனில்

*சொல்வார். போய்ப் பார்ப்பேன். சந்தோஷமாக வரவேற்று சம்பிரதாயமாக, 'சௌக்கியமா இருக்கேல்லா?' என்று விசாரித்துவிட்டு, 'பொட்டி வாசிக்கியா?' என்று ஹார்மோனியத்தை எடுத்துத் தருவார். தானும் வயலினை எடுத்துக் கொள்வார். எப்படியும் எங்களது வாசிப்பில் ஏதாவது ஒரு ராகம் வழியாக இளையராஜா வந்துவிடுவார்.*

*பிறகு ரொம்ப நாட்களாகவே பாலாஜியின் வீட்டுக்கு கிருஷ்ணன் ஸார் வரவில்லை. திண்டுக்கல்லில் உள்ள மகன் வீட்டுக்குச் சென்றுவிட்டார். பாலாஜியைப் பார்க்கும் போதெல்லாம் விசாரித்துக் கொள்வேன். ஸாரை போய்ப் பார்க்க முடியவில்லை என்பதால் ஹார்மோனியமும் வாசிக்கவில்லை. வீட்டில் பெரிய கீபோர்டு இருந்தாலும் என்றாவது ஒரு நாள் என் மகன் வாசிக்கும் போது எடுத்து வாசித்துப் பார்ப்பதோடு சரி. கைக்கு அடக்கமான ஹார்மோனியம் வாசிப்பதில் உள்ள சுகம், அத்தனை பெரிய கீபோர்டில் கிடைப்பதில்லை. மற்ற வாத்தியங்களில் இல்லாத ஒரு சௌகரியம் ஹார்மோனியத்தில் உண்டு. ஸ்வரங்களை கண்ணால் பார்க்க முடிகிற ஒரே வாத்தியம் ஹார்மோனியமே. பிற வாத்தியங்களில் வாசித்துதான் சொல்ல முடியும். ஆனால் ஹர்மோனியத்தில் தூரத்தில் இருந்தே, அதோ அதுதான் 'ஸ', அதுதான் 'க' என கட்டைகளைக் காட்டி ஸ்வரங்களைச் சொல்லி விடலாம். இப்படி ஒரு வாத்தியத்தைப் போய், இது வெளிநாட்டில் இருந்து வந்து நம் சங்கீதத்தில் புகுந்ததாலோ என்னவோ, பாரதியார் எதிர்த்து எழுதியிருக்கிறார். அதுபோக ஹார்மோனியத்தில் உள்ள இன்னொரு விசேஷம், சங்கீதத்தின் ஆதார ஸ்வரங்களான 'ஸ ப ஸ' பிடித்து அதனுடனேயே ஒரு மனிதன் பாடினால், அவன் குரலைப் போலவே அந்த ஸ்வரங்களும் ஒலிக்கும். இந்த சங்கதி, சங்கீதம் நன்கு தெரிந்த எங்களூர் சுப்பையாவுக்குத் தெரியாமல் போனது ஆச்சரியமே.*

*இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு நாள் மாலையில் சாலிகிராமத்திலுள்ள சங்கரநாராயணர் கோயிலுக்குச் சென்றுவிட்டு அதன் நேர்திசையிலுள்ள தெரு வழியாக வந்து கொண்டிருந்தேன். ஒரு வீட்டின் மாடியில் உள்ள பால்கனியில் ஒரு சேரில் அமர்ந்தபடி தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் கிருஷ்ணன் ஸார். ஒரே சமயத்தில் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். வேகவேகமாக அந்த மாடிப்படிகளில் ஏறி என் குருநாதரின் கால்களில் விழுந்தேன். 'வா வா' என்று என் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். வழக்கம் போல் அவர் தரையில் உட்கார, நானும் அவருடன் அமர்ந்து கொண்டேன். வயதின் காரணமாக ஆள் ரொம்பவும் குறுகியிருந்தார். முகத்தில் பழைய தேஜஸ் இல்லை. 'உடம்பு சரியில்லியா?' என்றேன். ' இந்த ஒடம்பு என்னை விட்டுப் போவேனாங்கு. வேற என்ன சொல்லச் சொல்லுதெ?' கண் கலங்கினார். என்னால் மேற்கொண்டு எதுவும் கேட்க முடியவில்லை. அவரே தொடர்ந்தார். 'என் கூட சேந்த செட்டு யாரும் இல்ல. பரபரன்னு தெக்கையும், வடக்கையும் சுத்துன காலம் போயி இப்போ ஒத்தைக்காட்டுக் கொரங்கு கணக்கா தனியா ஒக்காந்திருக்கேன். என்னைய இந்த நாசமாப் போற ஊர்ல கொண்டு வந்து நட்டுட்டானுவொ. எல்லாம் அந்த முண்டையச் சொல்லணும்.' மேலே காண்பித்தார். எப்படியும் அன்று ஒருமணி நேரம் அவருடன் இருந்திருப்பேன். நாங்கள் இருந்த அறையில் எங்கள் கண் முன்னேயே ஹார்மோனியம் இருந்தது. ஆனால் அங்கிருந்து நான் கிளம்பும்வரை அவர் என்னை வாசிக்கச் சொல்லவேயில்லை. நானும் கேட்கவில்லை.*

---

***யுகசந்தி***

*விருகம்பாக்கம் ஏ.வி.எம். காலனியில் சில காலம் குடியிருந்தேன். அந்தப் பகுதி முழுவதுமே ஒரு குட்டி கிராமம் போல காட்சியளிக்கும். நான்கைந்து தெருக்களே உண்டு. மண்ரோடுதான். அந்த காலனியிலேயே சற்றுப் பெரிய கட்டிடம் என்று அங்குள்ள பிள்ளையார் கோயிலைச் சொல்லலாம். கோயிலைச் சுற்றி நல்ல விஸ்தாரமான பிரகாரம். முன்னே காலியாக நிறைய இடம். அதில் ஒரு வேப்ப மரம், மற்றும் அரச மரம். மாலை நேரங்களில் பெரும்பாலும் வயதானவர்கள் பேரன், பேத்திகளை அழைத்து வந்து, அவர்களை விளையாட விட்டு, பிள்ளையாரைப் பார்த்தபடியே அமைதியாக உட்கார்ந்து இருப்பர். இன்றைக்கு ஒளிபரப்பாகும் அநேக தொலைக்காட்சித் தொடர்களில் கதாநாயகிகளும், அவர்களின் அம்மாக்களும், சக்களத்திகளும் ஏ.வி.எம்.காலனி பிள்ளையாரிடமே தங்கள் குறைகளைச் சொல்லி முறையிடுகின்றனர்.*

*ஏ.வி.எம். காலனியில் நான் குடியிருந்த வீட்டுக்கு எதிரே உள்ள வீட்டில் ஒரு பிராமணக் குடும்பம் குடியிருந்தது. காலனியிலேயே அந்த வீடு ரொம்பப் பிரபலம். எப்போதும் அந்த வீடு சத்தமாகவே இருக்கும். ஒன்று அந்தக் குடும்பத் தலைவர் கடுமையான சத்தத்தில் குடும்பத்து உறுப்பினர்களை திட்டிக் கொண்டிருப்பார். இல்லையென்றால் உரத்தக் குரலில் பாடுவார். பெரும்பாலும் ஹிந்திப் பாடல்கள்தான். பாபி திரைப்படத்தின் புகழ்பெற்ற 'பேஷாக் மந்திர்' பாடலை அப்படியே சன்ச்சல் குரலில் பாடுவார்.*

உச்ச ஸ்தாயியில் பிசிறடிக்காத குரலில் அந்த பாடலை கேட்கும் போதெல்லாம் வீட்டுக்கு வெளியே வந்து வேறெங்கோ பார்த்துக் கொண்டு நின்றபடி ரகசியமாக அவர் பாடுவதை ரசிப்பேன். ஒரு நாளாவது அந்தக் குரலுக்கு சொந்தக்காரரிடம் பேசவேண்டும் என்று நினைப்பேன். ஆனால் அவரது சத்தமான பிற அர்ச்சனைகளுக்கும் என் காது பழக்கப்பட்டிருந்ததால் அந்த முயற்சியை எடுக்க மனம் துணியவில்லை. காலையிலும், மாலையிலும் குளித்து, நீரில் குழைத்துப் பூசிய திருநீற்று மணத்துடன் பஞ்சக்கச்சம் கட்டி, பட்டு அங்கவஸ்திரத்தை உடம்பில் போர்த்தியபடி அவர் கோயிலுக்குப் போவதைப் பார்ப்பேன். அவரது உயரமும், மீசையில்லாத கடுகடுத்த முகமும் பார்த்தவுடன் பதறிக் கும்பிடத் தோன்றும்.

ஏ.வி.எம் காலனி பிள்ளையார் கோயிலில் ஒரு குருக்கள் மாதச் சம்பளத்துக்கு பூஜை பண்ணிக் கொண்டிருந்தார். வேகமாக உரத்தக் குரலில் அவர் சொல்லும் மந்திரங்களில் நமஹ, ஓம், ஸ்வாஹா போன்ற ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே நம் காதில் தெளிவாக வந்து விழக் கூடியவை. மற்றவையெல்லாம் இப்படி அப்படிதான் இருக்கும். பிள்ளையாரும் அதை கண்டுகொள்வதில்லை. ஆனால் நமது ஐயர் கோயிலுக்குள் வந்துவிட்டாரென்றால் குருக்கள் பாடு திண்டாட்டமாகிவிடும். எல்லா மந்திரங்களையும் ஸ்பஷ்டமாக உச்சரிக்கச் சொல்லி பிராணனை வாங்கி விடுவார். சமயங்களில் மந்திரம் சொல்லி முடித்து பூஜையைத் துவங்க குருக்கள் முற்படும் போது ஐயர் உள்ளே புகுந்து மீண்டும் ஒன்றிலிருந்து துவங்கச் சொல்வார். அப்போதெல்லாம் பிள்ளையாரே ஐயரிடம் 'அவன் ஏதோ பஞ்சத்துக்கு பூஜை பண்றான். அவனை விட்டுடேன் பாவம்' என்று சொல்வது போல் இருக்கும். இதற்காகவே குருக்கள் ஒரு புத்தகத்தை வாங்கி கருவறைக்குள்ளேயே வைத்து விட்டார். எல்லா சமயமும் குருக்கள் அதை பயன்படுத்துவதில்லை. ஐயர் தலை தெரிந்து விட்டால் அனிச்சையாகவே அவர் கை அந்தப் புத்தகத்தைத் தேடி எடுத்து விடும். தினமும் காலையிலும் மாலையிலும் கோயிலுக்குச் சென்று குருக்களை பாடாய் படுத்தி பிள்ளையாரை வழிபடும் ஐயர், அதற்கு சற்றும் சம்பந்தமில்லாமல் அழுக்கு வேஷ்டியை மடித்துக் கட்டியபடி மதியப் பொழுதுகளில் பஸ்ஸ்டாண்ட் பக்கத்திலுள்ள பெட்டிக்கடையில் சிகரட் பிடித்துக் கொண்டிருப்பார்.

ஒரு கோடைகாலத்து மாலையில் வீட்டு வாசலில் உள்ள வேப்பமரத்தின் அடியில் ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்து எனக்கு ரொம்பப் பிடித்த ஜெயகாந்தனின் 'விழுதுகள்' குறுநாவலைப் படித்துக் கொண்டிருந்தேன். ஓங்கூர் சாமியாரிடம் மனதைப் பறி கொடுத்து ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கும் போது பக்கத்தில் ஏதோ நிழலாடியது. நிமிர்ந்து பார்த்தால் எதிர் வீட்டு ஐயர். சடாரென்று எழுந்து நான் பேசத் துவங்கும் முன் அவர் , 'ஐ ஆம் சந்தானம்' என்று கைகுலுக்கினார். இன்னொரு நாற்காலியை போட்டு அவரோடு நானும் அமர்ந்து கொண்டேன். 'தூரத்திலிருந்து பாக்கும் போதே நீர் ஏதோ படிக்கிறது தெரிஞ்சது. என்னமோ பக்கத்துல வந்து பாக்கத் தோணித்து. நீரும் என்னை மாதிரியே ஜேகே படிக்கிறவர்னு தெரிஞ்சு சந்தோஷம்' என்றார். பேச்சுவாக்கில் தன்னைப் பற்றி சொல்லத் துவங்கினார். வட இந்தியாவில் பல வருடங்கள் வேலை பார்த்து ஓய்வு பெற்ற அவர் ஜேகேயின் தீவிர ரசிகர் என்றும், நீண்ட காலம் கழித்து சென்னைக்கு வந்துவிட்டதாகவும் சொன்னார். என்னிடம் ஜேகேயின் எல்லா எழுத்துக்களும் இருக்கும் விஷயத்தைச் சொல்லி எது வேண்டுமோ, கேளுங்கள். தருகிறேன் என்றேன். 'யுகசந்தி இருக்கா உம்மக்கிட்டே. அத படிக்கணும் ஓய்' என்றார். ஜெயகாந்தனின் சிறுகதைகளின் மொத்தத் தொகுப்பின் இரண்டாம் பகுதியில் அந்த கதை உள்ளது. அந்த தொகுப்பை உடனே வீட்டுக்குள்ளே போய் எடுத்து வந்து கொடுத்தேன். பிறந்த குழந்தையை வாங்குவது போல் கவனமாக, ஆசையாக இரண்டு கைகளிலும் வாங்கினார். கண்கள் கலங்கச் சொன்னார். ' யூ நோ சம்திங்? அஃப்டர் ட்வெண்டி ஃபைவ் இயர்ஸ், ஐ அம் கோயிங் டு ரீட் ஜேகே. தேங்க் யூ வெரிமச்.' சொல்லிவிட்டு விறு விறுவென நடந்து சென்றார். அன்றிலிருந்து நான்கு நாட்களுக்கு அவர் வீட்டின் வரவேற்பறையின் விளக்கு இரவு வெகுநேரம் எரிந்து கொண்டிருந்தது.

அடுத்தடுத்து ஜெயகாந்தனின் மற்ற நூல்களையும் அவருக்கு கொடுத்தேன். மெல்ல மெல்ல அவர் வீட்டின் சத்தம் குறையலாயிற்று. அவரது மனைவி, மகள்கள், மகன் என்று மொத்தக் குடும்பமும் எனக்கு நெருக்கமானார்கள். 'உங்களுடன் பழக ஆரம்பித்த பிறகுதான் அப்பா சாந்தமாகியிருக்கிறார்' என்றார் பிரசவத்துக்கு தாய் வீட்டிற்கு வந்திருந்த அவரது மூத்த மகள். கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வந்த பின் தாங்கள் மாம்பலத்தில் இருந்ததாகவும், அங்கு இருக்கப் பிடிக்காமல் விருகம்பாக்கத்துக்கு வந்ததாகவும் சொன்னார். 'ஏன், மாம்பலம் நல்ல ஏரியாதானே' என்று கேட்டதற்கு 'ஐய்யய்யோ, அங்கெல்லாம் ஒரே பிராமின்ஸ்' என்றார் கல்கத்தாவிலேயே வளர்ந்த அந்தப் பெண். என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. சந்தானம் இப்போது என்னிடம் நன்றாகப் பேச ஆரம்பித்திருந்தார். எனக்கு பிடித்த ஹிந்தி பாடல்களை பாடச் சொல்லி கேட்டு மகிழலானேன். அதில் என்னை கண்கலங்க வைக்கும் பாடல், ஆராதனா திரைப்படத்தில் எஸ்.டி.பர்மன் பாடிய 'காஹே கஹேரா'. வங்க தேசத்தின் நாட்டுப்புற மெட்டில் அமைந்த

*அந்த பாடலை சந்தானம் பாடும் போதெல்லாம் நான் எங்கோ தொலைதூரத்தில் இருப்பதாக உணர்வேன்.*

*ஏஷியாநெட்டில் ஒரு நாள் மோகன்லால் நடித்த 'பவித்ரம்' என்ற மலையாளப்படம் பார்த்தேன். ஒரு சமையல் குடும்பத்தில் பிறந்த மோகன்லாலின் தாயார் எதிர்பாராவிதமாகக் கர்ப்பமடைந்து விடுவார். மோகன்லாலுக்கு திருமணமான ஒரு அண்ணன் உண்டு. டாக்டரான அவர் வெளியூரில் வசிப்பார். தன் தாயார் கர்ப்பமான செய்தி அறிந்த மோகன்லால், அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடிவருவார். உள்ளே நுழைந்தவுடன் தகப்பனாரிடம் அம்மா எங்கே என்று கேட்பார். தர்மசங்கடத்தில் தவிக்கும் அவரது தகப்பனார் மகனின் முகம் பார்க்காமலேயே அங்குதான் எங்காவது இருப்பாள் என்று சொல்லி நழுவி விடுவார். அம்மா என்றழைத்தபடி வீடு முழுக்க மகன் வளைய வரும்போது அவரது தாயார் தன் அறையில் நின்று கொண்டு திருமண வயதில் உள்ள தன் மகனை இந்த நிலைமையில் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்று யோசித்தவாறே கூனிக்குறுகிச் சுவற்றுப் பக்கம் திரும்பி நின்றபடிக் காத்திருக்க, அவர் அறையின் வாசலில் வந்து நிற்கிறார் மோகன்லால். இனி வேறு வழியில்லை என்பதால் பெரும் கூச்சத்துடன் திரும்பி மகனை நிமிர்ந்து அந்தத் தாய் பார்க்கிறாள். மடித்துக் கட்டியிருந்த வேஷ்டியை அந்த மகன் அவிழ்த்துவிட, மாங்காய்கள் கொட்டுகின்றன. அன்று மாலையே என் வாத்தியார் பாலு மகேந்திராவைப் போய் பார்த்தேன். 'இப்படி ஒரு காட்சியை நம் தமிழ் சினிமாவில் பார்க்க முடியுமா. மலையாளிகள் வாழ்க்கையிலிருந்து படம் எடுக்கிறார்கள். நமக்கெல்லாம் அந்த மாதிரியான உணர்வு எப்போது வரப் போகிறது' என்றெல்லாம் புலம்பினேன். பொறுமையாக நான் சொல்வதைக் கேட்ட வாத்தியார், 'நீ ஜேகேயோட 'மௌனம் ஒரு பாஷை' படித்ததில்லையா' என்று கேட்டார். வெட்கிப் போனேன். நான் எப்படி ஜேகேயின் எழுத்தை விட்டிருக்கிறேன். அன்று இரவே சந்தானத்தை சந்தித்து இதை சொன்ன போது 'மௌனம் ஒரு பாஷை' முழுக்கதையையும் உணர்ச்சி பொங்க ஒப்பித்தார். அதன் பிறகே அந்த கதையை படித்தேன்.*

*ஜேகேயின் எழுத்துக்களைப் படிப்பதை விடவும் அதை பற்றிப் பேசுவதில் ஆர்வம் அதிகமானது சந்தானத்தின் மூலமாகத்தான். எதைப் பற்றி பேசினாலும் அதில் ஜேகேயை கொண்டு வந்து விடுவார். 'தவறுகள் குற்றங்கள் அல்லன்னு தலைப்பிலேயே கதையை சொல்லிட்டாரே மனுஷன். அதில வர்ற ஜஸ்ட் எ ஸ்லிப் நாட் எ ஃபால், ஞாபகம் இருக்கா' என்பார். ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகத்தில வருகிற ஹென்றி, துரைக்கண்ணு, நான் ஜன்னலருகே உட்காந்திருக்கிறேனில் வரும் அந்த பாட்டி, குருபீடத்தின் பிச்சைக்காரன், இறந்த காலங்களில் வரும் ஓசியிலேயே கெட்டுப் போகும் அந்த பிராமணத் தாத்தா, சில நேரங்களில் சில மனிதர்களில் வரும் வெங்கு மாமா, ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன அலங்காரவல்லியம்மாள் என சந்தானத்தையும் என்னையும் சுற்றி ஜேகேயின் கதைமாந்தர்கள் உலவிவந்த நேரம் என் வாழ்க்கையில் நான் மகிழ்ச்சியாக இருந்த காலங்களில் ஒன்று. அதற்குப் பிறகு நாங்கள் ஏ.வி.எம் காலனியை விட்டு வந்து விட்டோம். சந்தானமும் வேறு பகுதிக்கு வீடுகட்டிப் போய் விட்டார். தொடர்பில்லாமல் போனது. திடீரென்று ஒரு நாள் அவரது சஷ்டியப்த பூர்த்தி விழாவிற்கு அழைப்பு கொடுப்பதற்கு தம்பதி சமேதராக என்னைத் தேடி வீட்டுக்கே வந்தார்கள். நீண்ட நாட்கள் கழித்து சந்தித்துக் கொண்டோம். என்னை மறந்திருப்பார் என்றே நினைத்திருந்தேன். 'வராம இருந்திராதீரும்' என்றார். நானும், என் மனைவியும் சென்றோம். மணமேடையில் அமர்ந்தபடி சந்தானம் தம்பதியர் நெருங்கிய ரத்த உறவுகளுக்கு வேஷ்டி சேலை கொடுத்து கௌரவித்து வந்தனர். சற்றும் எதிர்பார்க்காத வேளையில் என்னையும் என் மனைவியையும் அழைத்து அதே மரியாதையை எங்களுக்கும் பண்ணினார். எங்களை அவர்களின் உறவினர்களோடு மணமேடையில் அமர வைத்து சந்தனம், குங்குமம் கொடுத்து பன்னீர் தெளித்து ஒரு தாம்பாளத்தில் வேஷ்டி, புடவை வைத்துக் கொடுத்து மகிழ்ந்தார். நான் கொஞ்சம் நெகிழ்ந்துதான் போனேன். அந்த மணிவிழாத் தம்பதியரின் கால்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் வாங்கிவிட்டு, மனம் நிறைந்து வீட்டுக்குத் திரும்பும் போது என் மனைவி கேட்டாள்.*

*'அப்படி என்ன நம்ம மேல அவங்களுக்கு அப்படி ஒரு பிரியம்?'*

*சட்டென்று என் மனதில் தோன்றிய பதில் இதுதான்.*

*'யுகசந்தி'.*

---

***சில மனிதர்கள், சில பாடல்கள்***

*பட்டினப்பிரவேசம் திரைப்படத்தின் 'வான்நிலா' என்னும் பாடலை கேட்கும் போதெல்லாம் எனக்கு*

அம்போத்தியின் ஞாபகம்தான் வரும். அம்போத்திக்கு அப்போதே எழுபது வயதுக்கு மேல் இருக்கும். 'நெஞ்சம் மறப்பதில்லை' நம்பியாரை ஞாபகப்படுத்தும் தோற்றத்தில் நரைத்த நீண்ட தாடி மீசை தலைமுடியுடன் சற்று குள்ளமாக இருப்பார். அழுக்கு வேட்டியும், சட்டையும்தான் உடை. நெற்றி நிறைய திருநீறு. நாற்பது வருடங்களுக்கும் மேலாக திருநெல்வேலியில் எடுபிடி வேலைகள் செய்து வாழ்ந்து வந்தவர் என்றே அம்போத்தியைப் பற்றி எல்லோரும் சொல்வர். அம்போத்தி கேரளாவைச் சேர்ந்தவர் என்றும், அம்பலத்து போத்தியே அம்போத்தி ஆனார் என்றும் பல தகவல்கள் அம்போத்தியைச் சுற்றி உலவி வந்தன. இவை எதையுமே அம்போத்தி மறுத்ததுமில்லை. ஆமோதித்ததுமில்லை. எங்கள் வீட்டுக்கு ஹிந்து படிக்க வரும்போதெல்லாம் அம்போத்தி வான்நிலா பாடலை முணுமுணுப்பார். 'நல்லா எளுதிருக்கான் . . . யாரு கண்ணதாசன்தானே . . . மியூசிக் விஸ்வநாதனாத்தான் இருக்கணும் . . நீ கொஞ்சம் அந்த பாட்டை பாடேன்' என்று என்னிடம் சொல்வார். அதற்குப் பின்னும் தெருவில், கோயிலில் எங்கு என்னை பார்த்தாலும் கண்கள் மலர சிரித்து 'வான்நிலா' என்று பாடுவார். தனது இறுதிக் காலத்தில் அம்போத்தி கொஞ்சம் கொஞ்சமாக பார்வை இழந்து வந்தார். கீழரதவீதியில் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருக்கும் அம்போத்தியைப் பார்த்து சைக்கிளை நிறுத்திவிட்டு பக்கத்தில் போய், 'அம்போத்தி, எங்கே போறீங்க' என்றேன். 'எவம்ல அவன் . . அம்போத்தியாம் அம்போத்தி . எவன் சொன்னான் எம் பேரு அம்போத்தின்னு' என்று கோபமாகச் சொன்னார். மெல்ல அவர் கையைப் பற்றி 'வான்நிலா' என்றேன். உடனே என் கையை அழுத்தமாகப் பிடித்து 'நிலா அல்ல உன் வாலிபம் நிலா' என்று பாடி மகிழ்ந்தார். அன்றுதான் நான் அம்போத்தியை கடைசியாகப் பார்த்தேன்.

தொலைக்காட்சி வசதிகள் வராத காலத்தில் திருநெல்வேலிப் பகுதியில் பெரிய பொழுது போக்குகளில் ஒன்று இலங்கை வானொலி கேட்பது. மயில்வாகனன் சர்வானந்தா, கே.எஸ்.ராஜா, ராஜேஸ்வரி ஷண்முகம், அப்துல் ஹமீது போன்ற பெயர்களைக் கேட்டபடியேதான் நெல்லைவாசிகளின் பொழுது விடியும். படத்தின் பெயரையும், பாடியவர்களின் பெயரையும் அறிவிப்பதோடு விட்டு விடுவதில்லை இந்த அறிவிப்பாளர்கள். சுத்தமான தமிழில் சொக்கவைக்கும் குரலில் பாடலைப் பற்றிய சிறு குறிப்பு ஒன்று கொடுத்து அதன் பிறகே பாடலை ஒலிபரப்புவார்கள். சில சமயங்களில் ஒலிபரப்பப்படும் பாடலை விடவும் இவர்களின் குறிப்பு சுவையாக இருக்கும். இப்போதெல்லாம் எல்லா தொலைக்காட்சிகளிலும் இருபத்திநான்கு மணிநேரமும் பாடல்களை ஒளிபரப்புகிறார்கள். அவர்கள் போடும் பாடலைக் கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இந்த தொகுப்பாளர்களின் தமிழும், நேயர்களுடன் அவர்களின் உரையாடலும் நம்மை கொலை வெறி கொள்ள வைக்கின்றன.

ஹாய் . . யார் பேசுறீங்க . . .

நான் போரூர்ல இருந்து சித்திரைச்செல்வன் பேசறேன் மேடம்

ஆங் சித்ராசெல்வன் . . சொல்லுங்க . . . . சாப்பிட்டாச்சா . . .

சாப்புட்டேன் மேடம் . .நீங்க சாப்பிட்டேங்களா . . .

சாப்பிட்டேன் சித்ராசெல்வன் . . என்ன பண்றீங்க . .

எஸ்.டி.டி. பூத்ல வேலை செய்ரேன் மேடம் . . ஓனர் வெளியெ போயிருக்காரு . . .

என்ன பாட்டு வேணும் . . .சொல்லுங்க . .

காக்க காக்க படத்துலேருந்து ஒன்ரா ரென்டா ஆசைகல் . . .

ஓ . .லவ்லி சாங்க் . . . யாருக்கு டெடிகேட் பன்ன விறும்பரீங்க . .

என் லவ்வர் ப்ரீத்திக்கு டெடிகேட் பன்னுங்க மேடம் . .

கேப்டனுக்கு தமிழில் பிடிக்காத வார்த்தை மன்னிப்பு என்றால் எனக்கு ஆங்கிலத்தில் கேட்டாலே வெறுப்பு வருகிற வார்த்தை இந்த Dedicate.

ராஜேஸ்வரி அக்கா அம்மாவை விட பத்து வயது இளையவள். ஆனாலும் தோழி. எங்கள் வீட்டுக்கு எதிரே உள்ள எங்களுக்கு சொந்தமான வீட்டில்தான் குடியிருந்தாள். காதோரம் நீண்டு படர்ந்திருக்கும்

தலைமுடியுடன் பார்ப்பதற்கு நடிகை விதுபாலா சாயலில் இருப்பாள். காதில் இரண்டு பெரிய ரிங் போட்டிருப்பாள். ராஜெஸ்வரி அக்கா வீட்டில் டிரான்ஸிஸ்டர் கிடையாது. வானொலி கேட்க எங்கள் வீட்டுக்குத்தான் வருவாள். அவளுக்கு பிடித்தமான பாடல்களில் ஒன்றான 'ஆகாயப் பந்தலிலே' என்னும் பொன்னூஞ்சல் படப் பாடலை அன்று ஒலிபரப்பவில்லை என்றால் ரொம்பவும் வருத்தப் படுவாள். அதைவிடவும் நல்ல பல பாடல்கள் அன்றைக்கு ஒலிபரப்பப்பட்டாலும் அவளுக்கு அதில் மகிழ்ச்சியிருக்காது. ராஜேஸ்வரி அக்கா இல்லாத சமயத்தில் ஆகாயப் பந்தலிலே பாடல் ஒலிபரப்பானால் அம்மா உடனே என்னிடம் டிரான்ஸிஸ்டரை கொடுத்து 'போ . .போயி ராஜேஸ்வரி அக்காட்ட கொண்டு குடு சந்தோஷப்படுவா' என்பாள். நான் உற்சாகமாக ஓடிப்போய் 'அக்கா . .பந்தல் போடுது பந்தல் போடுது' என்பேன். ராஜேஸ்வரி அக்கா முகமெல்லாம் மலர்ந்து என்னையும், டிரான்ஸிஸ்டரையும் வாரியணைத்து பாடலைக் கேட்டு மகிழ்வாள். அக்காவுக்கு திருமணமாகி சென்னைக்குப் போய்விட்டாள். நான் அவளைப் பார்த்து இருபத்தைந்து வருடங்களாயிற்று. தொடர்பே இல்லை. அம்மா இறந்த செய்தி கூட அவளுக்கு தெரியுமோ, என்னவோ. 'ஆகாயப்பந்தலிலே' பாடலை கேட்கும் போதெல்லாம் அம்மாவையும், என்னையும் எப்படியும் நினைப்பாள்தான்.

டேப்ரிக்கார்டர் புழக்கத்தில் இல்லா காலத்தில் மின்சார இணைப்பில் இயங்கும் பெரிய வானொலிப்பெட்டி, பேட்டரியில் இயங்கும் சின்ன டிரான்ஸிஸ்டர் மற்றும் கையடக்க பாக்கெட் டிரான்ஸிஸ்டர் போன்றவைக்கு மவுசு அதிகம். அப்பா புதிதாக வாங்கிக் கொடுத்த பாக்கெட் டிரான்ஸிஸ்டரை கையில் வைத்துக் கொண்டு டியூன் பண்ணியவாறே வாசலில் அமர்ந்திருந்த போது தற்செயலாக குகன் வந்து என்னருகில் அமர்ந்தான். குகனும் கிட்டத்தட்ட பாக்கெட் டிரான்ஸிஸ்டர் சைஸில்தான் இருப்பான். ஒரு லாலா கடையில் சரக்கு மாஸ்டராக வேலை பார்த்து வந்த குகன் சற்றே பெண்மை கலந்தவன். நடை, உடை, பாவனையில் ஒரு நளினம். உட்காரும்போதே மணமேடையில் உட்காரும் மணப்பெண் போலத்தான் உட்காருவான். வேலை முடிஞ்சுதா குகா என்று சம்பிரதாயமாகக் கேட்டுவிட்டு டிரான்ஸிஸ்டரையே நோண்டிக் கொண்டிருந்தேன். 'மல்லிகை என் மன்னன் மயங்கும்' பாடல் கேட்டது. அவசர அவசரமாக டிரான்ஸிஸ்டரின் டியூனிங் பட்டனைத் திருப்பினேன். இந்த கோடியிலிருந்து அந்த கோடிவரை போய் பார்த்தும் பாட்டை பிடிக்க முடியவில்லை. 'என்ன தேடுதே' என்றான் குகன். 'இல்ல, மல்லிகை பாட்டு கேட்டுது. எந்த ஸ்டேஷன்னு தெரியல. பாட்டு முடிஞ்சுட்டு போல' என்றேன். களுக்கென்று சிரித்தபடி குகன் 'சரியா போச்சு போ. நான்ல்லா பாடுனேன்' என்றான். உண்மைதான். பெண்குரலில் நன்றாகப் பாடக்கூடியவன் குகன் என்பதே எனக்கு அப்போதுதான் ஞாபகம் வந்தது. டிரான்ஸிஸ்டரை அமர்த்திவிட்டு ஒருமுறை அந்த பாடலை முழுவதும் குகனைப் பாடச் சொல்லிக் கேட்டேன். இன்றைக்கும் நான் தொலைக்காட்சிகளில் தீர்க்கசுமங்கலி படத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவ்வளவு பெரிய கே.ஆர்.விஜயாவுக்கு பதிலாக சின்னஞ்சிறிய குகனே தலை நிறைய பூ வைத்துக் கொண்டு முத்துராமனின் தோளில் சாய்ந்து 'மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ' என்று பாடுகிறான்.

பாரத ஸ்டேட் வங்கியில் பணிபுரியும் பெரியண்ணன் தபலா வாசிப்பான். தனது கிளையில் ஏதோ ஒரு நிகழ்ச்சிக்காக எங்களையெல்லாம் அழைத்துச் சென்றான். மெல்லிசை கச்சேரி இருக்கிறது என்பதால் உற்சாகமாகவே கிளம்பிப் போனோம். ஓரிரு வாத்தியங்களோடு ஒரு சின்ன ஹாலில் குட்டியாய் ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். எங்கள் குடும்ப நண்பரும், அரசாங்கப் பள்ளியாசிரியருமான சொக்கலிங்க மாமாவும் பாடினார். சாதாரணமாக பயந்த சுபாவமுள்ள சொக்கலிங்க மாமா, மேடையேறி விட்டால் எதற்கும் துணிந்து விடுவார். நன்றாக ஹார்மோனியம் வாசிக்கக் கூடிய மாமாவுக்கு பாடுவதில் பேரானந்தம். கேட்பவரின் நிலைமை குறித்த கவலை அவருக்கு கிஞ்சித்தும் கிடையாது. ஓரளவு இசை ஞானமும், ரொம்ப சுமாரான குரலும் கொண்ட சொக்கலிங்க மாமாவின் பாட்டைக் கேட்க நமக்கு தேவை அசாத்திய பொறுமையும், மனத்திடமும் மட்டுமே. மாமா தேர்ந்தெடுக்கும் பாடல்கள் அவரது தைரியத்தை பறை சாற்றும். அன்று மாமா பாடிய பாடல்களில் என்னால் இன்றைக்கும் மறக்க முடியாத பாடல், மதுரை வீரன் படப்பாடலான 'நாடகமெல்லாம் கண்டேன்.' ஜிக்கியின் குரலில் பாடகி கண்ணம்மா பாடினார். நல்ல குரல் வளமும், முறையான இசையறிவும், பயிற்சியும் கைகொடுக்க அருமையாகவே பாடினார் கண்ணம்மா. மாமாவும் பாடினார். நடபைரவி ராகத்தில் இசைமேதை ஜி.ராமனாதனால் மெட்டமைக்கப்பட்ட அந்த பாடலின் மத்தியில் ஒரு இடம். அன்னம் நடைபயில என்று பாடிவிட்டு டி.எம்.சௌந்தர்ராஜன் மேலே இரண்டு படிகள் ஏறிச் சென்று ஒரு சின்ன விளையாட்டு காட்டிவிட்டு மறுபடியும் கீழே இறங்கி வந்து நீந்தி பின் பாடலின் ஆதார மெட்டுக்கு வந்து ஜிக்கியுடன் இணைவார். அன்னம் நடைபயில வரை மாமா சென்றுவிட்டார். அதற்கு மேலும் போக முடியாமல், கீழேயும் இறங்க முயலாமல் அவதிப்பட்டு பின் எந்தவித கூச்சமுமில்லாமல் ஓர் அறிவிப்பை செய்தார். 'இன்றைக்கு என் தொண்டை கொஞ்சம் சரியில்லை. அதனால் பொறுத்தருள்க.' உடனே அடுத்த அடிக்கு போய்விட்டார். அந்தத் தொண்டையால் அவ்வளவுதான் முடியும் என்பது அவரையும் விட அவரை அறிந்த

*எல்லோருக்கும் நன்றாக தெரிந்த உண்மை. அனுபவித்து கேட்க வேண்டிய அற்புதமான பாடலான நாடகமெல்லாம் கண்டேன் பாடலை சொக்கலிங்க மாமாவின் புண்ணியத்தால் இன்றளவும் சிரித்தபடி கேட்டுத் தொலைக்க வேண்டியுள்ளது.*

*மார்கழிமாதத்தில் ஒரு நாள் சாலிகிராமத்திலுள்ள சங்கரநாராயணர் கோயிலுக்குச் சென்ற போது ஒரு கர்நாடக சங்கீத கச்சேரிக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. சோம்பலும், தூரமும் டிஸம்பர் ஸீஸன் கச்சேரிகளுக்கு செல்ல விடாமல் தடுப்பதால் பக்கத்தில் நடக்கும் இதையாவது அனுபவிப்போமே என்று போய் உட்கார்ந்தேன். ஓய்வு பெற்ற அரசு அதிகாரி போன்ற ஒரு பெரியவர் மேடையில் அமர்ந்தார். அரை டிரவுஸர் போட்ட ஒரு சிறுவன் மிருதங்கத்தில் ரவை சேர்த்து சாப்பு கொடுக்கவும் நல்ல நாதம் காதில் விழுந்தது. மனம் உற்சாகமடைந்தது. பாதியிலேயே விட்டுவிட்ட மிருதங்க பயிற்சியை நினைத்து உள்ளுக்குள் குற்றவுணர்ச்சி அதிகரித்தது. பாடகர் பாட ஆரம்பிக்கும் முன் வீட்டிலிருந்து கொண்டு வந்த பாட்டிலிலிருந்து தண்ணீர் குடித்துக் கொண்டார். சீரகத் தண்ணீர் போல தெரிந்தது. உடன் ஒரு வயலின் மற்றும் சுதிப் பெட்டி. சாருகேஸியில் ஆலாபனையைத் தொடங்கினார். ஒன்றும் மோசமில்லை. சுதி விலகவுமில்லை. பத்து நிமிடங்கள் சாருகேஸியில் சஞ்சரித்தார். பிறகு 'வாதாபி கணபதிம்' பாட ஆரம்பித்தார். சிந்துபைரவி திரைப்படத்தில் இளையராஜா காம்போஜியில் உள்ள 'மரிமரி நின்னே' கீர்த்தனையை சாருமதியில் மாற்றிப் போட்டதை எல்லோரும் பெருமையாகச் சொல்கிறார்கள். ஆனால் மேற்படி பாடகர், இளையராஜாவையெல்லாம் தூக்கி சாப்பிடுகிற மாதிரி, ஹம்ஸத்வனியில் பாட வேண்டிய வாதாபி கணபதிம் பஜேயை சர்வ சாதாரணமாக சாருகேஸியில் பாடியதைப் பார்த்து நான் அதிர்ந்து போனேன். அடுத்ததாக 'வாசுதேவயனி' ஆரம்பித்தார். கல்யாணியின் சாயல் கொஞ்சமும் வராமல் பார்த்துக் கொண்டார். அதுவும் சாருகேசியிலேயே பாடினார். நான் மெல்ல எழுந்து வெளியே வந்தேன். மனிதர் அதற்குள் 'மீவல்ல' என்று அடுத்த அஸ்திரத்தை எடுத்து விட்டார். அடக்கி ஒடுக்கி காப்பி ராகத்தையும் சாருகேஸிக்குள்ளேயே வைத்து பாதுகாத்தார். வெறுப்பின் உச்சத்தில் கோயில் நுழைவாயிலின் அருகிலுள்ள அலுவலக அறைக்கு போனேன். அங்கே அமர்ந்த படி கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்த ஒரு பெரியவரிடம் போய் கேட்டேன்.*

*ஸார், பாடுறது யாருன்னு தெரிஞ்சுக்கலாமா ?*

*அவர் பேரு சுந்தர்ராஜன். 'சாருகேஸி' சுந்தர்ராஜன்னா எல்லாருக்கும் தெரியும்.*

---

**காதல் மன்னன்**

*மந்திரமூர்த்தியின் வீட்டை டாக்டர்பிள்ளை வீடு என்றுதான் எல்லோரும் அடையாளம் சொல்வர். மந்திரமூர்த்தியின் பூட்டனார், அதாவது தாத்தாவின் தகப்பனார், அந்த காலத்தில் புகழ் பெற்ற டாக்டராக இருந்திருக்கிறார். அவர் கட்டிய வீடு என்பதால் டாக்டர்பிள்ளை வீடு. மந்திரமூர்த்தியின் தகப்பனார், தனது இரண்டு சகோதரர்களுடன் ஒரே குடும்பமாக அந்த பெரிய வீட்டில் வசித்து வந்தார். பள்ளியில் ஒன்றாகப் படித்த நாட்களிலிருந்து இன்றுவரை மந்திரமூர்த்தி என் தோழன். என்னைப் போலவே நல்ல நிறம். ஒடிசலாக, உயரமாக இருப்பான். மனமெங்கும் தாழ்வு மனப்பான்மையும், கூச்ச சுபாவமும் உடையவன். தெருவில் நடந்து செல்லும் போது தூரத்தில் நான்கு பையன்கள் நின்று பேசிக் கொண்டிருந்தாலே வா, வேறு பக்கமாகப் போகலாம் என்று நம்மை இழுத்துச் செல்பவன். ஆனால் காதல் விஷயத்தில் மட்டும் உறுதியானவன்.*

*முதலில் மந்திரமூர்த்தி காதலித்தது தன்னை விட இரண்டு வயது மூத்தவளான பாத்திமாவை. பாத்திமாவின் அண்ணனும், மந்திரமூர்த்தியின் அண்ணனும் கிளாஸ்மேட்ஸ். அவள் சினிமாவுக்குக் கிளம்பினால் எப்படியாவது தகவல் தெரிந்து கொண்டு எங்களை நச்சரித்து சினிமாவுக்கு இழுத்துச் செல்வான். தினமும் டியூஷனுக்கு போகும் அவளை பத்திரமாகக் கூட்டிச் சென்று பின் வீட்டுக்குக் கொண்டு போய் சேர்த்து வந்தான். ஆனால் தன் கூடவே இவன் வருவது பாத்திமாவுக்கு தெரிந்துவிடாத அளவு இடைவெளியில்தான் நடப்பான். அவளுக்கு திருமணம் ஆகும் வரைக்கும் அது தெரியாமலேயே போனதுதான் சோகம்.*

*பாத்திமாவின் திருமணத்தை நல்லபடியாக நடத்தி முடித்துவிட்டு மந்திரமூர்த்தி அடுத்து காதலிக்கத் தேர்ந்தெடுத்த பெண் மனோரஞ்சிதம். இவள் மூன்று வயது மூத்தவள். டாக்டர்பிள்ளை வீட்டுக்கு பக்கத்து வீடு. கல்லூரியில் படித்து வந்தாள். இவளை காதலித்ததில் மந்திரமூர்த்திக்கு இருந்த ஒரே சிக்கல் அவள் வேறொருவனை காதலித்து வந்தாள். அதற்காகவெல்லாம் மந்திரமூர்த்தி மனம் தளரவில்லை. எப்படியாவது மனோரஞ்சிதத்தின் காதலனை அடித்து மிரட்டி காதலிலிருந்து துரத்தி விட வேண்டும்*

என்று அடிக்கடி சொல்லி வந்தான். அழகனும், பலசாலியும், புத்திசாலியுமான மனோரஞ்சிதத்தின் காதலன் கந்தகுமார் பின்வரும் காலங்களில் எங்களுக்கு நண்பனாகிப் போனான். அப்போதெல்லாம் பழைய விஷயங்களைக் கேள்விப்பட்டு , 'எப்பா என்னை அடிச்சுக் கிடிச்சுப் போடாதீங்கப்பா' என்று கலாட்டா செய்வான். அந்த சமயத்தில் மந்திரமூர்த்தி, கந்தகுமார் இருவருமே மனோரஞ்சிதத்தை மறந்து விட்டிருந்தனர். அவளது கணவன் ஒரு முரடன் என்பதே அதற்கு காரணம்.

கல்லூரிக்குச் சென்றபின் மந்திரமூர்த்தி காதலித்தது உமாவை. தினமும் திருநெல்வேலி ஜங்ஷன் பஸ்ஸ்டாண்டில் அவளை பஸ் ஏற்றிவிட்டு அதற்கு பின்பே இவன் கிளம்புவான். எங்களை விட ஒரே ஒரு வயது இளையவனான மீனாட்சி சுந்தரம்தான் மந்திரமூர்த்திக்குத் துணையாக இந்த காதலில் நின்றவன். என்னை சித்தப்பா என்றும், மந்திரமூர்த்தியை மாமா என்றும் அழைக்கும் மீனாட்சியிடம் கேட்டேன்.

எல, ஒங்க மாமன் காதலிக்கிற அந்தப் பொண்ணு நல்லா இருக்குமா?

என்ன இப்படி கேட்டுட்டிய சித்தப்பா . . செலக்கார் ஜானகியைப் பாத்தா எங்க அத்தையப் பாக்க வேண்டாம்.

சௌகார் ஜானகியை மீனாட்சி செலக்கார் ஜானகி என்றே இன்றைக்கும் சொல்வான்.

மந்திரமூர்த்தி காதலிக்கும் எல்லாப் பெண்களையும் போல உமாவுக்கும் மந்திரமூர்த்தியை யாரென்றே தெரியாது. ஆனாலும் மந்திரமூர்த்தி சும்மா இருந்துவிடவில்லை. ஒரு புத்தாண்டு தினத்திற்கு வாழ்த்து அட்டை வாங்கி அந்த பெண்ணிற்கு அனுப்ப முடிவு செய்து விட்டான். இயல்பிலேயே பயங்கரமான தைரியசாலி என்பதால் அந்த வாழ்த்து அட்டையில் கையெழுத்திடுவதற்கு வேறொருவனை தேர்ந்தெடுத்தான். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவன் குஞ்சுவின் தம்பி பாலாஜி. பாலாஜி மிகவும் மகிழ்ச்சியாக நம்மிடம் ஒருவன் கையெழுத்தெல்லாம் கேட்கிறானே என்று என்னமோ ஆட்டொகிராஃப் போடுவது போல் போட்டு விட்டான். அதற்குப் பிறகுதான் அந்த பெண் உமாவின் தகப்பனார் போலீஸ் துறையில் வேலை பார்க்கிறார் என்னும் விவரத்தை நாங்கள் பாலாஜியிடம் சொன்னோம். விளைவு, மந்திரமூர்த்தியின் தொடர்பை துண்டித்துவிட்டு நிற்காத வயிற்றுப் போக்கின் காரணமாக ஒரு வாரம் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தான் பாலாஜி. அந்த வாழ்த்து அட்டை மந்திரமூர்த்தி தன் மன திருப்திக்காக எழுதி கவரெல்லாம் ஒட்டியும் தன் பெட்டிக்குள்ளேயே வைத்திருந்த விவரம் பிறகு தெரிய வந்தது. அதற்கு பிறகுதான் பாலாஜியின் உடம்பு இயல்புநிலைக்கு வந்து லேசாகச் சிரிக்க ஆரம்பித்தான்.

மெல்ல மெல்ல மந்திரமூர்த்தி காதலிக்கும் பெண்களின் வயது குறைய ஆரம்பித்தது. அவனது தூரத்து உறவில் மாமன்மகள் முறை வருகிற ஒரு பெண்ணை போனால் போகிறது என்று காதலிக்கத் தொடங்கினான். அந்த பெண் அப்போது ப்ளஸ்டூ படித்து வந்தாள். அந்தப் பெண் உன்னை காதலிக்கிறாள் என்று எப்படி சொல்கிறாய் என்று கேட்டதற்கு, ஒரு முறை அவள் வீட்டுக்கு குடும்பத்துடன் இவன் சென்ற போது அந்தப் பெண் சிரித்தபடியே 'வாங்க' என்றழைத்ததை நினைவு கூர்ந்தான். பிறகு ஒருமுறை பத்திரமாக வைத்திருக்கும் படி ஒரு புகைப்படத்தை என்னிடம் கொடுத்தான். அது அந்த மாமன் மகளின் பூப்புனித நீராட்டுவிழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படம். ஆல்பத்திலிருந்து உருவியிருக்கிறான் என்பது அவன் சொல்லாமலேயே தெரிந்தது. கேட்டால் எப்படியும் ஒத்துக் கொள்ளாமல் அவளே கொடுத்ததாகத்தான் சொல்வான் என்பதால் அமைதியாக வாங்கி வைத்துக் கொண்டேன். ரொம்ப நாட்கள் கழித்து அவனிடமே அந்த புகைப்படத்தை நான் திருப்பிக் கொடுத்த போது அதை வாங்கிக் கிழித்து போட்டான். இந்த முறை மந்திரமூர்த்திக்கே திருமணமாகியிருந்தது.

தற்போது ஒரு டால்கம் பவுடர் நிறுவனத்தின் ஏரியா மேனேஜராக இருக்கும் மந்திரமூர்த்தி தமிழ்நாடு முழுவதும் சுற்றி வருகிறான். சென்னையில் வீடுகட்டி மனைவி, மகளுடன் வசிக்கிறான். முன் வழுக்கையும், தொப்பையுமாகப் பார்ப்பதற்கு வேறு ஆளாகிவிட்டான். நீண்ட காலத்துக்குப் பின் நான், நண்பன் குஞ்சு, மந்திரமூர்த்தி மூவரும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தோம். குஞ்சுதான் மெல்ல வாயைக் கிளறினான்.

அப்புறம் மந்திரமூர்த்தி சொல்லு . . வேறென்ன விசேஷம் . .

*ஒண்ணுமில்லேப்பா . . .ஏதோ போயிக்கிட்டிருக்கு . . .*

*ஏதாவது இருக்குமே . . . நீ காதல் மன்னனாச்சே. . .வந்து விளுவாங்களே உன் மேல . . . . சும்மா சொல்லுல . .பந்தா பண்ணாதே . . .*

*சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு, பெயருக்கு ஒரு இழுப்பு இழுத்து புகை அனைத்தையும் வெளியே விட்டு சொன்னான்.*

*இங்கே சென்னை ஆஃபீஸ்க்கு நான் எத்தனை மணிக்கு போவேன்கிறது எனக்கே தெரியாது. ஆனா நான் போற நேரமெல்லாம் கரெக்டா எங்க ஆஃபீஸ் மாடில குடியிருக்கிற பொண்ணு வந்து நிக்கா. இதுக்கு என்ன அர்த்தம்?*

*நான் குஞ்சுவைப் பார்த்தேன். குஞ்சு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.*

---

***பன்மொழிப்புலமை***

*கமலஹாசன் அவர்களிடம் ஒரு முறை கேட்டேன். ஏழெட்டு மொழிகள் தெரிந்த நீங்கள் வேற்று மொழி கற்றுக் கொள்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்களேன் என்று. கொஞ்சம் முயற்சியும், நிறைய ஆர்வமும் இருந்தால் எந்த பாஷையும், எத்தனை பாஷையும் கற்றுக் கொள்ளலாம் என்றார். அது உண்மைதான். என்னைப் போன்ற சோம்பேறிகளுக்கு ஒன்றிருந்தால் ஒன்று இருக்காது. தமிழையே ஒழுங்காகக் கற்றுக் கொள்ளவில்லை என்கிற தாழ்வுணர்ச்சி இன்று வரை உண்டு. அது போக கொஞ்சம் உடைந்த ஆங்கிலம் தெரியும். அதாவது எங்காவது போனால் எனக்கு தெரிந்த ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு தங்க, குளிக்க, சாப்பிட முடியும். அது போதாதா. அம்மாவுக்கும், அப்பாவுக்கும் தமிழ், ஆங்கிலம் தவிர ஹிந்தி எழுதப்படிக்கத் தெரியும். தொடர்ந்து ஆர்வமுடன் பார்த்த மலையாளப் படங்களின் புண்ணியத்தில், யார் என்னிடம் மலையாளத்தில் பேசினாலும் என்னால் புரிந்து கொள்ள முடியும். முக்கியமான மலையாள ஜோக்குகளை நண்பர் ஜெயமோகன் என்னிடத்தில் மலையாளத்திலேயே சொல்வார். மோகனுக்கு தமிழ், ஆங்கிலம், மலையாளம் தவிர சமஸ்கிருதப் பரிச்சயமும் உண்டு. சகோதரி அருண்மொழிக்கும் தமிழ், ஆங்கிலம் தவிர மலையாளம் தெரியும் என்றே நினைக்கிறேன்.*

*ஐந்தாம் வகுப்பு வரை பள்ளியில் படித்த ஹிந்தியில் 'க' ஒன்றைத் தவிர வேறு ஒன்றுமே நினைவில் இல்லை.1996 ஆம் வருடம் என் ஆசான் திருபாலு மகேந்திரா அவர்கள் ஒரு ஹிந்தி படம் எடுக்க முடிவு செய்தார். நான் அவருடைய அஸோஸியேட் டைரக்டர். படப்பிடிப்பு தேதி நெருங்க நெருங்க, எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. ரேவதி, ரமேஷ் அரவிந்த், ஹீரா என எனக்கு நன்கு பழக்கமான தென்னிந்திய நட்சத்திரங்கள்தான் நடிக்கிறார்கள் என்றாலும் வசனம் சொல்லிக் கொடுக்க வேண்டுமே. அங்குதான் சிக்கல். பொதுவாகவே நான் வசனம் சொல்லிக் கொடுக்கும் முறையில் திருப்தி அடைந்து காமிராவிலேயே அமர்ந்து விடுவார் என் வாத்தியார். பாடல்கள் பற்றி முடிவு செய்ய இளையராஜா அவர்களைப் பார்க்க போய் அவருக்காகக் காத்திருந்த போது மெல்ல வாத்தியாரிடம் விஷயத்தை சொன்னேன். என்ன சொல்றே. உனக்கு ஹிந்தி தெரியாதா என்றார். 'நமஸ்தே'ங்கிற ஒரு வார்த்தையைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது என்றேன். பிறகு ஹிந்தி தெரிந்த உதவியாளர்களை வைத்துக் கொண்டு சமாளித்தோம். இளையராஜா அவர்களும் எனக்குத்தெரிந்து தமிழ், ஆங்கிலம், மலையாளம்,தெலுங்கு பேசுவார். ஹிந்தியும் புரிந்து கொள்வார். வாத்தியாருக்கு தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நல்ல புலைமை உண்டு. சிங்களமும் தெரியும். மலையாளம் பேச மாட்டார். புரிந்து கொள்வார்.*

*நண்பர்களில் எஸ்.ராமகிருஷ்ணனுக்கு தமிழ், ஆங்கிலம் தவிர மலையாளம் படிப்பார்.தெலுங்கு புரிந்து கொள்வார். 'நான் கடவுள்' படத்தில் பணியாற்றியவரும், இசை விமரிசகரும், ஏ.ஆர்.ரஹ்மானின் நண்பருமான எழுத்தாளர் ஷாஜிக்கு எட்டு பாஷைகள் எழுதப் படிக்க தெரியும். நாஞ்சில் நாடன் அவர்களுக்கு தமிழ், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி, மராட்டி என ஐந்து மொழிகள் தெரியும் என்றே கருதுகிறேன். பாரதி மணி பாட்டையாவுக்கும் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம் என பல பாஷைகளில் புலமை உண்டு. எங்களைப் போன்ற நெருக்கமானவர்களிடம் அவர் பேசும் பிரத்தியேக பாஷை பற்றி பொதுவில் சொல்ல இயலாது.*

*என் வீட்டம்மாவுக்கு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், மலையாளம் என ஐந்து மொழிகள் தெரியும். இதில் தமிழில் மட்டும்தான் கொஞ்சம் புலமை கம்மி. தனக்குத் தெரிந்த எல்லா பாஷைகளிலும் என்னை*

*சரமாரியாக அவர்கள் தாக்கும் போதெல்லாம் எல்லா கணவர்களுக்குமான பொது மொழியாகிய மௌனமொழியில் பதிலடி கொடுப்பேன். நிலைகுலைந்து போவார்.*

*ஹிந்தி தெரியாமல் ஜெயமோகன், ஆர்தர் வில்ஸன், ஆர்யா உட்பட நாங்களனைவரும் நாற்பது நாட்கள் காசியில் பட்ட பாட்டை ஒரு தனி புத்தகமாகவே எழுதலாம். ரயிலில் நாங்கள் பயணிக்கும் போது எங்களுடன் நான் மிகவும் மதிக்கும் கலை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வந்தார். ஜி.வி.ஐயர், எம்.டி.வாசுதேவன் நாயர், பரதன் போன்ற ஜாம்பவான்களுடன் பல மொழிப் படங்களில் பணியாற்றிய மேதை அவர். இந்தியா முழுதும் சுற்றியவர். இரண்டு நாட்களும் ரயிலில் பல்வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டே சென்றோம். பேச்சுவாக்கில் நான் கிருஷ்ணமூர்த்தி ஸாரிடம் உங்களுக்கு ஹிந்தி தெரியும்தானே ஸார் என்று கேட்டுத் தொலைத்து விட்டேன். மனிதருக்கு மூக்கின் மேல் கோபம் வந்துவிட்டது. என்ன ஸார் கேக்குறீங்க? எனக்கு எப்படி ஹிந்தி தெரியாமல் போகும் என்றார். நான் பதறிப் போய் அவர் கைகால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். ஜெயமோகனும் இதுதான் சாக்கென்று 'அவருக்கிருக்கும் அனுபவத்திற்கு அவரிடம் போய் இப்படி முட்டாள்தனமாகக் கேட்கலாமா' என்று என்னை வறுத்தெடுத்து விட்டார். அதன் பிறகு காசிக்குப் போய் சேரும் வரை கிருஷ்ணமூர்த்தி ஸாரிடம் ஒரு சேவகன் போல் பணிவுடன் நடந்து கொண்டேன். 'மோகன், நாம் காசியியில் எங்கு சென்றாலும் கிருஷ்ணமூர்த்தி ஸாருடனே செல்வோம். அதுதான் நமக்கும் நல்லது' என்று ஜெயமோகனிடம் சொன்னேன். அவரும் ஒத்துக் கொண்டார். காசியில் போய் இறங்கியதும் போலீஸிடம் மாட்டிக் கொண்டோம். ஒற்றைக் கடுக்கன் போட்டிருக்கும் ஆர்தர் வில்ஸனும், பச்சை கண்கள் கொண்ட ஆர்யாவும் சந்தேகத்துக்கிடமின்றி தீவிரவாதிகள் என்றே உத்திரப் பிரதேச போலீஸார் நம்பினர். கிருஷ்ணமூர்த்தி ஸார் எங்களுக்கு முன்பே காரில் ஹோட்டலுக்குச் சென்று விட்டதால் எங்களை காப்பாற்ற ஹிந்தி தெரிவார் யாருமில்லை. அப்புறம் ஒரு வழியாக எங்கள் தயாரிப்பு நிர்வாகி லோகு வந்து இன்ன பாஷை என்றே கண்டுபிடிக்க முடியாத ஒரு பாஷையில் பேசி உ.பி.போலீஸை குழப்பி திகிலுக்குள்ளாக்கி எங்களை விடுவித்தார்.*

*கிருஷ்ணமூர்த்தி ஸாரிடம் போய் விஷயத்தை சொன்னோம். சே. . . . நான் இல்லாமல் போனேனே என்று வருந்தினார். அதன் பிறகு காசியில் கிருஷ்ணமூர்த்தி ஸாரை தொந்தரவு செய்யாமல் நாங்களே ஒரு மாதிரியாக சமாளித்துக் கொண்டோம். காரணம் வேறொன்றுமில்லை. 'கிதர் ஹே' என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த ஒரு ஹிந்தி வார்த்தையும் அவர் பேசி அந்த நாற்பது நாட்களில் நாங்கள் யாருமே கேட்கவில்லை. படப்பிடிப்பு முடிந்து ஒரு நாள் கங்கைக் கரையில் விறுவிறுவென நடந்து வந்து கொண்டிருந்த என்னிடமே ஒரு பேனரை காட்டி 'ஃ கேலரி கிதர் ஹே' என்று கிருஷ்ணமூர்த்தி ஸார் கேட்டதுதான் அதில் உச்சம்.*

*பல மொழிகள் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற ஆர்வமிருந்தாலும் எனக்கும், கவிஞரும், ஒளிப்பதிவாளருமான என் நண்பர் செழியனுக்கும் தெரிந்ததென்னவோ தமிழும், ஆங்கிலமும்தான். இதுபோக இப்பூவலகில் எங்கள் இருவருக்கும் மட்டுமே தெரிந்த மூன்றாவது மொழியைப் பேசும் அந்த மூன்றாவது நபர் இப்போது உயிருடன் இல்லை.*

*அந்த நபர் காலஞ்சென்ற திருயாகவா முனிவர். மொழி இனான்ய மொழி.*

---

***திசை***

*சில மாதங்களுக்கு முன் நானும், திருநாஞ்சில் நாடன் அவர்களும் என் மகனை அழைத்துக் கொண்டு என் தம்பியின் வீட்டுக்குப் போனோம். நாங்கள் இருப்பது சாலிகிராமத்தில். தம்பி பட்டாபிராமில். அது ஆவடியைத் தாண்டி உள்ளது. இதுவரை இரண்டே இரண்டு முறைதான் நானே போயிருக்கிறேன். தனியாகச் செல்வதற்கு எனக்கு வழி தெரியாது. பட்டாபிராமுக்கு என்று இல்லை. எங்கு செல்வதற்கும். தம்பி எங்களை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வரச் சொல்லியிருந்தான். அங்கு அவன் வந்து எங்களை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு. எழும்பூர் வரை செல்வதில் எனக்கு சிக்கலில்லை என்றாலும் புத்திசாலித்தனமாக மின்சார ரயிலைப் பிடித்துவிட்டேன். எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனிலேயே இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதால் பதற்றமில்லாமல் இருந்தேன். நாங்கள் எழும்பூர் சென்று இறங்கும் போதே காலை 11 மணிக்கு மேலாகியிருந்தது. சிறிது நேரம் காத்திருந்தோம். தம்பியைக் காணோம். தொலைபேசியில் அழைத்தேன். 'அங்கேயே இருங்க. வந்திருதேன்' என்றான். 'எந்தப் பக்கத்திலிருந்து வருவே' என்று கேட்டதற்கு ' கௌக்க இருந்து வருவேன்' என்றான். அவன் எப்போதும் இப்படித்தான். திசை சொல்வான். எனக்கு எது கிழக்கு என்று தெரியவில்லை. அப்படி தெரிய*

வேண்டுமென்றால் என் வீட்டுக்குப் போனால்தான் சொல்ல முடியும். என் வீடு வடக்கு பார்த்த வீடு. அங்கு போய் அங்கிருந்தே கவனமாகப் பார்த்துக் கொண்டு எழும்பூர் வரை மீண்டும் வருவது நடக்கிற காரியமா? ' சித்தப்பா, கெளக்கே இருந்து வாரேங்கான்'. நாஞ்சிலாரிடம் சொன்னேன். ' எது கெளக்கு. வாடே பேரப்பிள்ள போய் பாப்போம்'. என் மகனை அழைத்துக் கொண்டு வெயிலை நோக்கி நடந்தார்.

'வெயிலப் பாத்து எப்படி கண்டுபிடிப்பீங்க தாத்தா . . .'

'நெளல் எந்தப் பக்கம் விளுதோ, அத வச்சு தெசையை கண்டுபிடிச்சுரலாம். ஜாமெண்ட்ரி பாக்ஸ்ல உள்ள கம்பாஸ வச்சுகூட கண்டுபிடிக்கலாம் . . . .'

'அய்யோ அது கம்பாஸ் இல்ல, கேம்பஸ். . . என்ன தாத்தா இது கூட தெரியலே உங்களுக்கு . . .'

பிளாட்பார பெஞ்சில் அமர்ந்து தாத்தாவுக்கும் பேரனுக்குமான உரையாடலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு வலதுப் பக்கத்திலிருந்து தம்பி நடந்து வந்தான். அப்படியென்றால் அது கிழக்குதான் என்று நினைத்து கொண்டேன்.

ஊரெல்லாம் சுற்றுபவர்களைப் பார்த்தால் இன்றைக்கும் எனக்கு ஆச்சரியம்தான். நண்பர் எஸ்.ராமகிருஷ்ணன் இந்தியா முழுவதும் தனியாகவே சுற்றி அந்த அனுபவங்களை எழுதியுமிருக்கிறார். இது எப்படி அவரால் முடிந்தது என்று தெரியவில்லை. நண்பன் குஞ்சு தானே காரை ஓட்டிக் கொண்டு தமிழகம் முழுதும் சுற்றுவான். நான்தான் அவனுக்கு பக்கத்தில் உட்கார்ந்திருப்பேன். சிறுவயதிலிருந்து என்னுடனேயே வளர்ந்த அவனுக்கு மட்டும் எப்படி எல்லாத் திசைகளும் தெரிகிறது. இன்று வரை எனக்கு புரியாத புதிர் இது. எனக்கு திருநெல்வேலியிலேயே இன்னும் பல இடங்கள் தெரியாது. பெரும்பாலான திருநெல்வேலிக் காரர்களின் லெட்சணமும் இதுதான்.

எங்கள் வீட்டில் வேலை பார்த்து வந்த ரேவதி அக்காவின் தம்பி சங்கரன் என்கிற சங்காவுக்கு பேசத் தெரியாது. ஊமையில்லை. ஒரு காலை சாய்த்து நடப்பான். எல்லோருக்கும் எடுபிடி வேலைகள் செய்து வந்த சங்கா, உடம்பில் சட்டை அணிவதில்லை. ஒரு அழுக்குத் துண்டும், அதைவிட அழுக்கான வேட்டியும்தான் உடை. அவன் பேசுவது எங்களுக்கு மட்டுமே புரியும். எல்லோரையும் மாமா என்றழைப்பான். 'மாமா கூப்பாங்கோ' என்றால் மாமா கூப்பிடுகிறார்கள். 'மாமா சாப்பாங்கோ' என்றால் மாமா சாப்பிடுகிறார்கள். இரண்டு மூன்று தெருக்கள் தவிர திருநெல்வேலியிலேயே வேறு எந்த இடம் பற்றியும் அறிந்திராத சங்கா ஒரு நாள் திசை தப்பி காணாமல் போய்விட்டான். எங்கெங்கெல்லாமோ தேடினோம். போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்து வைத்தோம். ஒருவாரமாகியும் தகவல் இல்லை. சங்காவைத் தெரிந்த, ஆனால் அவனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசியிராதவர்கள் கூட சங்காவைத் தேட ஆரம்பித்தார்கள். பாளயங்கோட்டை தாண்டி ஏதோ ஒரு ஊருக்கு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுனராக இருந்த நெல்லையப்பன் அண்ணன் போயிருக்கும் போது, அவரை நோக்கி மாமா என்று ஒரு குரல் கேட்டிருக்கிறது. சங்காதான். சிரித்தபடி நின்றிருக்கிறான். பேச முடியாத சங்காவை சந்தேகித்து யார் யாரோவெல்லாம் அடித்திருந்திருக்கிறார்கள். நெல்லையப்பண்ணன் அழைத்து வந்து விட்டார். எங்கள் பகுதியே சங்காவை வரவேற்றது. ' எல சங்கா, அவன் கூப்பிட்டான் இவன் கூப்பிட்டான்னு எங்கேயும் போவக் கூடாது, என்னா?' சங்கா அதற்கு பிறகு எங்குமே செல்வதில்லை. அந்தப் பக்கத்திலேயே ஏதாவது கடைக்கு கிடைக்குப் போவதென்றால் போவான். அவ்வளவுதான்.

திசைகள் அறியா சங்காவுக்கும் எனக்கும் உள்ள ஒரே வேற்றுமை, எனக்கு பேசத் தெரியும். அவ்வளவே. சென்னைக்கு நான் வந்து பதினைந்து ஆண்டுகள் ஆகிறது. ஆனால் இன்னமும் எனக்கு சாலிகிராமத்தை விட்டால் ஒரு இடமும் தெரியாது. சமயங்களில் சாலிகிராமமும். வாத்தியார் பாலுமகேந்திராவும் இங்கேயே இருக்கிறார். நான் சார்ந்திருக்கும் சினிமாத் தொழிலுக்குத் தேவையான சகல இடங்களும் இங்கேயே. பிறகு எனக்கென்ன கவலை? இடங்களைப் பற்றிய தேடலோ, ஆர்வமோ அடிப்படையிலேயே இல்லாமல் போனதுதான் இதற்கு காரணம். எத்தனையோ சிக்கல்களை இந்தக் குறைபாட்டினால் வாழ்க்கையில் சந்தித்து வந்தாலும், இன்னமும் மனதை மாற்ற முடியவில்லை. சின்ன வயதில் எனது உறவினர்களான வாசன், சுந்தர் அண்ணன், நான் மூவரும் திருநெல்வேலிக்கு பக்கத்தில் உள்ள புகழ் பெற்ற கிருஷ்ணாபுரத்துக்கு செல்லத் திட்டமிட்டோம். சிற்பக் கலையை ரசிக்கும் எங்களின் உயர்ந்த கலாமனதைப் புரிந்து கொண்டு மகிழ்ந்து வீட்டில் சாப்பாடு கட்டிக் கொடுத்தார்கள். பஸ்ஸில் போவதாகப் பொய் சொல்லிவிட்டு, வீட்டிற்குத் தெரியாமல் ஆளுக்கொரு சைக்கிளில் கிளம்பினோம். பாதி வழியிலேயே வாசன் மனதில் ஓர் யோசனை. அப்படியே திருச்செந்தூர் சென்று வந்தால் என்ன?

சுந்தர் அண்ணனும் அதை வழிமொழிய, அவர்கள் இருக்கும் தைரியத்தில் நானும் தலையாட்டினேன். அவர்களைப் பின்தொடர்ந்து சைக்கிளை மிதிக்க மிதிக்க திருச்செந்தூர் வருவேனா என்றது. பஸ் வேகமாகப் போனாலே திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு செல்ல ஒரு மணிநேரமாகும். ஆனாலும் விடாது சைக்கிளை மிதித்தோம். மதிய உணவு நேரத்துக்கு முன்பே மூவருக்கும் பசித்துவிட்டது. சாப்பாட்டைப் பிரித்து அள்ளித் தின்று முடித்தோம். தூக்கம் வருவது போல் இருந்தது. சுந்தர் அண்ணன் திட்டினான். ‘அறிவிருக்கா, இப்போவே லேட்டாயிட்டு. வா வா. ஏறி மிதி’. தெரியாத்தனமாக மாட்டிக் கொண்டோமே என்று தோன்றியது. காலெல்லாம் வலித்தது. திருச்செந்தூரை நெருங்கவே சாயங்காலமானது. அம்மன்புரம் என்னும் ஊர் வந்தது. அதற்கு அடுத்த ஊர் திருச்செந்தூர்தான். தாகம் தாங்க முடியவில்லை. பதநீர் குடிக்கும் யோசனையை வாசன் சொன்னான். ரோட்டை விட்டு இறக்கத்தில் ஒரு மரத்தடியில் சின்ன ஓலைக் குடிசையொன்றைப் பார்த்து விட்டே இதை சொல்லியிருக்கிறான். சைக்கிள்களை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கி அந்தக் குடிசையை நோக்கிச் சென்றோம். மடித்த பனை ஓலையில் கொடுக்காமல் பிளாஸ்டிக் தம்ளரில் பதநீர் கொடுத்தார்கள். வாசனும், சுந்தர் அண்ணனும் இரண்டிரண்டு கிளாஸ்கள் அடிக்க, நான் மட்டும் சளைத்தவனா. அந்த சுவை பிடிக்கவில்லையென்றாலும் நானும் இரண்டு கிளாஸ்கள் பதநீர் குடித்தேன்.

அம்மன்புரத்தில் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து மிதிக்கத் தொடங்கினோம். எனக்கு லேசாக தலை சுற்றியது. அதற்குப் பிறகு சைக்கிள்தான் எங்களைக் கூட்டிக் கொண்டு போனது. அடுத்த ஊரான திருச்செந்தூர் வர ரொம்ப நாளானது. ஒருமாதிரியாக செந்திலாண்டவன் சன்னிதியை அடைந்தோம். சட்டையைக் கிழற்றிவிட்டு சன்னிதானம் முன் நின்றோம். எனக்கு இரண்டு முருகர்கள் தெரிந்தனர். ஷண்முகர் சன்னிதியில் வள்ளி தெய்வானையுடன் இருக்கும் முருகனை தரிசிக்கப் போன போது அங்கு அவர்கள் ஒரு கூட்டமாக ஒரு பெரிய கூட்டுக்குடும்பமாகக் காட்சியளித்தனர். கோயிலை விட்டு வெளியே வந்து கடற்கரையில் விழுந்தோம். கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது. கிருஷ்ணாபுரச் சிலைகள் நடனமாடின. சைக்கிள்கள் பறந்தன. முருகன் கையில் வேலோடு எங்களுடன் ஓலைக்குடிசையில் அமர்ந்து பிளாஸ்டிக் தம்ளரில் பதநீர் குடித்தார். கடலலை எழும்பி வந்து என்னை மூடும் போது, சுந்தர் அண்ணன் என்னை உலுக்கினான். ‘கெளம்புவோம். இருட்டிரும்.’ அருகிலேயே மல்லாந்து கிடந்த வாசனை எழுப்பினோம். தள்ளாடி எழுந்து நின்று குனிந்து கடற்கரையில் தேடிப் பொறுக்கி தன் வேட்டியை எடுத்து உதறிக் கட்டிக் கொண்டான்.

இருளோடு மனதில் பயமும் சேர்ந்து கொள்ள சைக்கிளை மிதிக்கத் தொடங்கினோம். ஸ்ரீவைகுண்டமருகே வயலிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த விவசாயக் கூட்டத்தின் மேல், இருட்டுக்குள் கண் தெரியாமல் மோதி விழுந்தோம். நாங்கள் எழுந்திருக்க உதவிய அவர்கள், பித்தளைத் தூக்குச் சட்டியிலிருந்து தண்ணீர் சாய்த்துக் கொடுத்து, ‘டைனமோ வேற இல்லியே. பாத்துப் போங்க தம்பிகளா’ என்றனர். இரவு பதினோரு மணிக்கு மேல் வீட்டுக்குத் திரும்பினோம். தெருவே எங்கள் வீட்டுவாசலில் காத்திருந்தது. போலீஸிலும் புகார் கொடுத்திருந்தனர். பெரியவர்கள் யாரும் ஒன்றுமே சொல்லவில்லை. ‘மொதல்ல போய் சாப்பிடுங்கலே’. நல்ல பையனாக நடந்து கொள்வதாக எண்ணி



பெரியப்பாவிடம், ‘ இந்தாங்க பெரியப்பா. திருச்செந்தூர் பிரசாதம்’ என்று திருநீற்றுப் பொட்டலத்தை

நீட்டினேன். அதுவரை அமைதியாக இருந்த அனைவரும் எங்கள் மூவரையும் சோபாவில் உட்கார வைத்து செருப்பால் அடித்தார்கள்.

சென்னையில் என்னை எங்கு அனுப்புவதாக இருந்தாலும் வாத்தியார் பாலுமகேந்திரா என்னிடம் இடம் குறித்து எதுவும் சொல்ல மாட்டார். ‘அகிலா, உன் புள்ள பாட்டு பாடிக்கிட்டு எங்கேயாவது போயிருவான். டிரைவரை கூப்பிடு’ என்பார், தன் மனைவியிடம். தற்சமயம் நான் எங்காவது செல்வதாக இருந்தால் உதவி இயக்குனர் பத்மன், எனது தம்பி சிவா, நண்பர்கள் செழியன், எஸ்.ராமகிருஷ்ணன், ஆர்தர் வில்சன், மனோ என்று யாராவது வந்து என்னை கூட்டிச் செல்ல வேண்டும். நண்பர் ஜெயமோகனுக்கு பாவலர் விருது வழங்கும் விழாவிற்கு சாலிகிராமத்திலிருந்து நானும், எழுத்தாளரும், நண்பருமான வ.ஸ்ரீநிவாசன் அவர்களும் அவரது ஸ்கூட்டரில் கிளம்பினோம். ஸ்ரீநிவாசன் ஸார் தன்னுடைய மாருதி காரை ஸ்கூட்டர் என்றுதான் சொல்வார். வண்டியில் ஏறும்போதே, ‘சுகா, உங்களுக்கு பாரதீய வித்யா பவன் எங்கேயிருக்குன்னு தெரியுந்தானே?’ என்று வினவினார். திசைகள் விஷயத்தில் ஸ்ரீனி ஸார் எனக்கு தாத்தா. கவிஞர் ரவிசுப்ரமணியம் எனக்கு அனுப்பியிருந்த அழைப்பிதழை கையிலேயே வைத்திருந்தேன். அதைப் பார்த்து ‘மையிலாப்பூர்லதான் சார் இருக்கு’ என்றேன். முன் தினமே எஸ்.ராமகிருஷ்ணன், மயிலாப்பூர் கற்பகம் விலாஸின் எதிர்ப் புறத்தில் பாரதீய வித்யாபவன் இருக்கும் விஷயம் சொல்லியிருந்தார். மயிலாப்பூருக்கு எப்படி போவது என்று ஸ்ரீனிவாசன் ஸார் கேட்டு விடுவாரோ என்று பயந்த படியே உட்கார்ந்திருந்தேன். கேட்டாலும் எனக்கு தெரியாது என்னும் விவரம் என்னை விடவும் ஸ்ரீனி ஸாருக்கு தெரியுமென்பதால் அவர் என்னிடம் கேட்கவில்லை. பெரும் போராட்டத்துக்குப் பின் மைலாப்பூரை அடைந்தோம். பாரதீய வித்யா பவனும் கண்ணில் சிக்கிவிட்டது. பெருமிதம் தாங்க முடியவில்லை ஸ்ரீனி ஸாருக்கு. உடனேயே காரை விட்டு இறங்காமல் தனக்குத் தானே சிரித்து மகிழ்ந்து கொண்டார். சாலிகிராமத்திலிருந்து கிளம்பி என்னைப் போன்ற திசையறியா ஒருவனை துணைக்கு வைத்துக் கொண்டு வெற்றிகரமாக மைலாப்பூர் வந்தடைந்த நிறைவு அவர் முகத்தில். இதற்காகவெல்லாம் பாவலர் விருது கொடுக்க மாட்டார்கள் என்று சொல்ல நினைத்தேன். திரும்பி அவருடன்தான் நான் வீட்டுக்குப் போக வேண்டும் என்பதால் அமைதி காத்தேன்.

‘உண்மையாவே பெரிய விஷயம் சுகா. யார்க்கிட்டேயும் கேக்காம வந்துட்டோமில்லையா?’ என்றார்.

‘ஆமாம் சார். பெரிய விஷயம்தான்’ என்றேன்.

அன்று முழுக்க இந்த சாதனையை நினைத்தே மகிழ்ச்சியாக இருந்த வ.ஸ்ரீனிவாசன் அவர்கள் சுத்தமான சென்னைக்காரர்.

**சில்வர் டோன்ஸ்**



கோயில் விசேஷங்களுக்கும் மெல்லிசைக் கச்சேரிகளுக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை. அது நெல்லையப்பர் கோயில் ஆனித் திருவிழாவாக இருந்தாலும் சரி, புட்டாரத்தி அம்மன் கோயில் கொடை விழாவாக இருந்தாலும் சரி. கண்டிப்பாக அந்தந்தக் கோயிலின் வசதிக்கேற்ப சிறிய, பெரிய மெல்லிசைக் குழுக்களை அமர்த்திக் கச்சேரி நடத்துவார்கள். பிட் நோட்டிஸிலிருந்து போஸ்டர்கள் வரை கச்சேரி பற்றிய அறிவிப்பை ஊரெங்கும் காணலாம். ‘ மக்கா இன்னைக்கு ராத்திரி லாலா சத்திர முக்குல பிரபாகரன் கச்சேரி இருக்கு.சீக்கிரமே போகணும்.மறந்துராதே’ என்று இளைஞர்கள் காலையிலேயே பேசிக் கொள்வார்கள். வெளியூராட்கள் யாராவது இவர்கள் பேசுவதைக் கேட்க நேர்ந்தால் இவர்கள் பாடகர்களோ, இசைக் கருவி ஏதேனும் இசைப்பவர்களோ என்று சந்தேகம் வந்துவிடும். கச்சேரி கேட்பதற்குத்தான் அவர்கள் இவ்வளவு உற்சாகமாகக் காலையிலேயே தயாராகிறார்கள் என்கிற விவரம் தெரிய வாய்ப்பில்லை.

பிடரி வரை புரளும் ஹிப்பி முடியும், ஏழு வயதுச் சிறுவன் போய் மறைந்து கொள்ளும் அளவுக்கு பெரிதான பெல்பாட்டம் பேண்டும், கையில் வெள்ளி காப்பும், முகம் பார்க்கும் சிறிய கண்ணாடி சைஸிலுள்ள ஸ்டைலான அகல ஃப்ரேம் மூக்குக் கண்ணாடியும் அணிந்த இசைக் கலைஞர்களின்

‘சில்வர் டோன்ஸ்’ குழுவின் கச்சேரி நான் சின்னப் பையனாக இருக்கும் போது நெல்லைப் பகுதியில் மிகவும் பிரபலம்.பாடகர்கள்,வாத்தியக் கலைஞர்கள் என்று எத்தனையோ பேர் அந்த குழுவில் இருந்தாலும் அந்த வயதுக்கேயுரிய ரசனையோடு எனக்கு டிரம் வாசிப்பவரின் மீதுதான் காதல். அகலக் காலர் வைத்த சட்டைப் பித்தான்களைத் திறந்து விட்டுக் கழுத்துச் சங்கிலி தெரிய ஸ்டைலாகக் குச்சிகளைச் சுழற்றியபடியே அவர் டிரம் வாசிக்கும்போது டிரம்முடன் சேர்ந்து என் மனமும் அதிரும். கச்சேரி முடியும் வரை அவரை மட்டுமே பார்த்துக் கொண்டிருப்பேன். தன் வீட்டு மொட்டை மாடியிலிருந்து வெங்கடாசலம் கம்பவுண்டரின் மகளான சிவகாமி அக்காவும் டிரம்மரை மட்டுமே ரசித்து பார்த்துக் கொண்டிருந்ததை ஒரு முறை கவனித்தேன்.

அனேகமாக எல்லாக் கச்சேரிகளும் இரவு பத்து மணிக்கு மேல்தான் ஆரம்பமாகும் என்றாலும் எட்டு மணியிலிருந்தே கச்சேரிக்கான களை கட்டிவிடும். கச்சேரிக்கு முன்னுள்ள நிகழ்ச்சி பெரும்பாலும் உள்ளூர் சொற்பொழிவாளரின் பிரசங்கமாகத்தான் இருக்கும். நேரம் ஆக ஆக கச்சேரிக்கான ரசிகர்களின் கூட்டம் அதிகமாகி, சாலை நிறைய ஆட்கள் மெல்ல மெல்ல வந்து உட்காரத் துவங்குவர். கடைகளின், வீடுகளின் மாடிகள், அடைத்த கடைகளின் நடைப்படிகளென எங்கும் ஜனத்திரள் குவியும்.பிரசங்கி அதிகப்பிரசங்கியாகும் பரிதாபத் தருணமிது. தன் பேச்சுக்காகக் கூடும் கூட்டமல்ல இது என்னும் உண்மையை அவர் மனம் நம்ப மறுக்கும். பேச்சின் கடைசியில் துருப்புச் சீட்டாக தான் மனப்பாடம் பண்ணி வைத்திருக்கும் ஒரே பட்டினத்தார் பாட்டைச் சத்தமாக ஒப்பிக்கத் தொடங்குவார். முடிக்கச் சொல்லி தட்டப்படும் கைத்தட்டல்களைப் பட்டினத்தாருக்குக் கிடைத்த பாராட்டாக எண்ணிக் கொள்வார். தொடர்ந்து பேசும் ஆசையில் சோடா குடிக்கும் சொற்ப நேர இடைவெளியில் மூளைக்குள்ளிருந்து ஒவ்வொன்றாக நினைவுபடுத்திப் பார்ப்பார். ஆயத்தமாகும் நோக்கோடு கைத்துண்டால் வாயைத் துடைத்துத் தொண்டையைச் செருமித் தொடைகளை அசைத்து சரியாக உட்கார்ந்து மீண்டும் தொடங்க முற்படும் போது விழாக் கமிட்டியாரின் துண்டுச் சீட்டு போகும். அதை அவர் பொருட்படுத்தாமல் போனால் ஜவுளிக்கடை மகமைச் சங்கத்தின் பொருளாளர் மாரியப்பன் செட்டியார் மேடையேறி, “இத்துணை நேரம் நம்மையெல்லாம் தன் அற்புதமான சொற்பொழிவினால் மகிழ்வித்த . .” நாவல்டி ரெடிமேட்ஸின் மஞ்சள் சால்வையை போர்த்தி முடித்து வைப்பார். இதற்குள் வாத்தியங்களை ஒவ்வொன்றாக மேடைக்கு ஏற்றத் தொடங்கியிருப்பர்.

ஒன்பது மணிக்கு குழுவினர் வந்து மேடையேறிவிட்டாலும் குறைந்தது ஒரு மணி நேரத்துக்காவது அவர்களின் ‘ஹலோ ச்செக் ச்செக்’ மற்றும் ‘டம் டிம் டப் டிப் டங்க் டிங்க்’ என்னும் ஆயத்த சத்தங்களை நாம் பொறுமையுடன் கேட்டே தீர வேண்டும். ‘எல, இவனுவொ லொட்டு லொட்டுன்னு தட்டிக்கிட்டேதான் இருப்பானுவோ.அதுக்குள்ள வீட்டுக்கு போய் சாப்பிட்டுட்டு வந்துருவொம்.அம்மை ஏசிக்கிட்டு உக்காந்திருப்பா. அவளும் கச்சேரிக்கு வரணும்லா’ என்று நண்பனிடம் சொல்வான் கடை அடைத்து களைத்து வரும் ஆரெம்கேவி ஊழியன் சொக்கலிங்கம். அதிகம் வெளியே வராத சில சமைந்த பெண்கள், பீடி சுற்றும் சீனியர் பெண்மணிகளின் பாதுகாப்பில் அங்கங்கு கூட்டத்தில் கலந்திருப்பர். இவர்களுக்காகவே சில இளைஞர்கள் சில விடலைப் பையன்களைக் கூட்டி வருவார்கள்.அவ்வப்போது அப்படி அழைத்து வந்த சிறுவனிடம், ‘லெச்சுமணா, அந்தா இருக்கா பாரு பத்மா அக்கா. அவ என்ன பாக்காளான்னு பாத்து சொல்லணும் என்னா’. பயல் கச்சேரி சுவாரஸ்யத்தில் பத்மா அக்கா இருக்கும் இடத்தை மறந்து பின் இவன் கேட்கும் போதெல்லாம் குத்துமதிப்பாக பத்மா இருக்கும் திசை பார்த்து ‘ஆமா அத்தான். உன்னையேதான் பாக்கா’ என்று சொல்லிவிட்டுப் பாட்டில் கவனம் செலுத்துவான். லெச்சுமணன் பத்மா அக்காவின் சித்தியைப் பார்த்துச் சொல்லியிருக்கிற விவரம் தெரியாத இந்த மடையன் ஒரு மாதிரி மயக்கத்தில் இருக்கும் போது, அடுத்த பாடலாக சொல்லி வைத்த மாதிரி, ‘ராசாவே உன்ன காணாத நெஞ்சு காத்தாடி போலாடுது’ என்று பாடகி பாடுவாள். மிதப்பில் தன்னை மறந்து பனாமா ஃபில்டர் பற்ற வைத்துப் புகைத்து வளையம் விட்டுக் கச்சேரி கேட்டுக் கொண்டிருக்கும் தன் பெரியப்பாவிடமோ, மாமாவிடமோ வசமாக மாட்டிக் கொள்வான்.

மெல்லிசைக் கச்சேரிகளுக்கென்றே சில பாடல்கள் உள்ளன. இதயக்கனியில் உள்ள ‘இன்பமே’ அதில் ஒன்று. அந்த பாடலின் ஆரம்பத்தில் பல்லவிக்குமுன் வரும் பின்னணி இசையின் புல்லாங்குழல் பகுதியைப் பெரும்பாலான கச்சேரிகளில் குழலை உதறுவதிலேயே கவனமாக நேரங்கடத்தி அந்த பிட் தன்னை கடந்து சென்ற பின் ஒரு போலி பதற்றத்தை முகத்தில் காட்டுவார் ஃப்ளூட்டிஸ்ட் சிவபெருமாள். அதற்குள் அதை ஆர்மோனியத்தில் வாசித்திருப்பார் தியாகராஜன் மாமா. அது அவருக்குப் பழகிப் போனது என்று குழுவில் உள்ள மற்றவர்கள் சொல்வார்கள். இதே போன்று டிரம் வாசிக்கிறேன் பேர்வழி என்று சொல்லிக் கொண்டு பல காலம் எங்களை ஏமாற்றிய சங்கரசுப்புவும் ‘நினைத்தாலே இனிக்கும்’ படப் பாடலான ‘நம்ம ஊர் சிங்காரி’யின் முக்கிய டிரம் பிட்டை வாசிப்பதில் இருந்து தப்புவதற்காக குச்சியைச் சுழற்றித் தவற விட்டுப் பின் அவசர அவசரமாக ஓடி வந்து எடுப்பான்.

அதற்குள் பாட்டு முடிந்துவிடும். அதைப் பிடிப்பதற்கென்றே குழு உறுப்பினர்கள் ரகசியமாக ஆள் நியமித்தனர். பிறகு அதிலிருந்தும் தப்பிக்க லாவகமாக ஆளில்லாத இடம் பார்த்துக் குச்சியை வீச ஆரம்பித்துவிட்டான்.

பாடகிகள் அழகிகளாக இருப்பது அபூர்வம். அப்படி ஒரு அழகான பாடகியை ஒரு கச்சேரியில் பார்க்க நேர்ந்தது. ஆளைப் போலவே குரலும் கச்சிதம். சரியான ஸ்ருதியில் பாடினாள். ஒவ்வொரு பாட்டுக்கு இடையேயும் அவளையும், அவள் குரலையும் அளவாகப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தான், கச்சேரி நடத்தும் தலைமைப் பாடகன். பணிவுக்குக் காரணம் பாடகியின் தந்தையும் மேடையில் இருந்ததுதான். பேச்சினூடே அவரையும் புகழத் தவறவில்லை. அவரும் ஒரு முன்னாள் பாடகர் என்பது அவன் பேச்சில் தெரிய வந்தது. 'மைக்' மோகனுக்குக் கொஞ்சம் வயதான மாதிரி தோற்றத்தில் இருந்தார். மகள் நன்றாக பாடுவதை ரசித்தபடியே அமர்ந்திருந்த அவரைப் பாட வருமாறு அழைத்த போதெல்லாம் மெல்லிய புன்முறுவலுடன் மறுத்தபடியே இருந்தார்.'எங்களுக்கெல்லாம் குருநாதர்' என்றெல்லாம் தலைமைப் பாடகன் புகழ்ந்துபார்த்தும் அவர் மசிவதாக இல்லை. கண்ணியமான அவரது தோற்றமே அவர் ஒரு நிறைகுடம் என்பதை உணர்த்தியது. என்னருகில் நின்று கொண்டிருந்த குஞ்சு 'ரொம்பல்லா பந்தா பண்ணுதாரு' என்றான். கச்சேரி முடியும்போது அவர் மகளே அவரை பாட அழைத்தபோது அவரால் தட்ட முடியவில்லை. எழுந்து வந்தார். 'வந்துட்டாரு பாத்தியா' என்றேன் குஞ்சுவிடம். எங்கள் இருவருக்கும் பிடித்த பாடலான இளையராஜாவின் 'நான் தேடும் செவ்வந்திப் பூவிது' பாடலைத் தந்தையும், மகளும் பாடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. கொஞ்சம் நகர்ந்து மேடைக்கருகில் சென்றோம். பாடலின் முதலில் வரும் ராஜாவின் ஹிந்தோள ஆலாபனையைத் தொடங்கினார், வயதான மோகன். சற்றும் எதிர்பார்க்காத வேளையில் யாரோ தன் வெற்றுக்காலைப் பூட்ஸ் காலால் மிதித்த மாதிரியான ஓர் அலறல். விருட்டெனக் கூட்டத்தில் புகுந்து குஞ்சு வெளியே ஓடினான். ஓர் இடைவெளிவிட்டு அடுத்த ஆலாபனை. பட்ட காலிலேயே பட்டது இன்னொரு பூட்ஸ் மிதி. இப்போது நான் ஓடினேன்.

அண்ணன் அன்னபூரணன் ஒரு கல்லூரி பேராசிரியர். தபலா வாசிப்பான். அவனது கல்லூரியின் ஆண்டு விழாவிற்காக ஒரு மெல்லிசைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்த அந்தக் குழுவில் எந்த நேரமும் சண்டை உருவாகும் பதற்ற நிலை. காரணம் அந்த கல்லூரியிலுள்ள பேராசிரியர்களும், மாணவர்களும் நம் ஜெயமோகனும் இயல் விருதும் போல அவ்வளவு இணக்கமானவர்கள். பத்து பாடல்கள் பாடுவதாகத் திட்டம். கவனமாக இரு பிரிவினருக்கும் தலா ஐந்து என பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு விழாவன்று கச்சேரி துவங்குவதற்குச் சில நிமிடங்கள் இருக்கும்போது மாணவர்கள் தரப்பிலிருந்து கூடுதலாக ஒரு மாணவனுக்கு பாடுவதற்கு வாய்ப்புக் கேட்டு வலியுறுத்தியிருக்கிறார்கள். நேரம் இல்லையேப்பா என்று சொன்னதை அவர்கள் கேட்கத் தயாராகயில்லை.

விடுங்க ஸார், பாடிட்டு போறான்ஸபிறகு அதுக்கு வேற ஸ்டிரைக் பண்ணுவானுவொ.. பிரின்ஸி நம்மள புடிச்சு வாட்டுவாருஸ

ஓகே. ஓகே. . .எப்பா நல்லா பாடுவானா . . மொதல்ல ஆள் யாருன்னு சொல்லுங்க . . .

இவன்தான் ஸார் . . . . எல அவன எங்கெ . . . எல ஏய் . . . நாராயணா . . . முன்னால வால . . .

எப்பிடிடே நாராயணா . . .பாடூருவியா . . .

எங்க ஊர் திருனாம் போதுல்லாம் நான்தான் ஸார் வருசா வருசம் பாடுவேன் . . . வேணா போட்டோ காட்டட்டா . ..

ஃபோட்டோவில் அவன் குரல் எப்படிக் கேட்கும் என்பதைக் கேட்க நினைத்து நமச்சிவாயம் ஸார் தவிர்த்துக் கொண்டார்.

சரிடே . . .என்ன பாட்டு பாடப் போறே?

ஒருதலை ராகத்துல நான் ஒரு ராசியில்லா . . . .

ஸார் . . . ப்ரின்ஸிபால் கூப்பிடுதாரு . . .

*சரி சரி . . . . எல்லாரும் ரெடியாகுங்க . . . .*

*'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே' பாடி ஐயப்பன் ஸார் கச்சேரியைத் துவக்கியிருக்கிறார். அண்ணன் தபலா, நடராஜன் ஸார் கீபோர்ட், மாணவன் சுதர்ஸன் புல்லாங்குழல் என கச்சேரி சூடுபிடிக்கத் துவங்கியிருக்கிறது.*

*அடுத்து இளங்கலை வணிகவியல் இரண்டாமாண்டு மாணவர் சு. நாராயணன் பாடுவார் . . .*

*விசில் சத்தத்தில் பொறுமை இழந்து ப்ரின்சிபால் திரும்பிப் பார்த்து முறைக்க. . . . பாட்டு ஆரம்பமாகியிருக்கிறது. பல்லவிக்கு முன்னுள்ள வயலின் இசையை நடராஜன் ஸார் கீபோர்டிலேயே சமாளித்து வாசித்து வந்து கார்ட்ஸ் கொடுத்து நிறுத்த, நாராயணன் பாடத் துவங்கியிருக்கிறான்.*

*நா . .ஆ . . .ன்*

*ஒ . .ரு*

*ரா . . .ஆ . . .ஆ . . . .சியில்லா . . . . . . .*

*ராஜூ . .ஊ . . . .ஊ . . . ஸ*

*முதல் கல் மாணவர் பகுதியிலிருந்துதான் வந்திருக்கிறது.*

***கயத்தாறு***

*கயத்தாற்றில் கீரைப் பாத்திகள் நிறைய உண்டு. அங்கு விளையும் கீரை, விற்பனைக்காக திருநெல்வேலிக்கு வந்து மூடை, மூடையாக குவியும். கயத்தாற்றிலிருந்து லாரியில் ஏற்றப்பட்ட கீரை மூடைகள் திருநெல்வேலி ஜங்ஷனில் கொண்டு வந்து இறக்கிப் போடப்படும். பின் அவற்றை தலைச்சுமையாகத் தூக்கிக் கொண்டு கீரைக்காரர்கள் என்று சொல்லப்படும் கீரை வியாபாரிகள் திருநெல்வேலி டவுணுக்கு வருவார்கள். முதல் நாள் இரவு வரும் மூடைகளிலுள்ள கீரை, மறுநாள் அதிகாலை தண்ணீர் தெளித்து சுத்தப்படுத்தப்பட்டு திருநெல்வேலித் தெருக்களில் விற்பனை செய்யப்படும்.*

*கயத்தாற்றுக் கீரைக்காரர்கள் சேசுமணி, ராஜேந்திரன், சேசுராஜ் போன்றவர்கள் டவுணில் ஆளாளுக்கு தெருக்களைப் பிரித்துக் கொண்டு கீரை விற்று வந்தார்கள். இவர்களில் ஒருவர் விற்கும் பகுதிக்கு மற்றவர் செல்வதில்லை. அப்படி ஒரு எழுதப்படாத ஒப்பந்தம் அவர்களுக்கிடையே இருந்தது. இம்மூவரும் இரவு கீரை மூடையுடன் தங்குமிடம், அம்மன் சன்னதியிலுள்ள எங்கள் வீடு. முப்பது பேர் படுக்கக்கூடிய விஸ்தாரத்துடன் உள்ள வாசல்வெளியில் இவர்கள் படுப்பதற்கு வசதியாகக் குளிர்ச்சிக்காக தரை முழுதும் தண்ணீர் ஊற்றி வைத்திருப்போம். அவர்கள் வந்து படுக்கும் நேரம் தரை நன்கு காய்ந்திருக்கும்.*

*இம்மூவரில் சேசுமணி வயதில் பெரியவர். உடம்பெல்லாம் முடியாக, குட்டையாக இருப்பார். கருத்த முகத்தில் மெலிதான பென்ஸில் மீசை உற்றுப் பார்த்தால்தான் தெரியும். ரஜினிகாந்தின் தீவிர ரசிகரான ராஜேந்திரன் சேசுமணிக்கு இளையவர். ஆரம்பகால ரஜினிகாந்தின் ஹேர்ஸ்டைலுடைய ராஜேந்திரன், அவ்வப்போது தலையை சிலுப்பி தன் தலைமுடியை சரி செய்து கொள்வார். அவருக்கும் இளையவனான சேசுராஜ் எங்கள் தோழன். கழுத்தில் சிலுவை டாலரும், கையில் மேரிமாதா உருவம் பொறித்த பிளாஸ்டிக் மோதிரமும் அணிந்திருப்பான். 'தும்' என்று கீரை மூடைகளைக் கீழே போடும் சத்தம், இந்தக் கீரைக்காரர்களின் வருகையை எங்களுக்கு தெரிவிக்கும்.*

*ராஜேந்திரனும், சேசுராஜும் முன்னதாகவே வந்து விடுவார்கள். அகல கேரியர் வைத்த லோடு சைக்கிளில் கீரை மூடையை கட்டி ஓட்டி வருவர். சேசுமணி தாமதமாகவே வருவார். தலைச்சுமையாக மூடையைச் சுமந்து கொண்டு ஜங்க்ஷனிலிருந்து டவுண் வரை வியர்வையில் குளித்தபடி வந்து சேர்வார்.*

*'என்னடே, இன்னைக்கு நேரமாயிட்டு?' என்று கேட்கும் ஆச்சிக்கு, 'ராலிக்காரன் கொஞ்சம் சொணக்கிட்டான்' என்று பதில் சொல்லிக் கொண்டே துண்டால் உடம்பு, முகமெல்லாம் துடைத்தபடி தரையில் உட்காருவார் சேசுமணி. (அவர் ராலி என்று சொல்வது லாரியை). லாரிக்காரன் மீது சேசுமணி*

வீண்பழி போடுகிறார் என்பது ஆச்சிக்குத் தெரியும். கூடவே சேசுமணிக்கு சைக்கிள் ஓட்டத் தெரியாது என்ற விஷயமும் தெரியும். ஆனால் கேட்க மாட்டாள். தன் பக்கத்திலேயே வைத்திருக்கும் செம்புத் தண்ணீரை எடுத்து கொடுப்பாள்.
கொஞ்ச நேரம் ஆச்சியிடம் ஊர் மற்றும் குடும்பக்கதைகள் பேசிக்கொண்டிருப்பார் சேசுமணி. ராஜேந்திரனும், சேசுராஜும் என்னையும், என் தம்பியையும் அவர்களுடன் சேர்த்துக் கொண்டு கபடியும், கண்ணைக்கட்டியும் விளையாடுவார்கள். ஆடிக் களைத்த பின் சாப்பிட உட்காருவார்கள். அவர்கள் கொண்டு வந்த சோற்றுக்கு எங்கள் வீட்டு அடுக்களையிலிருந்து அவர்கள் கேட்காமலேயே தொடுகறியும், குழம்பும் வரும். துணியில் சுற்றி வைத்திருக்கும் சோற்றுப் பொட்டலத்தை அவர்கள் பிரிக்கும் போது துணி கிழிவது போன்ற சத்தம் கேட்கும். ஆனால் கிழியாது. அருகில் கிடக்கும் கீரை மூடைகளிலிருந்து மண்ணும், இலையும் கலந்த ஒரு வாசனை பரவ, பல இரவுகளில் எங்கள் இரவுச் சாப்பாடு அவர்களுடனே கழிந்திருக்கிறது.
ஞாயிற்றுக் கிழமை போக கடைசி வெள்ளிக்கிழமை மற்றும் அமாவாசையன்று கீரைக்காரர்கள் வருவதில்லை. நாள், கிழமைகளை அவற்றை கடைப்பிடிக்கும் திருநெல்வேலிக்காரர்களை விட கீரைக்காரர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்.

'எம்மா, வார பொதன்கெளமதானெ அம்மாசி? கொஞ்சம் கேலண்டர் பாத்து சொல்லுங்களேன்.'

காலண்டரில் மிகச்சரியாக புதன் கிழமையன்று அமாவாசை என்று வட்டக்கறுப்புக்குறி போடப்பட்டிருக்கும். ஞாயிற்றுக் கிழமை சர்ச்சுக்குப் போகவேண்டுமென்பதால் அன்றைக்கு அவர்கள் விற்பனைக்கு வருவதில்லை.

ஆச்சி காலத்துக்குப் பிறகும் கீரைக்காரர்கள் எங்கள் வீட்டில் கொண்டு வந்து மூட்டைகளைப் போட்டுத் தங்கிக் கொண்டுதானிருந்தார்கள். தனது வருமானத்தில் சொற்பத் தொகையை சேசுமணி அவ்வப்போது அம்மாவிடம் கொடுத்து வருவார். வருடத்துக்கு ஒருமுறை வரும் மாதா கோயில் திருவிழாவையொட்டி ஜவுளி எடுப்பதற்காகவே இந்த சேமிப்பு. கயத்தாற்றிலிருந்து அவரது மனைவியும், மகனும் வருவார்கள். ஆரெம்கேவியில் போய் துணி எடுத்துவிட்டு அம்மாவிடம் கொண்டு வந்து காட்டிவிட்டே பஸ் ஏறுவார்கள். கரும்பச்சை, ரத்தச்சிவப்பு போன்ற வண்ணங்களிலேயே உடைகளைத் தேர்வு செய்வார்கள்.

'நீங்களே சொல்லுங்கம்மா. போன திருளாக்குத்தானெ மாம்பளக்கலர் சட்ட எடுத்து குடுத்தோம். இந்த வருசமும் அதையே கேக்கான். இந்த திக் ரோஸ்கலர் அவனுக்கு வேண்டாமாம். இப்பல்லாம் பிள்ளைய இந்த மாதிரிதான் போடுது. மூதிக்கு புரிய மாட்டெங்கு'.
மூக்கின் பாதியை மறைத்து மூக்குத்தியணிந்திருக்கும் சேசுமணியின் மனைவி சொல்வார். சேசுமணிக்கு டிரவுசர், சட்டையணிந்தால் எப்படி இருப்பாரோ, அதே சாயலில் உள்ள பெரிய காதுகளையுடைய அவரது மகன் கலங்கிய கண்களுடன் அம்மா முன் உட்கார்ந்திருப்பான்.

'பிஸ்கட் திங்கியாலெ?

குனிந்த தலை நிமிராமல் 'வேண்டாம்' என்ற தலையசைப்பு.

'பாக்கெட் முளுசும் ஒனக்குத்தான்'.

அம்மாவிடமிருந்து பிஸ்கட் பாக்கெட்டை வாங்கும் போதே அவன் கண்ணீர் மறைந்திருக்கும். பிஸ்கட் தின்னும் போது சிரிப்பை அடக்க முயல்வான். மாதா கோயில் திருவிழாவின் போது யார் நடித்த படம் போடுவது என்பது குறித்த சண்டை ராஜேந்திரனுக்கும், சேசுராஜுக்கும் ஆரம்பமாகிவிடும். ரஜினி ரசிகரான ராஜேந்திரனுடன், சிவாஜி ரசிகனான சேசுராஜ் மல்லுக்கு நிற்பான்.

'வருசா வருசம் எங்கள் தங்க ராஜாவே பாத்திக்கிட்டிருக்க முடியுமா? இந்த வருசம் யார் என்ன சொன்னாலும் சரி. நான் போட்ட சவால்தான்.'

ராஜேந்திரன் அடித்துச் சொல்வார். வயதில் சிறியவனான சேசுராஜால் ஒன்றும் செய்ய முடியாது.

'எனக்கென்ன. ஜிவாஜி படம் பாக்குறதுக்கு எங்களுக்கு கொட்டாயியா இல்ல. ராயல் டாக்கீஸ்ல இப்பொ கூட சங்கிலி போட்டிருக்கான். போய் பாத்துக்கிடுவென். எக்கேடும் கெட்டு போங்க.'

*சிவாஜியை ஜிவாஜி என்றே உச்சரிக்கும் சேசுராஜ் சும்மா உட்கார்ந்திருக்கும் போது அவரது படப்பாடல்களைப் பாடி மகிழ்வான். மகிழ்ச்சி அவனுக்கு மட்டுமே. காரணம், அவன் பாடும் வரிகள். உதாரணம்*
*'மலர்களைப் போல் தங்கை உறங்குகிறாள் - அண்ணன்*
*வாளவைப்பான் என்று பறந்து சென்றாள்.'*

*சேசுமணிக்கு பெரிதாக சினிமாவில் ஆர்வமில்லை. அவரது ஆர்வமெல்லாம் கோயில் கொடைகளில்தான். அதுவும் இரவு விடியவிடிய நடைபெறும் கும்பக்குட (கரகாட்டம்) ஆட்டத்தில் அவருக்கு தீராத மோகம். திருநெல்வேலி டவுணில் எந்தப்பகுதியில் கோயில் கொடையென்றாலும் அன்று இரவு அங்கு சேசுமணியைப் பார்க்கலாம். அது ராஜேந்திரனோ, சேசுராஜோ கீரை விற்கும் பகுதியாக இருந்தாலும் கும்பக்குடத்துக்காக சேசுமணி ஒப்பந்தத்தை மீறுவார். ஒருநாள் தேரடிப்பக்கம் ஒரு கும்பக்குட ஆட்டம் நடந்து கொண்டிருந்தது. பலமாக விசிலடித்தபடி கும்பக்குடக்காரியுடன் மேல்துண்டை இறுக்கமாகத் தலையில் தலைப்பாகையாகக் கட்டியிருந்த ஒரு மனிதர் ஆடிக் கொண்டிருந்ததை தூரத்திலிருந்தே நானும், கணேசண்ணனும் பார்த்துவிட்டோம். கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் சென்று நின்று கொண்டோம். ஆட்டத்தின் நடுவே தற்செயலாக நாங்கள் நிற்பதை கவனித்துவிட்ட சேசுமணி, சிக்கென்று தன் இரண்டு கண்களையும் மூடிக் கொண்டார். ஆட்டம் மட்டும் நிற்கவேயில்லை.*

*அம்மா இருக்கும் வரை கீரைக்காரர்களுக்கும், எங்களுக்குமான உறவு தொடர்ந்து வந்தது. பிறகு மெல்ல குறைந்து பின் சுத்தமாக தொடர்பே இல்லாமல் போய்விட்டது. மதுரையிலிருந்து காரில் திருநெல்வேலி செல்லும் போது வலது பக்கத்தில் கம்பீரமாக நிற்கும் நடிகர் திலகம் சாயலிலுள்ள கட்டபொம்மன் சிலையைப் பார்க்கும் போது கயத்தாறு வந்து விட்டது தெரியவரும். புதிதாக திருநெல்வேலிக்கு வருபவர்கள் காரை நிறுத்தி கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நிறுவப்பட்டிருக்கும் அவரது சிலையை அண்ணாந்து பார்த்தபடி சிறிது நேரம் அங்கு செலவிடுவார்கள். ஒருசிலர் புகைப்படம் எடுத்துக் கொள்வதுமுண்டு. 'வீரபாண்டிய கட்டபொம்மன்' திரைப்படம் மூலம் தாங்கள் அறிந்து வைத்திருக்கிற கட்டபொம்மனைப் பற்றிய நினைவுகளில் மூழ்கிப் போவார்கள். அவர்களுக்கெல்லாம் கயத்தாறென்றால் நிச்சயமாகக் கட்டபொம்மன்தான் நினைவுக்கு வருவார். எங்களுக்கு கீரைக்காரர்கள்.*

***பிரமநாயகத் தாத்தாவும், விஜயலலிதாவும்***
*சென்னைக்கு வந்த புதிதில் சாலிகிராமத்தின் காந்தி நகரில் குடியேறினேன். அம்மா அப்போது இருந்தாள். எங்கள் வீட்டோடு இன்று வரை இருந்து சமையல் வேலைகளை கவனித்துக் கொள்ளும் செல்வராஜ் அண்ணன் பரபரப்பாக சாமான்களை இறக்கி அடுக்க, வீட்டை சுத்தப்படுத்த, பால் காய்ச்ச என்று அம்மாவுக்கு ஒத்தாசையாக அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார். நான் வழக்கம் போல சும்மா இருந்தேன். அந்த பெரிய வீட்டின் வாசலில் ஒரு நீள சிமெண்ட் பெஞ்ச் உண்டு. அதில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது, கேட்டைத் திறந்து கொண்டு ஒரு பெரியவர் 'உள்ள வரலாமா?' என்று கேட்டபடி நின்று கொண்டிருந்தார். யாரென்றே தெரியாத அவரை 'வாங்க வாங்க' என்றழைத்தபடி எழுந்து நின்றேன். அடிப்பிரதட்சணம் செய்வது போல் நடந்து என்னருகில் வந்தார். உடல்நலமில்லாதவர் என்பது தெரிந்து, 'உக்காருங்க' என்றேன். 'நாராயண நாராயண' என்று முனகியபடி சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்.*

*நெற்றியில் காய்ந்து அழிந்திருந்த திருநீறு திட்டு திட்டாக ஒட்டியிருந்தது. முழுக்கைச் சட்டையை மடிக்காமல் பட்டன் போடாமல் விட்டிருந்தார். கறுப்பாக, குட்டையாக இருந்தார். முகத்திலும், தலையிலும் ஒருசில முடிகளே. களைப்பாக மூச்சு வாங்கியபடி இருந்ததால் அவராகப் பேசட்டும் என்று அமைதியாக அவரைப் பார்த்தபடி இருந்தேன். கொஞ்ச நேரம் குனிந்தே அமர்ந்திருந்தவர், சற்று நேர ஆசுவாசத்துக்குப் பின் நிமிர்ந்து என் முகம் பார்த்து சிரித்தபடி பேச ஆரம்பித்தார். 'அம்மன் சன்னதி பெரிய வீட்டுப் பிள்ளதான நீங்க? எனக்கும் திருநவேலிதான்' என்றார். சென்னைக்கு வந்த முதல் நாளே ஊர்க்காரரைப் பார்த்துவிட்ட சந்தோஷத்துடன் ஆச்சரியமும் சேர்ந்து கொள்ள 'ஆமா. ஒங்களுக்கு எங்கெ?' என்றேன்.*

*'ஒங்க எதுத்த வீட்டுல தெய்வநாயகம் இருக்காம்லா, ஐ ஓ பில வேல பாக்கானெ?'*

*'ஆமா. தெய்வு மாமா.'*

*'அவன் அம்மை எனக்கு மதினில்லா?'*

'யாரு, ஆரம்புளியாச்சியா?'

'அவளேதான்'.

நான் அவரை தாத்தா என்றழைக்க ஆரம்பித்தேன். அன்றிலிருந்து பிரமநாயகத் தாத்தாவை நான் பார்க்காத நாளே இல்லை என்று சொல்லலாம். இரவு வெகுநேரம் கழித்து வந்து படுத்திருக்கும் என்னை காலையில் பிரமநாயகத் தாத்தாவின்'நாராயண நாராயண'தான் எழுப்பும். எழுந்து வாசலுக்கு வருவேன். சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்திருப்பவர், என்னைப் பார்த்ததும் 'ராத்திரி ரொம்ப லேட்டாயிட்டோ?' என்றபடி படித்துக் கொண்டிருந்த பேப்பரை ஒழுங்காக மடித்து என்னிடம் நீட்டுவார்.

பிரமநாயகத் தாத்தாவின் மனைவி இளம் வயதிலேயே காலமாகிவிட்டார். அவர்களுக்கு இரண்டு மகன்கள். இதய நோயாளியான தாத்தாவுக்கு அதன் பிறகு இரண்டாம் மனைவியின் மூலம் மேலும் நான்கு மக்கட்செல்வங்கள். காந்தி நகரில் என் வீட்டுக்குப் பக்கத்து வீடான தாத்தாவின் வீடு எப்போதும் ஜேஜேயென்று இருக்கும். சமையலும், சாப்பாடும் எந்நேரமும் நடந்து கொண்டேயிருக்கும். அதிகாலையிலேயே எழுந்து குளித்து முழுகி, பூஜை பண்ணி சாப்பிட்டுவிட்டு தாத்தா நேரே என் வீட்டுக்கு வந்து சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொள்வார்.

பிரமநாயகத் தாத்தாவுக்கு என்மீது ஊர்ப்பாசம் போக நான் சினிமாவில் இருப்பதால் ஒரு தனியீர்ப்பு இருந்தது. அது குறித்து என்னிடம் அதிகம் பேசுவதில்லையென்றாலும் நான் உணரும் வண்ணம் மனதுக்குள் பேசிக் கொண்டுதான் இருந்தார். தாத்தாவுக்கு சினிமா மீதும், அதைவிட அதிகமாக சினிமா நடிகைகள் மீதும் இருக்கும் அலாதி பிரியம் மெல்ல தெரிய வந்தது. அந்த பிரியம் அவர் தகப்பனாரிடமிருந்து அவருக்கு வந்திருக்க வேண்டும்.

'நம்ம ஊர் அரசுப் பொருட்காட்சில ஒரு மட்டம் நாடகம் போட்டான். மெட்ராஸ்ல இருந்து ஒரு நடிகை வந்து நடிச்சா. அந்த காலத்துல ஒண்ணு ரெண்டு சினிமால நடிச்ச பொம்பள அவ. எங்கப்பா அவள எங்க வீட்டுக்கே கூட்டிட்டு வந்துட்டாரு'.

குதூகலத்துடன் சொன்னார்.

'ஆனா நான் யாரையும் பெருசா பாத்ததில்ல. ஒரே ஒருமட்டம் நம்ம கீள்ப் பாலத்துல கே.பி.சுந்தராம்பாள் அம்மா கார்ல வந்தா. முன்னாடி கொண்டு போயி சைக்கிள விட்டுட்டேன்'.

'அப்புறம் என்னாச்சு?' கொஞ்சம் பதற்றத்துடன் கேட்டேன்.

'அந்த அம்மா கண்ணாடிய எறக்குனா. நீங்க எனக்கு திருநாறு பூசுனாத்தான் இந்த எடத்த விட்டு போவேன்னுட்டென். சிரிச்சுக்கிட்டெ பூசிவிட்டா.'

பெரிதாகச் சாதித்து விட்ட களிப்பில் சொன்னார்.

காந்தி நகரில் நாங்கள் குடியிருந்த தெருவுக்கு அருகேதான் நடிகை விஜயலலிதாவின் வீடும் இருந்தது. போகும் போதும், வரும் போதும் அந்த வீட்டைக் கடந்துதான் நான் செல்வேன். பெரும்பாலும் வாசலிலோ, பால்கனியிலோ விஜயலலிதா நிற்பார். தாத்தாவின் மகன்களும் வேலைக்குப் போகும் போதும் வரும்போதும் அவரைப் பார்த்தபடி வந்ததை தன் தந்தையிடம் சொல்வார்கள்.

'எனக்குத்தான்டே குடுத்தே வைக்கலெ'.

வருத்தத்துடன் ஒரு நாள் தன் இளைய மகனிடம் தாத்தா சொன்னது என் காதுகளில் விழுந்தது.

'பைபாசுக்கு முன்னாடின்னா நானே நடந்து போயிருவேன். ஒங்க யாரையும் எதிர்பார்க்க மாட்டேன்.'

குரலில் கடுமையான துயரம் சொட்டியது.

ஒரு நாள் அவசர அவசரமாக பிரமநாயகத் தாத்தாவின் மகன்களில் ஒருவன் சைக்கிளை ஏறி மிதித்தபடி வந்தான். 'எப்பா, சீக்கிரம் வாங்க. அந்த அம்மா அவங்க வீட்டு வாசல்ல நிக்காங்க' என்றான்

முச்சிரைத்தபடி. வாயெல்லாம் பல்லாக தாத்தா தத்தித் தத்திச் சென்று சைக்கிளின் கேரியரில் உட்கார்ந்து கொண்டார். மகன் சைக்கிளை கவனமாக மிதிக்க, கொஞ்சம் வெட்கமும், சிரிப்புமாக பின்னால் கெட்டியாகப் பிடித்தபடி உட்கார்ந்திருந்த தாத்தா என்னைப் பார்த்து 'போய் பாத்துட்டு வந்திருதேன்' என்றபடி போனார்.
போன வேகத்தில் வாடிய முகத்துடன் தந்தையும், மகனுமாகத் திரும்பினர். இவர்கள் செல்வதற்குள் விஜயலலிதா வீட்டுக்குள் போய் விட்டாராம். 'இன்னைக்கில்லேன்னா இன்னோரு நாள் பாத்துக்கிட்டா போச்சு'. தன்னைத் தானே தாத்தா சமாதானப் படுத்திக் கொண்டார். ஒரு நாள் யதார்த்தமாக தாத்தாவிடம்,'எலந்த பளம் பாட்டுக்கு அந்த அம்மாதானெ ஆடுவாங்க' என்று கேட்டுத் தொலைத்து விட்டேன். தாத்தாவின் முகம் அவ்வளவு கடுமையாக மாறியதை அன்றுதான் பார்த்தேன்.

'என்ன பேரப்பிள்ள, வெவரமில்லாம கேக்கியெ? அது விஜயநிர்மலால்லா?' என்றார். 'என்னத்த நீங்க சினிமால இருக்கியெ? சே . . .' என்று அலுத்துக் கொண்டார். தாத்தாவின் முகபாவத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி ஃபெயிலான மாதிரி கூனிக் குறுகிப் போனேன்.

இத்தனை சினிமா ஆசை இருந்தாலும் தாத்தா கண்டிப்பான சில விருப்பு வெறுப்புகள் கொண்டிருந்தார். குறிப்பாக மைக்கேல் ஜாக்ஸன், பிரபுதேவா இருவரது நடனத்தையும் குடும்பப் பெண்கள் பார்த்தால் கெட்டுப் போவார்கள் என்று அவர் உறுதியாக நம்பினார். அதற்கு அவர் ஒரு அந்தரங்கமான காரணமும் சொன்னார்.

'மேற்படிய பிடிச்சுக்கிட்டெ ஆடுதானுவெ. இத பொம்பளப் பிள்ளைய பாக்கலாமா. நீங்களே சொல்லுங்க'.

நேரடியாக தாத்தா என்னிடம் என் தொழில் சார்ந்த விஷயங்களைப் பற்றி விசாரிக்காமல் கவனமாக இருந்தார். ஒரே ஒருமுறை அவரது கட்டுப்பாட்டையும் மீறி 'குஷ்புவ நீங்க நேர்ல பாத்திருக்கேளா?' என்று கேட்டிருக்கிறார். அவ்வளவுதான்.

நான் காந்தி நகருக்கு வந்த ஒன்றிரண்டு வருடங்களிலேயே தாத்தா குடும்பச் சூழல் காரணமாக திருநெல்வேலிக்குப் போய்விட்டார். போகும் போது என் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கினார். எனக்குமே அது தாங்க முடியாத பிரிவாகத்தான் இருந்தது. திருநெல்வேலிக்கு அருகில் மேலப்பாளையத்தில் வாடகை குறைவாக உள்ள ஒரு பழைய பெரிய வீட்டில் குடியேறிவிட்டதாகக் கடிதம் எழுதினார். எப்படியும் இரண்டு வாரங்களுக்கு ஒரு கடிதம் வரும். ஒவ்வொரு கடிதத்திலும் மறக்காமல் என்னை மேலப்பாளையத்துக்கு அழைப்பார்.

தாத்தா மேலப்பாளையத்துக்குப் போய் சுமார் ஆறேழு மாதங்கள் கழித்து நான் திருநெல்வேலிக்குச் சென்றிருந்தேன். எதிர் வீட்டு தெய்வுமாமா மூலம் தாத்தாவுக்கு விஷயம் தெரிந்து விட்டது. தன் மகனை சைக்கிளில் அனுப்பினார். 'நாளைக்கு மத்தியானம் ஒங்களுக்கு நம்ம வீட்லதான் சாப்பாடு. அப்பா சொல்லிட்டு வரச் சொன்னா'. கண்டிப்பாக வருவதாகச் சொல்லி அனுப்பிட்டு மறுநாள் மேலப்பாளையம் சென்றேன். கார் அவர்களின் தெருவுக்குள் நுழையும் போதே தாத்தா வாசலில் ஒரு நாற்காலி போட்டு உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கார் நெருங்கி வரும் போது தன் மனைவியின் தோளைப் பிடித்துக் கொண்டு தாத்தா எழுந்து நின்றார். முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க காரிலிருந்து இறங்கிய என் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார்.

அமாவாசை தர்ப்பணம் பண்ணும் போது சாப்பிடுவது மாதிரியான விசேஷச் சாப்பாடு ஏற்பாடாயிருந்தது. பெரிய வாழை இலை போட்டு உப்பு வைத்து, அதன் மீது சுண்டவத்தல் பரப்பி, பொரியல், துவரம், அவியல், மசியல், கூட்டு என முறையான பரிமாற்று முறை. பருப்பு வைக்கும் போது கவனமாக அதை இலையின் வலது கீழ்ப்பகுதியில்தான் வைக்கிறார்களா என்று தாத்தா உன்னிப்பாகப் பார்த்தார். சோறும், அப்பளமும் வைத்த பின் 'பாயாசமும், வடையும் யாரு வப்பா?' என்று கொஞ்சம் உயர்த்தின குரலில் கேட்டார். அவை வந்த பின் தாத்தா நைவேத்தியம் பண்ணி முடிக்கும் வரை பொறுமையாக சோற்றில் கைவைக்காமல் காத்திருந்தேன்.

சாப்பிட்டு முடித்தவுடன் தாத்தா விட்டுவிடவில்லை. 'போலாம் போலாம். இப்ப என்ன அவசரம்? இரிங்க' என்றபடி நாற்காலியில் என்னை அமரச் செய்தார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். பேச்சு விஜயலலிதாவின் பக்கம் திரும்பியது.

*‘அத ஏன் கேக்கிய பேரப் பிள்ள! நம்ம கோமு இருக்காம்லா? நீங்க பாத்திருப்பிய! வளுக்கத் தல.’*

*‘ஆமாமா. டைட்டா சட்ட பொடுவானெ. அவன்தானெ?’*

*‘அவனேதான். கரெக்டா சொல்லிட்டேளே. அவனும் அன்னைக்கு எலந்த பளம் பாட்டுக்கு ஆடுனது விஜயலலிதாங்காம்யா. இவனுவளையெல்லாம் வச்சுக்கிட்டு என்ன பண்ண? சவத்து மூதியெ’.*

*நான் பதிலே சொல்லவில்லை. நான் காந்தி நகரிலிருந்து சாலிகிராமத்துக்குள்ளேயே வேறு பகுதிக்குச் சென்று விட்டதை மட்டும் தாத்தாவிடம் சொன்னேன். தாத்தாவுக்கு ரொம்பவும் வருத்தமாகப் போய்விட்டது.*

*‘நல்ல ஏரியால்லாய்யா அது? அத விட்டுட்டு ஏன் போனியெ?’*

*‘நீங்க இங்கெ வந்துடேள்லா? அதான்.’*

*சமாளிக்கும் விதமாகச் சொன்னேன். தாத்தா இதற்கு ஏதும் சொல்லவில்லை. ஆனால் மனதுக்குள் ‘நான் வந்துட்டா என்ன? அதான் விஜயலலிதா இருக்காளெ?’ என்று சொன்னார் என்றுதான் நினைக்கிறேன். அவர் முகம் அப்படித்தான் இருந்தது. இது நடந்து பத்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இப்போது நான் மீண்டும் காந்தி நகருக்கே வந்துவிட்டேன். அதுவும் விஜயலலிதாவின் வீட்டுக்கு அருகிலேயே. நைட்டி அணிந்தபடி வாசலிலும், பால்கனியிலும் நின்று கொண்டு தன் வீட்டுக்கு எதிரே துணிகளை இஸ்திரி போடுபவரிடம் பேச்சு கொடுத்து கொண்டிருக்கும் விஜயலலிதாவை தினமும் பார்க்கிறேன். பிரமநாயகத் தாத்தா இருந்திருந்தால் சொல்லியிருக்கலாம். சந்தோஷப்பட்டிருப்பார்.*